# சிறந்த சொற்பொழிவுகள்



தொகுப்பு: உவமைக்கவிஞர் சுரதா

# சிறந்த சொற்பொழிவுகள்

தொகுப்பு:

**உவமைக் கவிஞர் சுரதா**

திருக்குறள் பதிப்பகம்
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078.

முதற் பதிப்பு : டிசம்பர், 2004

விலை ரூ. **60**

ஒளி அச்சு

*கனக துர்கா அச்சகம், சென்னை - 96.*

அச்சிட்டோர்

*ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 24.*

# செவி நுகர் கனிகள்

பதிப்புரை ....... 5

1. இந்தியாவும் ஏடுகளும் (1901) 9
சேலம் பகடாலு நரசிம்மலு நாயுடு

2. மதுரை தமிழ்ச் சங்கம் (1901) 23
சேலம் பகடாலு நரசிம்மலு நாயுடு

3. நாடகம் (1920) 34
எஸ்.எஸ். அருணகிரிநாத முதலியார்

4. வடலூரர் சமரச சன்மார்க்க மகாநாடு (28. 1. 1926) 40
கா. நமச்சிவாய முதலியார்

5. 3-வது தமிழ்ச்சித்த வைத்திய மாநாடு
- கண்காட்சிகள் (19. 4. 1927) 47
எம். டி. சுப்பிரமணிய முதலியார்

6. மாயவரம் இளைஞர் மாநாடு (8. 5. 1927) 55
சனக சங்கர கண்ணப்பர்

7. கல்விமுறையும் பெண்கள் சீர்திருத்தமும் 60
(13. 3. 1928) வ. உ. சிதம்பரம்பிள்ளை

8. அகத்தியர் வெறும் கட்டுக் கதை (2. 2. 1929) 65
கா. நமசிவாய முதலியார்

9. சாலியர் மகாஜன சங்க 2-வது மாநாடு 70
(8. 7. 1929) திரு. எ. நாயனார்

10. கதரின் பெருமை (1930, மே) 76
அருள்மணி பிச்சமுத்து


11. தமிழ்மாகாண முதலாவது சங்கீத மகாநாடு 88
(12. 5. 1930) கே.பொன்னையா

12. பொன்னையா பிள்ளை 92

13. தமிழ்மொழி (31. 5. 1941) 94
தவத்திரு ஞானியாரடிகள்

14. பெரியார் (1947) 101
பட்டுக்கோட்டை அழகிரிசாமி

15. மூடநம்பிக்கை (23. 1. 1971) 110
ஜி. டி. நாயுடு (கோ. துரைசாமி நாயுடு)



# பதிப்புரை

மனிதகுலம் பண்படுத்தப்பட வேண்டிய வளர்ச்சிக் குரியதாகவே நீடித்து வருகிறது. நமது நாட்டுக்கு அறிவுறுத்தலும் வழிநடத்தலும் மிக மிகத் தேவைப்படுகிறது.

ஆன்மிகத்தில் உயர்ந்த நாடு என்கிறார்கள். சான்றோர்கள் தோன்றிய புண்ணிய பூமி என்கிறார்கள். ஆனால் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இங்கே என்ன புதுமைகள், நன்மைகள் தோன்றியுள்ளன? என்ன பயன்கள் உருவாகி யிருக்கின்றன?

மதங்கள், சமயங்கள் பல தோன்றியுள்ளன. அவற்றால் வேற்றுமைகளும், பகைமையும் உருவானதே உண்மைநிலை.

புண்ணிய பூமியின் வரலாறு மனம் பூரிக்கும் வகையிலா அமைந்திருக்கிறது?

இங்கு வெளிநாட்டோர் தொடர்ந்து வந்து வந்து கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். எண்ணற்ற கோயில்களை இடித்து அழித்துள்ளனர். பல கொடுமைகள் நிகழலாயின. கோயிலில் இருந்தவாறு பூசையும் படையலும் திருவிழாப் பெருமைகளும் பெற்றுவந்த தெய்வங்கள் நமக்குச் செய்ததென்ன? தீமைகளைத் தடுத்தனவா? கொடியோரைத் தண்டித்தனவா? பக்தி செய்த அப்பாவி மக்களை அடைக்கலம் தந்து காப்பாற்றிய துண்டா? கோயில் கட்டிய மன்னர்கள் நிம்மதியாய் வாழ்ந்ததுண்டா? அவர்களது மக்கட் செல்வங்கள் பெருமையோடு வாழ்ந்ததுண்டா? கும்பிட்ட குடிமக்களாவது குறையின்றி வாழ்ந்தார்களா?

வாணிகம் செய்ய வந்தவ ரெல்லாரும் இங்கே இருந்த பக்தர்களான மக்களை ஏமாற்றினர்; எதிர்த்தபோது அழித்தனர்; பணிய வைத்தனர். இந்தியர் அனைவரும் அந்நியருக்கு அடிமைப்பட்டனர். அதைத் தடுக்க வில்லையே! பகைவரை, வஞ்சகரை, கொடியவரை,

வெளிநாட்டவரைத் தடுத்து அடித்துத் துரத்தாத கடவுள்களைப் பற்றி இன்றுவரை இந்நாட்டு மக்கள் சிந்திக்கக்கூட இல்லையே!

வேதங்கள், புராணங்கள், மந்திரங்கள், தீர்த்தங்கள், சாமியார்கள் எனும் பலப்பல தெய்வீகத் தன்மைகள் இந்நாட்டைச் காப்பாற்றியதாக ஒரு சான்று காட்ட முடியுமா?

அறியாமை, அச்சம், மூடபக்தி முதலியவற்றிலேயே மூழ்கிக் கிடக்கும் ஒரு நாடு இந்தியாவைப் போல் வேறெங்கேனும் காணப்படுமா? நம் மக்களை முன்னேற்ற வேண்டும் என்று எந்தக் கடவுளாவது வழிகாட்டி உதவியிருக்கிறதா? மக்களில் சிந்தனையாளர்கள் சிலர் மட்டும் பொதுநலம் பற்றிக் கவலைப் படுகிறார்கள்; அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்; பாடுபடுகிறார்கள். படையல் கொள்ளும் தெய்வங்கள் மக்களுக்கு நன்றி காட்டி உதவ முன் வருவதேயில்லை. இதுவே காலங்காலமாய்க் கண்டு வரும் உண்மை நிலை.

மனிதர்கள் உழைத்து உழைத்து முன்னேறி வருகிறார்கள். முயற்சியால், ஊக்கத்தால் பல பயன்களை உருவாக்கி வளர்ச்சிநிலை பெற்று வருகிறார்கள். இதுதான் நடைமுறை; உண்மைநிலை.

தாழ்ந்து கிடந்த நமது நாட்டில் நாலா புறங்களிலும் காலந்தோறும் நல்லோர் சிலர் தோன்றி, மக்களுக்கு நல்லுரை கூறி நல்வழிகாட்டி வருவதை வரலாறு காட்டுகிறது.

கடவுள், சமயம், மேலுலகம் பற்றியெல்லாம் பலப் பல விளக்கங்கள் கூறுவோர் எண்ணிக்கையே இங்கு அதிகம். கற்பனை உலகில், மயக்கம் தரும் போதனைகள் கூறுவதே நம்நாட்டில் அதிகம். அதனால் ஒரு பயனும் இதுவரை தோன்றக் காணோம்.

கல்வி, உழைப்பு, தொழில், பண்பாடு, முன்னேற்றம், புதுமை பற்றியெல்லாம் கூறுவோர் சிலராகவே இருப்பர். மனிதமேன்மை கருதி, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே முக்கிய தொண்டு ஆகும். அத்தகைய புதுமை காணும் முற்போக்குக் கருத்துகளை மக்களிடம் பரப்பி வந்த வரலாறு அறிய வேண்டும்; அறிந்து புத்துணர்வு பெற வேண்டும்; அதை உளங்கொண்டு அவ்வழியில் நடக்க முற்பட வேண்டும். இதுவே வளர்ச்சிக்குரியது; பயன் தருவது.

நம் தமிழகத்தில் 1901ஆம் ஆண்டுமுதல் பல சீர்த்திருத்தக் கருத்துகளை, முன்னேற்றச் சிந்தனைகளை, வாழ்வியல் பாடங்களைக் கூறிப் பாப்பிய வரலாறு மிக விரிந்ததாகும்; சிறந்ததாகும்.

இங்கே பதச்சோறாக நினைவூட்ட பதின்மூன்று பேர்களின் 15 சொற்பொழிவுகளை ஒரு புத்தக அளவில் தரப்படுகிறது. 1901 முதல் 1971 வரை அறிஞர் பெருமக்கள், பொதுமக்கள் முன் பெருஞ்சபைகளில் சொற்பொழிவு செய்துள்ளவற்றில் குறிப்பிடத்தக்க பதின்மூன்று அறிஞர்களின் சொற்பொழிவுக் கருத்துகளை ஒரு சேரப் படிக்கும் வாய்ப்பு இந்நூலால் கிடைக்கிறது. பதினைந்து நிகழ்வுகளின் கருத்துத் தொகுப்பு. இந்நூலால் மறைந்த பலரை மனத்தில் மீண்டும் புதுப்பிக்கும் வாய்ப்பு எனவும் கொள்ளலாம். புதிய இளைஞருலகம் பழமையான வரலாற்றை அறிய உதவும் நூல் இது.

'திராவிடன்' எனும் நீதிக்கட்சியின் ஏட்டில் பல சமயங்களில் வெளிப்பட்டவற்றை மிகக் கருத்தோடு சேர்த்து வைத்திருக்கும் சமூகப் பொறுப்புக்குரியவர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள். எழுபதாண்டுகளில் தேடிச் சேர்த்திருந்தவை இன்றைக்கும் பயன்படத் தக்கது என்பதால் அதனை நூலக்கி வெளிப்படுத்த விரும்பினார். அதை என்னிடம் தந்தார்; வெளியிடுங்கள் என்றார். மறைந்தும் வரலாற்றில் மறையாத மாபெரும் மனிதர்களின் சிந்தனைகளை மக்கட் சமுதாயம் மீண்டும் பெற்றுப் பயன்கொள்ளவேண்டும் என்பதே கவிஞரது பேரவா.

கடந்த நூற்றாண்டில் (1901-1971) புகழோடு வாழ்ந்த சாதனையாளர்களின் சொற்பொழிவுகளைப் படிக்கும்போது பலவித உணர்வுகளைக் கொள்கிறோம். அக்காலச் சமுதாய மக்கள் நிலையையும் தெரிந்துகொள்கிறோம். அன்றைய அறிஞர்களின் மொழிநடையையும் புரிந்துகொள்கிறோம். இவை மட்டுமா? ஆற்றாமையும் மனத்துன்பமும் கூட வந்து சேர்கின்றன.

ஒரு நூறாண்டு காலமாக மாறாமலே ஒரே நிலைமையில் இருக்கின்ற மந்தமான மக்கள் நிலையும் சமுதாயப் போக்கும் மனத்தில் துன்பத்தைத் தருகின்றன. 1901இல் மதுரையில் பாண்டித்துரைத் தேவர் தலைமையில் சேலம் பகடாலு நரசிம்மலு நாயடு என்பவர் நமது தமிழ்மொழியின் வளர்ச்சியற்ற தேக்கநிலையைப் பற்றி மனம் துடித்துப் பேசியுள்ளார். நூறாண்டுகளுக்குப் பின்னரும் அதே நிலையில் தமிழர் வாழ்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றோம். இப்படியொரு நாடா? இப்படியும் மக்கள் இருக்க முடியுமா? வேறெங்காவது இத்தகைய பிற்போக்கான - முடமான சமுதாயம் இருக்கிறதா என்றெல்லாம் எண்ணங்கள் பின்னலிட்டு நம்மைச் சோர்வடையச் செய்கின்றன.

'ஏ, தாழ்ந்த தமிழகமே!' என்றெண்ணி மிகச் சோர்வடைகிறோம்.

தாய் மொழியை மறந்த மக்கள் வேறெங்காவது இருப்பதாய்ச் சொல்ல முடியுமா? காணமுடியுமா? அந்தோ, அவலம்! படித்தோர் மன உணர்வும் மான உணர்வும் அற்று வேடந்தரித்து வாழும் நிலை வேறு எங்காகிலும் உண்டா?

இத்தகைய சிந்தனைகள் தோன்றத்தான் சுரதா அவர்கள் விரும்புகிறார் போலும்.

வயது முதிர்ச்சியால் சில குறிப்புகள் வரைய முடியாமல் வருந்துகிறார். அவரது ஆர்வ உணர்ச்சிக்கு நன்றி கூறுகிறோம்.

கடந்த நூற்றாண்டில் இருந்த நிலையே இப்போதும் உள்ளதை இளைஞருலகம் உணர்ந்து, எழுச்சிகொண்டு புதியநிலையை உருவாக்க இந்நூல் துணை புரியும் என்று நம்புகிறோம்.

அன்புடன்

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**

# 1. இந்தியாவும் ஏடுகளும்

## சேலம் பகடாலு *நரசிம்மலு நாயடு* (1901)

சென்னை இராஜதானியின் சபாநாயகரே! சபையார்களே! நிகழ்ந்த இரண்டு மூன்று நாட்களாக இந்த மஹாசபையில் நமது குடிகளுடைய குறைகளைப் பற்றிப் பேசினோம். அப்படிப் பேசிய சங்கதிகளை நமது கவர்ன்மெண்டாருக்கும் ஏனையோருக்கும் அறிவித்தாலன்றி நமது குறைகள் நீங்கா வல்லவா? அப்படி நமது குறைகளை ஏனையோருக்கு அறிவிப்பதற்கு இன்றியமையாத சாதனம் சமாசாரப் பத்திரிகைகளாம். ஆகவே அச்சமாசாரப் பத்திரிகைகளைப் பற்றி இப்போது சற்றுப் பேசுகிறேன்.

ஆங்கிலேய பாஷையில் நியூஸ் என்னும் பதத்திற்குச் சமாசாரம் என்று பொருளாம். அதாவது நியூஸ் என்னும் நான்கு அக்ஷரங்களுடைய பதத்தில் N என் – என்கிற எழுத்து நார்த்து – வடக்கு என்றும், E என்கிற எழுத்து ஈஸ்டு – கிழக்கு என்றும், W டப்பிலியூ என்கிற எழுத்து வெஸ்டு – மேற்கு என்றும், S எஸ் என்கிற எழுத்து சவுத் – தெற்கு என்றும் கூடியதனால் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும் நான்கு திசைகளில் நிகழும் நடவடிக்கைகள் அல்லது சமாசாரங்களை அறிவித்தல் என்பதைக் குறிப்பதாம்.

இப்படி நாலா பக்கங்களின் சமாசாரங்களைக் காட்டும் சமாசாரப் பத்திரிகை முதல் முதல் 1556இல் வெனிஸ் **(Venice)** பட்டணத்தில் பிரசுரம் செய்யப்பட்டும், 1622ஆம் வருஷம் இங்கிலண்டிலும், 1690இல் அமெரிக்கா பாஸ்டன் பட்டணத்திலும் பிரசுரம் செய்வித்ததாக உலக சரித்திரம் அறிவிக்கிறது. பிறகு 1699இல் எடின்பர்க்கு கெஜட்டும், 1705இல் கிரானிகளும் 1788இல் லண்டன் டைம்ஸ் **(Times)** என்கிற புகழ் பெற்ற பத்திரிகையும் பிரசுரிக்கப்பட்டன.

இதுகாலம் வரையில் சமாசாரப் பத்திரிகைகள் கேவலம் சாதாரண உலக விருத்தாந்த பத்திரிகைகளாக இருந்தன. ஆங்கிலேய நாட்டார் அவைகளை இப்போது நாலாவது சம்பத்தாக்கிக் **(The fourth estate)**

கொண்டு அதாவது அவர்கள் ராஜாங்கத்துக்கு (Sovereign) அரசன் முதலங்கமாகவும், (House of Lards) பிரபுக்கள் சபை இரண்டாம் அங்கமாகவும், (House of Commons) ஜனப் பிரதிநிதி சபை மூன்றாம் அங்கமாகவும், (Liberty of the Press) சமாசாரப் பத்திரிகை நான்காம் அங்கம் அல்லது சம்பத்தாகவும் கொண்டு சுதந்தர சுகமான குபேர சம்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த அருமையை அறிந்த ஆங்கிலேயர் தாம் குடிபுகும் இந்தியா முதலான தேசங்களிலும் இங்கிலீஷ்மன், ஸ்டேட்ஸ்மன், டெயிலி நியூஸ், டைம்ஸ் அப் இந்தியா, மெயில், டைம்ஸ் என்றாதி பெயர்களால் பல பத்திரிகைகளைப் பிரசுரம் செய்து வருகிறதை நமது சுதேசிகளும் பார்த்துத் தேசாபிமானத்தைக் கருதிச் சில பத்திரிகைகளைப் பதிப்பித்து வருகிறார்கள். அவற்றின் உண்மையான சரித்திரம் இன்னும் எழுதப்படாம லிருக்கினும் இந்தச் சுதேச சமாசாரப் பத்திரிகைகள் விஷயத்தில் சென்ற 35 வருஷங்களில் நான் கண்டதும் கேட்டதுமான சில விசேஷங்களைச் சங்கிரகமாகச் சொல்லத் துணிகின்றேன். செவிசாய்ப்பீர்களாக!

நமது இந்தியா தேசத்தில் முதல் முதல் சமாசாரப் பத்திரிகையை ஸ்தாபித்தவர் ஸ்ரீ இராஜா இராம மோஹனராயர். இந்த அவதார புருஷர் 1820இல் கிறிஸ்து மதத்தைக் கண்டித்து எழுதிய (The Final Appeal) அவரது கடைசி விண்ணப்பத்தை அக்காலத்தில் (Baptist Mission Press) பாப்டிஸ்டு மிஷனெரி அச்சு இயந்திரசாலையில் பதிக்க மாட்டோமென்று சொல்லிவிட்டபடியால், இந்துக்களுக்கென்று ஒரு அச்சு இயந்திர மில்லாக் குறைவை நீக்கக் கருதி கவர்ன்மெண்டாருடைய அனுமதியைப் பெற்று ஒரு அச்சு யந்திரத்தை ஸ்தாபித்துத் தமது விண்ணபத்தைப் பதித்தும், பிறகு (Brahminical Magazine) பிராமண மதபோத பத்திரிகையை முதல்முதல் ஸ்தாபித்து அதில் இந்து மதத்தின் பெருமையை உயர்த்தியும், இதர மதங்களிலுள்ள சில *குற்சித* கொள்கைகளைக் கண்டித்தும் எழுதிப் பிரசித்தமாக்கி வந்ததன்றியும், 1829 இல் (Sambanda Kowmadi) 'சம்பந்த கவுமதி' என்னும் பெயரால் வங்க பாஷையில் ஒரு மாதாந்திர சஞ்சிகையை ஸ்தாபித்தும், அதில் *சஹகமனாதி* விஷயங்களைப் பற்றியும், பொதுஜன *சமூஹ* நன்மைக் கேற்ற சங்கதிகளைப் பற்றியும் எழுதி ஜனங்களுக்கு ஞானத்தை விருத்தியாக்கி வந்தார்.

1823ஆம் வருஷம் கல்கத்தாவில் பிரசுரமான (Calcutta Journal) கல்கத்தா சஞ்சிகையில் கவர்ன்மெண்டாருடைய நடவடிக்கைகளைப் பற்றிக் கண்டித்து எழுதிய பத்திராதிபரை (Governor Adam) கவர்னர் ஆடாம் பிரபுவானவர் ஈவிரக்கமின்றி, அப் பத்திராதிபரை இந்நாட்டை

விட்டு ஓடிப்போகச் செய்து, அப், பத்திரிகைக்கு அகால மரணசாசன ஓலையை அனுப்பியபோது, அந்த ஸ்ரீராஜா ராம மோஹனராயர் கல்கத்தா சுப்ரீம் கோர்ட்டா ரவர்களுக்கும் இங்கிலண்ட் அரசருக்கும் விண்ணப்பங்களை எழுதியும், இந்துக்களாகிய இந் நாட்டாருக்கும் இங்கிலண்டின் குடிகளுக்கும் இருக்கும்படியான அச்சு இயந்திர பத்திரிகா சுதந்திரம் **(The Libertry of the Press in India)** கொடுக்க் வேண்டுமென்றும் பிரபல நியாயங்களைக் கொண்டு எழுதினார்.

இம்மட்டோ? இந்த மகானுபாவர் அந்த 1824ஆம் வருஷத்திலேயே நமது குடிகளுடைய கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றி இப்போது காங்கிரஸ் கான்பரன்ஸ் மஹாசபைகளில் என்னென்ன விஷயங்களைப் பற்றி முறையிடுகின்றோமோ இவைகளில் பெரும்பான்மையான விஷயங்களைப் பற்றிப் பத்திரிகைகளிலும் விண்ணப்பங்களிலும் எழுதி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அறிவித்ததன்றியில், இங்கிலண்டுக்கும் போய் அக்காலத்தில் அரசரிடம் முறையிட்டார்.

இந்தத் தேசாபிமானிக்கும் பிறகு மஹரிஷி தேவேந்திரநாத தாகூரவர்கள் முயற்சியினால் கல்கத்தாவில் **(The National Paper)** தத்துவ போதினி பத்திரிகைகள் 1843ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளில் பெரும்பாலும் வைதீக விஷயங்களும், ஜனசார சீர்த்திருத்தங்களும், சிறுபான்மை *இராஜகீய* விஷயங்களும் எழுதப்பட்டு வருகின்றன.

1831இல் கிருஷ்ண மோஹன பானர்ஜி என்பவர் **(Enquirer)** என்கொயரர் – விசாரிணி யென்னும் பெயரால் ஒரு பத்திரிகையை ஸ்தாபித்தார். இவர் கிறிஸ்துவ மதஸ்த ரானபடியால் அந்த மதத்தின் பெருமைகளைப் பற்றியே எழுதிவந்தார்.

1842ஆம் இல் இராம கோபால் கோஷ் என்னும் பிரபல பிரசங்கவாதி **(Speator)** ஸ்பெக்டேடர், தர்ப்பணம் என்னும் பத்திரிகைகளை ஸ்தாபித்துப் பெண்கள் வித்தை முதலான பொதுஜன உபயோகமான விஷயங்களைப் பற்றி எழுதிப் பதிப்பித்தார்.

1852ஆம் வருஷம் ஹரிஸ் சந்திர முகர்ஜி என்னும் சிறந்த தேசாபிமானி அக்காலத்தில் வெளியான **(Hindu Interlligencer)** இந்து இண்டலிஜென்சர் என்னும் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டு வந்து 1855–ஆம் வருஷம் ஸ்ரீ நாதகோஷ், கிருஷிச் சந்திர கோஷ், கேதன சந்திர கோஷ் என்பவர்களுக்குச் சொந்தமான **(The Hindu Patriot)** இந்து பாட்ரியட்டு என்னும் பத்திரிகையை விலைக்கு வாங்கிக் குடிகளுடைய

கஷ்டங்களைப் பற்றிப் பிரபல நியாயங்களோடு கவர்ன்மெண்டார் அறியும்படி எழுதி வந்தும், 1861ஆம் வருஷம் நீலி பயிரிடும் வெள்ளைக்கார வேளாண்மைக்காரர்களால் ஏழைக் குடிகளுக்கு உண்டான கஷ்டங்களை எழுதி வாதிட, அந்த வெள்ளைக்காரர்கள் இவர்மேல் கிரிமினல் சிவில் வழக்கிட அதே கவலையால் தமது 36–வது வயதில் இறந்தார். இவர் இறந்த பிறகு இவருடைய வீட்டையும் அச்சாபிஸ் பாட்ரியட்டு பத்திரிகைகளையும் இவருடைய எதிரிகள் ஏலம் போட்டு விற்றுவிட்டார்கள். இதனால் இவர் மனைவி முதலான பந்துக்கள் அதிகக் கஷ்டப்பட்டார்கள். அப்படி கஷ்டப்படினும் இவருடைய உண்மையான தேசாபிமானத்தை வங்கநாட்டார் இன்னும் கொண்டாடி வருகின்றனர்.

1861ஆம் வருஷம் கிருஷ்ணதாஸ் பால் என்பவர் மிஸ்டர் ஹரிஸ் சந்திர முகர்ஜியவர்களால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட (The Hindu Patriot) இந்து பாட்ரியட்டு என்னும் பத்திரிகையைப் புதிப்பித்துப் பிரபலமாக்கினார். இவர் 1857ஆம் வருஷம் முதல் (Morning Chronicle) மார்னிங்கு க்ரானிகல், (Citizen) சிடிஜன், (Monthly Magazine) மாதாந்திர சஞ்சிகை முதலானவைகளுக்கு எழுதிப் பிரபலமானவர். இவர் காலத்தில் பாட்ரியட் பத்திரிகை பிரபல ஸ்திதியைப் பெற்றது. இவருக்குப் பிறகு 1884ஆம் வருஷம் இராஜேந்திரலால் மித்திரர் அந்த இந்து பாட்ரியட் என்னும் பத்திரிகையை நடத்தி வந்தார். இந்த வித்துவ சிகாமணி 1856ஆம் வருஷம் பிபிதாத சங்கிரஹம் என்னும் சஞ்சிகையைப் படங்களுடன் சாஸ்திர சங்கதிகளை எழுதிப் பதிப்பித்த தன்றியில், சீமை இந்தியாப் பத்திரிகைகளுக்கு 2000 விஷயங்களையும் எழுதிப் பதிப்பித்த பிரபல பண்டிதர்.

இப்படி வங்கநாட்டில் வாராந்திரம் மாதாந்திரம் பிரசுரமாகும் பல பத்திரிகைகள் இருப்பினும், பிரதி தினமும் பிரசுரமாகும் பத்திரிகை இல்லாதது பெருங் குறைவாக இருந்தது. இக்குறைவை நீக்கக் கருதி 1861ஆம் வருஷம் ஸ்ரீ பிரம்மாநந்த யோகி கேசவ சந்திரசேனர், "இந்தியன் மிரர் (Indian Mirror) என்னும் பத்திரிகையை ஸ்தாபித்து அதைப் பிறகு தினசரிப் பத்திரிகையாக்கி, அதை நடத்தத் தமது தமயனார் குமாரர் நரேந்திரநாத் சேனரையும், மனமோஹன கோஷையும் நியமித்தும், பிறகு ஏழை ஜனங்களுக்காக ஒரு காசு விலையுள்ள "சுலப சமாசார்" என்னும் பத்திரிகையையும், வேதாந்த விஷயத்தைப் போதிக்க "தரும தத்துவம்" என்னும் பத்திரிகையையும் பெண்களுக்காக 'பாம போதினி' பத்திரிகையையும் ஸ்தாபித்து, தாமும் தமது தம்பி கிருஷ்ண பிஹாரி சேனும் எழுதி வந்தார்கள்.

இவர்கள் திவான் குடும்பத்தைச் சார்ந்த திரவியவான்களான படியால், பிறருடைய திரவிய உதவியை நாடாமல் இயன்றளவும் இந்த இண்டியன் மிரர் என்னும் பெரிய தாளான தினசரிப் பத்திரிகையையும் வேறு வைதிகாதி பத்திரிகைகளையும் கிரமமாக நடத்தி வருகிறார்கள். 1866ஆம் வருஷம் ஸ்ரீலஸ்ரீ கோஷ்டர்களால் "அமிர்த பஜார்" பத்திரிகையும் சுரேந்திரநாத பானர்ஜியவர்களால் "பெங்காளி" என்ற பத்திரிகையும் முதலில் வாராந்த பத்திரிகைகளாக இருந்து இப்போது தினசரிப் பத்திரிகைகளாகப் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

பங்களா தேசம் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்ததோடு, கவர்ன்மெண்டாருடைய முக்கிய ஸ்தலமாகிய கல்கத்தாவில் இப்போது வங்கவாசி, சஞ்சீவினி, சமாசார், சந்திரிகா, தத்துவ கவுமதி, அநந்த பஜார் பத்திரிகை, இந்திய நேஷன், இந்தியன் மெஸென்ஜர், ரெயிஸ்களாயட், சோபபிரகாஷ், ஆலோசன், சுராபி, சாதாரணி முதலான சுதேச பத்திரிகைகளும் சில ஆங்கிலேயருடைய தினசரிப் பத்திரிகைகளுமாக சுமார் 85 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இப்போது பிரசுரமாகி வருகின்றன.

*வடமேற்கு மாகாணம்*

நமது நாட்டின் வடமேற்கு மாகாணத்தில் இங்கிலீஷ் படிப்பு விசேஷமாக விருத்தி யாகாமையால் அவ்விடத்தில் சுதேசிகளால் நடத்தப்படும் ஆங்கிலேய பாஷா பத்திரிகைகள் கொஞ்சம் ஆயினும், இப்போது சுதேச பாஷா பத்திரிகைகள் விருத்தியாகி வருகின்றன.

1879ஆம் வருஷம் பண்டிதர் அயோத்தியா நாதரால் (Indian Herald) இந்தியன் ஹெரால்டு என்னும் தினசரி பத்திரிகையும், 1890ஆம் வருஷம் (Indian Union) இந்தியன் யூனியன் என்னும் பத்திரிகையும் பிரசுரிக்கப்பட்டு வந்தன. 1857ஆம் வருஷம் முபீடி–ஆம்–ஆக்பர், 1869 ஆக்ராவில் டில்லி கெஜட்டும், 1868ஆம் வருஷம் ஆக்ரா ஆக்பார் பத்திரிகைகளும், அலகாபாத்தில் 1822இல் பிரயாக சமாசார் – ஹிண்டிபாதீப் – காயஸ்த சமாசார் – நூர்ஹூல் அப்சார் என்ற பத்திரிகைகளும், அயோத்தியில் அவுத் பஞ்சு – அயோத்திய வர்த்தமானம் என்றாதி பத்திரிகைகளும், லாகோரில் பஞ்சாப் ஆக்பர் – தர்மசீலன் – டிரைபூன் – ஆரிய பத்திரிகா – ஹிந்து ஈ – சத் – வில் சுன்னா என்றாதி சுதேச பத்திரிகைகளும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

## பம்பாய் இராஜதானி

பம்பாயில் சுதேசிகளால் முதல்முதல் பிரசுரித்த பத்திரிகையின் பெயர் "பம்பாய் சமாசார்" என்றாலும் அதை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வந்தவர் 1850இல் சோர்ப்ஜீ சாபூர்ஜீ பெங்காளி என்ற பாரசீகராம். அவர் 1850ஆம் வருஷம் 'ஜகத்மித்திரா' என்ற பத்திரிகையையும், 1851ஆம் வருஷம் 'ஜ்கத் பிரேமி'யையும், 1857ஆம் வருஷம் 'ஸ்ருவீபோதகி' என்ற பத்திரிகையையும் பிரசுரித்ததுடன், 1851–ஆம் வருஷம் 'நவரோஜி பர்டன்ஜி' ஸ்தாபித்த (Rast Goftar) ராஸ்டு காப்டர் உண்மை விளம்பி என்னும் பத்திரிகைக்கு 1858ஆம் வருஷம் முதன்மையானவராகிப் பிரபலப்படுத்தினார்.

1860ஆம் வருஷம் கிருஷ்ணதாஸ் மூல்ஜி என்னும் சீர்த்துவோர் சத்தியபிரகாஷ் என்னும் சஞ்சிகையை ஸ்தாபித்து அதில் ஜனாசார சீர்திருத்தத்தைப் பற்றியும், முக்கியமாக வல்லபசாரிமத வைஷ்ணவ மஹாரதா என்னும் குருமார்கள் செய்யும் அக்கிரமங்களையும், கண்டது கண்டபடிக்கும், கேட்டது கேட்ட படிக்கும் எழுதிவர, அம்மதாசாரியர் அவரை ஜாதிபிரஷ்டராக்கியும், கோர்ட்டு கச்சேரிகளில் அலக்கழியச் செய்தும், வழிமறித்து அடித்தும், அவஸ்தைப்படும்படி செய்தார்.

அக்காலத்தில் 'மங்கலதாஸ் நாதுபாய்' என்னும் சீர்திருத்தும் தருமப்பிரபு அவருக்கு உதவியாக விருந்ததுடன் ஹோலிபண்டிகை என்னும் காமன் கூத்தில் நடக்கும் அக்கிரமங்களையும் கண்டித்து அப்பத்திரிகைக்கு எழுதி ஜனங்களைச் சீர்திருத்தி வந்தார்.

1863ஆம் வருஷம் இராவ் சாஹிப் விசுவநாத நாராயண மண்டலீக் என்னும் பண்டிதருடைய முயற்சியினால் 'நேடிவ் ஒபீனியன்' என்னும் பத்திரிகையை ஸ்தாபித்து அதில் நமது புராதன நடவடிக்கைகளே சிரேஷ்டமானவைகளென்று எழுதியும், அத்துடன் இராஜகீய விஷயங்களையும் எழுதிப் பதிப்பித்தார்.

இதன் பத்திரிகாசிரியர் இறந்த பிறகு கனம் 'காசிநாத் டிரம்பக் டிலாங்கு' என்பவர் எழுதிப் பதிப்பித்து வந்தார். 1868 முதல் 1872ஆம் வருஷம் வரையில் மேற்சொன்ன காசிநாத் டிரம்பக் டிலாங்கே இந்து பிரகாஷ் என்னும் ஆங்கிலோ மராட்டிப் பத்திரிகைக்கு எழுதி வந்தார். அந்த இந்துபிரகாஷ் என்பது புராதனமும் பண்டிதர்களால் புகழப்பட்ட பத்திரிகையுமாகையால் அதன் இங்கிலீஷ் பாகத்தை ஹைகோர்ட்டு ஜட்ஜியாக இருந்து இறந்துவிட்ட ஸ்ரீமாதவராவ் கோவிந்த ரானடே யவர்களும் இப்போது ஹைகோர்ட்டு ஜட்ஜியாக இருக்கும் ஸ்ரீ கோவிந்து நாராயண சந்தாவர்க்கரும் எழுதி வந்தார்களாம்.

பிறகு பம்பாயில் ஆப்காரி சவதாகர், லோகமித்ரா, சுகமூக்கநோசதி, விதயாமித்ரா, ஸ்பெக்டேடர், கன்னட சவுத்திரி, ஜாங்கிபோகர், வாய்ஸ் ஆப் இந்தியா, சன்மார்க்க தீபிகா, தினோதியா, பாலபோதமேவா, வர்த்தாஹறா, ஆரியதர்ம பிரகாசிகா, பகவத் பாஸந்திரா, சுவதேகவஸ்சல், குஜராதி, சுபோத பத்திரிகா, சுபோத பிரகாசிதா, தீனபந்து, விவித ஞான விஸ்தார், சத்யமித்திரா, அட்வேகேட் முதலான பத்திரிகைகள் கிரமமாகப் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

### புனா பட்டணம்

பம்பாயை அடுத்த புனாவில் ஸ்ரீ மகாதேவ கோவிந்த ரானடியவர்களுடைய தூண்டுதலினால் கணேஸ் வசுதேவ கோஷியால் தேசோபகாரமாக ஸ்தாபிக்கலான புனா சர்வஜன சபையாரால் மூன்று மாதத்துக்கு ஒரு தடவை குவார்ட்டர்லி ஜர்னல் என்னும் சஞ்சிகை 1877ஆம் வருஷம் பிரசுரிக்கப் பட்டது. அதன் பத்திராதிபர் சிப்லான்கர் நாமகார்த்தமாக ஆசிரியராகவும், உண்மையில் அச்சஞ்சிகையில் கண்ட பெரும்பான்மையான சங்கதிகள் ஸ்ரீ மகாதேவ கோவிந்த ரானடே அவர்கள் எழுதி வந்ததாகவும் தோன்றுகிறது.

1865ஆம் வருஷம் பாஹரி கோவிந்த சோபகார், ஞானசாக்ஷி என்ற பத்திரிகையை ஸ்தாபித்தாலும், 1881ல் 'கேசரி' என்ற சுதேச பாஷா பத்திரிகையும், 'மஹராட்டா' என்ற ஆங்கிலேயப் பத்திரிகையும் மிஸ்டர் பால கங்காதர திலகரால் ஸ்தாபிக்கப்பட்டுச் சென்ற விஷ ஜுர காலத்தில் அவர் எழுதி வந்த சங்கதிகள் இராஜ விரோதமான வைகளெனக் கொண்டு அப்பத்திராதிபரைச் சிக்ஷித்தது அநேகருக்குத் தெரிந்ததே. இப்போது புனாவில் 'நிபந்த சந்திரிகா', தக்ஷண ஹெரால்டு, பண்டிட்டு என்றாதி பத்திரிகைகள் பிரசுரிக்கப்புட்டு வருகின்றன.

### ஐதிராபாத்

1877ஆம் வருஷம் 'தினவர்த்தமானி' என்கிற பெயரால் ஆங்கிலோ – உருதுபாஷா பத்திரிகையும், 1881ஆம் வருஷம் சுக்த் – உள், இஸ்லாம், ஹசார்தஸ்தான், பனூர் சாபேக் முதலான இங்கிலீஷ் – உருதுபாஷா பத்திரிகைகளும் பிரசுரமாகி வருகின்றன.

### தென்னிந்தியா அல்லது சென்னை ராஜதானி

சென்னை ராஜதானியில் சுதேசிகளால் முதல்முதல் ஸ்தாபித்த சமாசாரப் பத்திரிகை எதுவென்று விசாரிக்கையில், 1840ஆம் வருஷம் மிஸ்டர் நாராயணசாமி நாயடு பதிப்பித்த நேடிவ் சர்க்குலர் (Native

Circular) என்பதாம். இந்தப் பத்திரிகையையும் அச்சாபீசையும் அக்காலத்தில் சிறந்த தேசாபிமானியாக ஜனித்திருந்த கனம் காஜுலு சித்தலு செட்டியார் குமாரர் மிஸ்டர் இலட்சுமி நரசிம்முலு செட்டியார் 1844ஆம் வருஷம் விலைக்கு வாங்கி அந்த வருஷம் அக்டோபர் மாதம் 2 உ கிரிஸெண்டு என்னும் பத்திரிகையை ஸ்தாபித்தார்.

அக்காலத்தில் சில கிறிஸ்துவ பாதிரிமார்களுடையவும், அக்கிறிஸ்து மதத்தில் வைராக்கிய முடைய சில துரைமார்களாலும் சுதேச பாடசாலைகளில் பைபில் பாடத்தைக் கட்டாயமாக வைக்க வேண்டுமென்றும், கிறிஸ்து மதத்தில் சேர்வோருக்கே பெரிய உத்தியோகங்களைத் தர வேண்டுமென்றும் கொண்டாடி வந்த கொள்கைகளைக் கண்டித்தும், கவர்ன்மெண்டாரால் குடிகளுக் குண்டாகும் சாதக பாதகங்களைப் பற்றிப் பேச நேடிவ் அசோஷியேஷன் (Native Association) சபையை ஸ்தாபித்தும், அந்தச் சபையாரைக் கொண்டு பார்லிமெண்டாருக்கு விண்ணப்பங்கள் எழுதி வைத்தும் வந்ததுடன், அக்காலத்தில் இங்கிலீஷ்காரர் இந்தியாவை யாளும் விதத்தைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்க விரும்பி வந்த (Mr. Danuel Seymour) டான்யுல் சீமோர் என்கிற பார்லிமெண்டு மெம்பரைக் கோயமுத்தூர், கும்பகோணம், கூடலூர் முதலான இடங்களுக்கு 1852ஆம் வருஷம் அழைத்துக்கொண்டு போய், அவ்விடங்களில் கந்தாய பாக்கிக்காகச் சில தாசீல்தாரர்கள் குடிகளை அண்ணந்தாள், கிட்டிக்கோல், முட்டிக்கால் போடுவித்துக் கஷ்டப்படுத்தி வாங்குவதைப் பிரத்திய க்ஷமாகக் காட்டியும், மைசூர், ஐதராபாத்து அரசர்களுக்குப் புத்திமதிகளைச் சொல்லியும் வருகையில், அவருடைய வர்த்தகத்தில் நஷ்டம் நேரிடத் தமது அருமையான கிரிஸெண்டு பத்திரிகையை எழுதிவந்த (Mr. Harley) மிஸ்டர் ஹார்லி முதலான சிப்பந்திகளுக்குப் பெருத்த சம்பளம் கொடுக்கச் சக்தியற்றுப் பத்திரிகையும் நின்றுவிட்டது.

இந்தக் கிரிசெண்டு பத்திரிகைக்குக் கவர்ன்மெண்டார் மற்றப் பத்திரிகைகளுக்குச் செய்துவந்த உபகாரத்தைச் செய்யாதிருந்ததோடு அதன் விளம்பரத்தை போர்ட் ஸெயிண்டு ஜார்ஜ் கெஜட்டில் கூடப் பதிக்க மாட்டோ மென்றார்கள். பாருங்கள் என்ன பரிதாபம்!

இந்தத் தேசாபிமானியைப் பற்றி ஒரு சிறு கதையுண்டு. அதாவது, ஒருநாள் இவர் தேசோபகார விஷயமாக மிஸ்டர் சீமோருடன் வெளிநாடுகளில் சஞ்சரிக்கையில், அன்றிரவு பயங்கர இருட்டில் ஓர் காட்டில் குடிகொண்டிருக்கும் குரூரரான கொள்ளைக்காரர்களும் வழிப்பறிகளும் வந்து நமக்கு நல்ல வேட்டை யகப்பட்டதென் றெண்ணி

இவர்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். அப்போது அங்கு அவர்களுக்கு இரையாக அகப்பட்டவர் லஷ்மி நரசிம்மலு செட்டியார் என்று தெரிந்த உடனே, அவர்கள் பதைபதைத்துப் பயந்து, "ஐயோ சிறந்த தேசாபிமானியாகிய இந்த மஹானுபாவனை இப்படிச் சதிசெய்ய நினைந்தோமே" என்று விசனப்பட்டு, அவர் பாதத்தில் வீழ்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவரைப் பல்லக்கில் தூக்கிக் கொண்டு வந்து இராஜ பாட்டையில் விட்டுக் கும்பிட்டுக்கொண்டு போய்விட்டார்களாம்.

உண்மையான தேசாபிமானிக்குக் கொள்ளைக்காரர்களும் கொலைபாதகர்களும் அஞ்சினதைப் பாருங்கள்!

1850ஆம் வருஷம் மிஸ்டர் வேங்கடராயலு நாயடுவால் **(The Rising Star)** "உதய நக்ஷத்திரம்" என்கிற பத்திரிகை பிரசுரிக்கப் பட்டாலும் அதன் விருத்தாந்தம் பூரணமாகக் காதுக்கெட்டவில்லை. பிறகு கனம் பெர்சிவல் காலத்தில் தினவர்த்தமானி என்கிற வாராந்தரத் தமிழ்ப் பத்திரிகை பதிப்பிக்கப்பட்டது. அதற்கு கவர்ன்மெண்டார் மாதாந்திரம் 200 ரூபாய் கொடுத்து வந்தமையால் அதன் பத்திராதிபர் மிஸ்டர் விசுவநாதப் பிள்ளை கல்வி விஷயத்தையும் கவர்ன்மெண்டு சட்ட திட்டங்களையும் மொழி பெயர்த்துப் பதிப்பித்து வந்தார். கனம் பெர்சிவலுக்குப் பிறகு கவர்ன்மெண்டார் கொடுத்துக் கொண்டு வந்த பணத்தை நிறுத்திவிட்ட படியால் மிஸ்டர் விசுவநாதப் பிள்ளை மரணத்தோடு தினவர்த்தமானியும் மறைந்தது.

1864ஆம் வருஷம் வேத சமாஜத்தை ஸ்தாபித்த மிஸ்டர் ராஜகோபாலாசாரியரும், மிஸ்டர் சுப்பராயலு செட்டியாரும், ஸ்ரீதரரும், தத்துவ போதினி பத்திரிகையை ஸ்தாபித்தார்கள். அதற்கு மிஸ்டர் பொன்னுசாமித் தேவர் 1000 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தார். அப்படிக் கொடுத்தும் அந்த மகான்கள் இறந்த பிறகு அப்பத்திரிகையும் மறைந்தது.

1871ஆம் வருஷம் சைதாபுரம் மிஸ்டர் காசி விசுவநாத முதலியாரும், பாரிஸ்டர் மிஸ்டர் ராமசாமி ராஜூம், பிரம்ம தீபிகையை ஸ்தாபித்து வெகு சாமர்த்தியமாக எழுதி வந்தார்கள். முதலியாரவர்கள் இறந்த பிறகு இப்பத்திரிகையும் மறைந்தது.

பிறகு சென்னையில் "தேசாபிமானி, திராவிடவர்த்தமானி, தினோதய பத்திரிகை, ஞானபானு, ஜனவிநோதினி, சுகுணபோதினி, மனோரஞ்சனி, மாதர்போதினி, வெற்றிக் கொடியோன், விகடதூதன்,

ஜனபூஷணி, ஆரிய ஜனப்பிரியன், முஸ்லீம் ஹெரால்டு, ஷம்–சுல்–அக்பார், ஆந்திரப் பிரகாசிகா, தத்துவசாதனி, தத்துவ விவேசனி, தத்துவ விசாரிணி, பிரபஞ்ச மித்திரன், லோகவர்த்தமானி" முதலான பத்திரிகைகளும்,

மதுரையில், "பாண்டியன், கிராணிகள்", கும்பகோணத்தில் "அதினியம், வர்த்தமான விமர்சனி", தஞ்சையில், "ஜனமித்திரன், சதரன் ஸ்டார்", நாகையில், "ஜனப்பத்திரிகை, நீலலோசனி", திருவனந்தபுரத்தில், "அபிமானி", பசுமலையில், "சத்தியவர்த்தமானி", கூடலூரில் "தேசாபிமானி" திண்டுக்கல்லில், "தென்னிந்திய மித்திரன்", திருச்சியில், "அமிர்தவசனி, நேசன், தமிழ்ச்செல்வன்", ஸ்ரீரங்கத்தில், "ஸ்தலபூஷணி", சேலத்தில், "சுதேசாபிமானி, சேலம் பானு, தக்ஷணதீபம், லோகவர்த்தமானி", கோயமுத்தூரில், "கோயமுத்தூர் பத்திரிகை, சுதரிசனி தூதன், கலாநிதி (Crescent)", பெங்களூரில், "பிரம்மஞானபோதினி", திருச்செங்கோட்டில், "திவாகரன்", வடநாடுகளில் "புருஷாத்தப்பிரதானி, விவேக சிந்தாமணி" ஆகிய இப்பத்திரிகைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளில் அநேக பத்திரிகைகள் போதுமான திரவிய சகாயமின்றி மறைந்துவிட்டன.

1870ஆம் வருஷம் சென்னை பாஸ்டர் பிரசில் நேடிவ் பப்ளிக் ஒபினியன் (Native Public Opinion) என்னும் பத்திரிகையை ஸ்தாபித்து அதற்கு மிஸ்டர் வேங்கடரமண பந்துலும், மிஸ்டர் ரங்கநாத முதலியாரும், ஸ்ரீமது திவான்பஹதூர் இரகுநாத ராயரவர்களும் முக்கிய பத்திராதிபர்களாக இருந்து கொஞ்சகாலம் இங்கிலீஷ், பாஷைகளிலும், தெலுங்காதி பிறகு இங்கிலீஷ் பாஷைகளிலும் சுதேசிகளுடைய குறைவுகள் வெகு திறமையுடன் எழுதப்பட்டு வந்தன.

இப்படிப்பட்ட பத்திரிகை யாது காரணத்தால் அவர்கள் கையை விட்டு நீங்கி ஒரு மகமதிய கனவான் வசமாகியதோ தெரியவில்லை. அப்படியாகினும் கூடிய வரையில் திருப்திகரமாக எழுதிவந்தார். பிறகு அந்தப் பாஸ்டர் பிரசுக்கு நஷ்டம் வந்து விற்பனையானபோது அந்தப் பத்திரிகையும் ஆதரிப்பாரின்றி மறைந்துவிட்டது. பிறகு சென்னை ஐகோர்ட்டு வக்கீலாக விருந்த மிஸ்டர் ராமச்சந்திரய்யரால் மதராசி என்ற பெயரால் ஓர் வாராந்த இங்கிலீஷ் பத்திரிகை பிரசுரம் செய்யப்பட்டு அதுவும் சில மாதங்களுக்குள் மறைந்துவிட்டது.

1879ஆம் வருஷம் சென்னைப் பச்சையப்பனார் கலாசாலையில் உபாத்தியாயர்களாகவும், திருவல்லிக்கேணி வித்தியாசபையின் மெம்பர்களாகவும், தேசாபிமானம் முதலான பொதுநல பிரியத்தை உடையவர் களாயு மிருக்கும் மிஸ்டர் சுப்பிரமணிய ஐயர், எம். வீரராகவாசாரியர்

ஆகிய இருவர்களும் தம்மிஷ்டர் சிலரோடு கூடிப் பேசியபோது "நமது சுதேசிகளுடைய குறைகளைப் பற்றிப் பேசத்தக்க சமாசாரப் பத்திரிகை இல்லையே" என்று யோசித்து அக்குறைவை நீக்கக் கருதி (The Hindu) இந்து என்னும் பெயரால் ஒரு சிறு பத்திரிகையைப் பிரதி வாரந் தோறும் எழுதி ஒரு அச்சாபீசில் கூலி கொடுத்து அச்சிட்டு வெளிவிட, அதில் கண்ட சங்கதிகள் குடிகளுடைய சுகத்தைக் கருதியவைகளாக விருப்பதைக் கருதி மெஸர்ஸ் கனம் ரங்கய்ய நாயுடுகாரு, கனம் அனந்தா சார்லு, கனம் சுப்பிரமணிய ஐயர், கனம் சபாபதி முதலியார் முதலான பிரமுகர்கள் அவர்களை உற்சாகப்படுத்த, அவர்கள் அப்பத்திரிகையைப் பெரிதாக்கியும், அதற்கென்று ஒரு அச்சு இயந்திரத்தை ஸ்தாபித்தும், அப்பத்திரிகையை வாரம் இருமுறை மும்முறையாகப் பதிப்பித்தும் கடைசியாகத் தினசரிப் பத்திரிகையாக்கி, இப்போது இத்தேசத்தில் சுதேசிகளால் நடத்திவரும் பத்திரிகைகளில் இது ஓர் சிறந்த பத்திரிகையாகப் பிரகாசிக்கிறது.

இந்த இந்து பத்திரிகை தோன்றிய பிறகு, இந்நாட்டில் இங்கிலீஷ் பாஷை அறியாதவர்களுக்கு அறிவை யூட்டத்தக்க தமிழ்ப் பத்திரிகை இல்லாததைக் கருதி அப்போது ஐகோர்ட்டு வக்கீலும் இப்போது மைசூர் சமஸ்தான ஐகோர்ட்டு ஜட்ஜுமாகிய மிஸ்டர் இராமச்சந்திர ஐயருடைய தூண்டுதலின் மேல் மேற்கண்ட மிஸ்டர் க. சுப்பிரமணிய ஐயரும், மிஸ்டர் மு. வீரராகவா சாரியரும் 1880ஆம் வருஷம் "சுதேசமித்திரன்" என்னும் பத்திரிகையைப் பிரசுரஞ் செய்தார்கள்.

இந்த இரண்டு பத்திரிகைகளும் இப்போது நம் நாட்டிற்குச் செய்துவரும் பேருபகாரம் இச்சபையில் நிறைந்திருக்கும் தேசாபிமானிகளே அறிவார்கள். சேலத்தில் இந்து மகமதியர்களுக்குக் கலகம் நடந்த சமயத்தில் கவர்ன்மெண்டார் அநேகரை ஜெயிலுக்கு அனுப்பியபோது இந்து பத்திரிகை செய்த உபகாரத்தைச் சொல்லவும் வேண்டுமோ. இதோ இன்று இச்சபாநாயகருக்குப் பக்கத்தில் வீற்றிருக்கும் கனம் சேலம் விஜயராகவாசாரியரை அநியாயமாகக் குற்றப்படுத்திச் சிறைச்சாலைக்கு அனுப்பியபோது, அந்த இந்து பத்திரிகை அவருடைய விடுதலைக்காகப் பட்ட பாடு கொஞ்சமா?

அக்காலத்தில் நிரபராதிகளான அனேகரைச் சிறைச்சாலையை விட்டு நீக்கி அவர் மனைவிமார்களுக்கு மாங்கல்ய பிச்சை கொடுத்தது இந்து பத்திரிகையல்லவா? நாகப்பட்டினம் கலகக் கேசு, திருநெல்வேலி கலகக் கேசு, திருவனந்தபுரம் தடபுடல் கேசு, குத்தாலம் கலகக் கேசு, தஞ்சாவூர் தாமஸ் கேசு, மங்கேசராவ் கேஸ், பல்லாரி விதந்து கேஸ்,

மைசூர் ஜாதகக் கேஸ் முதலான விஷயங்களைப் பற்றிப் பிரபல நியாயங்களோடு முறையிட்டும் ஆயிரம் ஐயாயிரம் ரூபாயையும் அவதூறு கேசுகளுக்குக் கொடுத்துக் கஷ்டப்பட்டதும் கொஞ்சமா?

இம்மட்டோ! நமது நாட்டிற்கு ரிப்பன் பிரபுவினால் கொடுக்கப்பட்ட சுய அரசாட்சியை நாட்டார் நன்கறியும்படி போதித்ததெது? இந்தியா காங்கிரஸ் சபைக்கு ஒரு முதற்காரணமாக நின்று இன்றளவும் பாடுபட்டுப் பேசுவதெது?. சென்னை மகாஜன சபைக்கும் இன்று இங்குக் கூடும் மாகாணக் கூட்டத்திற்கும் முக்கியமாக நின்று நிறைவேற்றிய தெது? இந்து பத்திரிகையும் அதன் சகோதரன் சுதேசமித்திரன் பத்திரிகையுமல்லவா?

இப்படி நமது நாட்டிற்கு உழைத்துவரும் "இந்து" பத்திரிகையின் தற்கால ஸ்திதியைக் கேட்க ஒவ்வொரு சுதேசாபிமானிக்கும் சங்கடமுண்டாகும். ஏனெனில், அப்பத்திரிகைக்குப் போதுமான வருமானமும் மற்ற உதவிகளுமில்லாததே. அந்த இந்து பத்திரிகையைச் சென்ற இருபது வருஷ காலங்களாக இரவும் பகலும் தம் சொந்த சுக துக்கங்களைக் கருதாது நடாத்தி வந்த நவமணிகளிலும் சிறந்த நம் கண்மணிகளாகிய மிஸ்டர் சுப்பிரமணிய ஐயருக்கும், மிஸ்டர் வீரராகவா சாரியருக்கும் போதுமான வருமான மில்லாததோடு, அந்தப் பத்திரிகையை நடத்திய விஷயத்தில் கடன் அதிகமாகி அதைத் தீர்க்க வழியற்றதனால் இருவரும் பிரிந்து இந்து பத்திரிகையை மிஸ்டர் வீரராகவா சாரியரும், சுதேசமித்திரனை மிஸ்டர் சுப்பிரமணிய ஐயரும் நடத்தி வருகிறார்கள்.

அப்படி நடத்தி வந்தும் இந்துப் பத்திரிகையின் கடன் இன்னும் தீராமையாலும், இவ்வளவு உபயோகமுள்ள பத்திரிகையை இரண்டொருவர் நடத்தி வந்து இவர்களுக்குப் பிறகு மிஸ்டர் லக்ஷ்மி நரசிம்மலு செட்டியாருடைய கிரஸண்டு பத்திரிகையைப் போலவும், நேடிவ் பப்ளிக் ஒபினியன் பத்திரிகையைப் போலவும் மறைந்து போகாதபடி முன் எச்சரிக்கையாக இருக்கவும், அந்த இந்து பத்திரிகையையும் அதன் அச்சியந்திர சாமான், கட்டிடம் முதலானவற்றையும் தேசாபிமானிகளான ஒரு கம்பெனியாரிடம் விசாரணையில் விட்டும், அதற்கு மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் பத்திரிகாசிரியராகவும், மிஸ்டர் வீரராகவா சாரியர் ஏஜெண்டு மானேஜராகவும் இருந்து உழைத்து வந்தால் இந்தக் கம்பெனியாருக்கு நல்ல லாபமும் அதோடு தேசோபகாரமான காரியமும் நிரந்தரமாக நடக்குமென்று சொல்லும் ஓர் பிரசித்த பத்திரிகையைக் கண்டேன்.

பத்திராதிபர்களுக் கிருக்கும் கஷ்ட நஷ்டுரேங்களைப் பாருங்கள். நமது கண்மணிகளாகிய மிஸ்டர் சுப்பிரமணிய ஐயரும், மிஸ்டர் வீரராகவா சாரியரும் ஆதியில் இப்பத்திரிகைத் தொழிலில் பிரவேசிக்காமல், ரெவினியூ சிவில் உத்தியோகங்களில் பிரவேசித்திருந்தால், டிப்டி கலெக்டர், சப் ஜட்ஜி முதலான வேலைகளில் அமர்ந்து இப்போது பென்ஷன் பெற்றுக்கொண்டு சுகமாக உண்டு, சோபாக்களில் தூங்கி, சாயந்திரங்களில் சமுத்திரக்கரையோரங்களில் லாண்டோ புரூவம் வண்டிகளில் ஏறிப்போய் காலம் கழிக்கலாம். தேசாபிமானத்துக்கு உழைத்த இந்த உத்தமர்களுக்கு விருத்த வயதில் பென்ஷன் கொடுத்துக் காப்பவர் யார்? கடவுள்தான் காக்க வேண்டும்.

கனவான்களே! இவர்கள் விஷயமாக நான் இவ்வளவு தூரம் சொன்னது தாக்ஷணியத்தைக் கருதியல்ல. இந்த இந்து பத்திரிகைக்கு முன் நான் சேலத்தில் சுதேசாபிமான பத்திரிகையை ஸ்தாபித்து நஷ்டமடைந்ததில் அப்பத்திரிகை மறைந்தது. பிறகு 1881ஆம் வருஷம் கலாநிதிப் பத்திரிகையை ஸ்தாபித்து வந்ததில் நாளது வரையில் 7000 ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறேன். இத்துடன் எனக்கு எடிடர் சம்பளமும் சேர்த்தால் 10000 ரூபாய் நஷ்டமிருக்கும்.

இப்படி ஒரு பத்திரிகைக்கே சென்ற 20 வருஷத்தில் இவ்வளவு நஷ்டமானால் இந்துவைப் போன்ற தினசரிப் பெரிய பத்திரிகைக்கு எவ்வளவு நஷ்டமுண்டாயிருக்க வேண்டுமென்பது சமாசாரப் பத்திரிகைகளைப் பதித்து அவற்றுடன் ஊடாடி உறவாடியவர்களுக்கே உண்மை வெளியாகும். இப்படிப் பத்திராதிபர் நஷ்டமடைவதற்குக் கையொப்பக்காரர்களே காரணம்.

நம்முடைய தேசாபிமானம் வாசானகங்கரியம் சோதிப்போமாகில் நம்மவர் நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்து விட்டால் மூலைக்கொன்றாக ஓடும் தன்மையைப் போன்றவர்கள். அப்படி ஓடும் ஒரு நெல்லிக்காயை எடுத்துப் பார்த்தால் அதைச் சுற்றிலும் ஆறு கோடுகளிருக்கக் காணலாம். அக்கோடுகளென்ன வென்றால்; சைவம், வைணவாதி ஆறு சமயங்களுக்கு உவமையாகும்.

எப்படி ஆறு சமயத்தார் ஒன்றாகச் சேருகிறதில்லையோ அப்படியே பொதுவிஷயத்தில் நம்மவர்கள் ஒன்று சேர்வது அபூர்வம். ஆகவே அன்று பார்த்ததற்கு அழிவில்லாமல் இப்போது மிருக்கிறோம். இனி இப்படி இருந்தால் நமது தேசம் க்ஷேமமடைவதெப்படி? இத்தியாதிகளை இனிமேலாகிலும் ஆழ நீள ஆராய்ந்து ஆரிய தேசமாகிய நமது அருமைத்

தாயாரிடம் அன்பைக் காட்டி அதன் பெருமையைப் பிரபலமாக்கும் சாதனங்களாகிய சமாசார பத்திரிகைகளைப் பரிபாலித்துவரப் பிரார்த்திக்கின்றனன்.

★



*சேலம் பகடாலு நரசிம்மலு நாயடு*

## ஒரு குறிப்பு

*தனவணிக நாட்டு அபிமானிகள் பலர் அழைப்புக் கிணங்கித் தமிழ்நாட்டில் பேரறிஞர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களும் வருகை நிஹானயோகி அவர்களும் இம்மாதம் 20ஆம் நாள் சனிக்கிழமை காலை அமராவதி புதூர் கனம் பச்சப்பா சுப்பரமணியன் செட்டியார் அவர்கள் வீடு வந்து சேர்ந்தனர்.*

*மறுநாள் திங்கட்கிழமை காந்தி ஆசிரமம் சென்றனர் (1928).*

# 2. மதுரை தமிழ்ச் சங்கம்

## சேலம் பகடாலு நரசிம்மலு நாயடு (1901)

பாண்டிய நாட்டை அலங்கரிக்க அவதரித்த பாண்டித் தேவரே! வித்தியா விநோதரே! இச்சபையிலிருக்கும் தலைமக்களே! நேற்று பத்தாவது மாகாண மஹா மண்டபத்தில் நமது குடிகளுடைய குறைவு நிறைவுகளைப் பற்றிப் பேச ஒரு சபையும், அப்படிப் பேசும் சங்கதியைப் பலருக்கும் அறிவிக்கச் சுதேச மித்திரன், இந்து, முதலான சமாசாரப் பத்திரிகைகளும் இன்றியமையாதன வென்றும், ஆகவே, அப்பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டியது நம்மவர் கடமை என்றும் சொன்னேனல்லவா? இன்று அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு எழுத வேண்டிய பாஷையை, முக்கியமாக நமது தாய்ப் பாஷையாகிய தமிழை விருத்தி செய்ய வேண்டியதும் நம்மவர் கடமையாகும்.

அமெரிக்கா கண்டத்தில் வித்தையிலும் விஞ்ஞானத்திலும் சிறந்த வால்டோ எமர்சன் என்னும் வித்துவான், தாமெழுதிய ஓர் வியாசத்தில்,

"இவ்வுலகம் அறிஞருடைய உள்ளங்கைக்குள் அகப்பட்டு ஆடும் பந்தைப் போலும் செண்டைப் போலுமிருக்கிறது. அவர்கள் அதை அடக்கி யொடுக்கித் தம்மிஷ்டப்படி எல்லாம் ஆடக்கூடும்"

என்று சொல்லி இருப்பதற்கேற்ப, நம் தமிழ்நாட்டினரும், "உலகம் அறிவுடையார் மாட்டு" என்று எழுதினர். அதாவது, இந்த உலகத்தில் அநந்த கோடி ஜனங்களிருக்கினும், அவர்களெல்லோரும் அறிவுடைய சில புத்திமான்களுடைய ஆக்கினைக் குட்பட்டிருக்கின்றனர் என்பதாம். இந்த வாக்கியத்தின் அருத்தத்தை அறிந்து அனுஷ்டித்து வந்த நமது முன்னோர்கள், அஷ்ட ஐசுவரியத்துடன் ஆரிய தேசத்தை அடக்கி ஆண்டு ஆனந்தத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

மத்திய காலத்தில் நம் முன்னோர்கள் இந்த மகுட வாக்கியத்தின் மகத்துவத்தை அறியாமல் அசட்டை செய்தனர். அன்று முதல் இந்நாட்டின் கல்வி, செல்வம், சீர்திருத்தம், சிறப்பு முதலானவைகளைத் தினேதினே நாம் இழந்துகொண்டு வந்து கடைசியாக நம் நாட்டையும் இழந்து விட்டோம்.

இத்தென்னாட்டார் தொன்று தொட்டு கல்வி, கேள்வி, ஞானம், தருக்கம், இலக்கியம், இலக்கணம், இராச தந்திராதி சாஸ்திரங்களை யறிந்து சுதந்திர சுகவாழ்வைப் பெற்றிருந்தார்க ளென்பதற்குத் தமிழ் முச்சங்கங்களே போதுமான சாக்ஷியமாகும்.

காளமேகப் புலவர் வெண்பாவின்படி "நூலா நாலாயிர நானூற்று நாற்பத்தொன்பான், பாலா நூற்று நாற்பத்தொன்பான் – மேலா, நாற்பத் தொன்பான் சங்க மறுபத்து நாலாடறுக்கும், கத்தன் மதுரையிற் சொக்கன்."

அச்சங்க மேறியவர்கள் 4,449 பெயர்களென்று தெரிவிக்கப் பட்டிருந்தாலும், வீரசோழிய முதலான சில சிறந்த நூல்களைக் கொண்டாராயுங்கால் 549 பெயர்களென்றும், அவர்களில் அகத்தியனார், விரிசடையத்தனார், முருக முதல்வனார், முடிநாகராயர், நிதிக்கிழவனார், அதங்கோட்டாசிரியனார், பனம்பாறனார், தொல்காப்பியனார் முதலானவர்கள் சிறந்து விளங்கி, தொல்காப்பியம், காக்கைபாடினியம், அவிநயம், நற்றத்தம், வாமனம், புறப்பொருட் பன்னிருபடலம், முருவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பரிபாடல், முதுநாறை, முதுகுருகு, களரியாவிரை முதலிய அருமையான நூல்களை இயற்றினார்கள். அவர்கள் அகத்தியத்தை முதல் நூலாக வழங்கி வந்தார்கள்.

அதில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் மூன்றும் வகுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியம் முதலியவற்றில் இயற்றமிழும்; பெருநாரை பெருங்குருகு முதலியவற்றில் இசைத்தமிழும்; முருவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலியவற்றில் நாடகத் தமிழும் விரித்துரைக்கப்பட்டன.

பிறகு இடைச் சங்கம் கபாடபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்க மேறியவர்கள் 509 பெயர். அவர்களில் இருந்தையூர் கருங்கோழி, மோசியார், வெள்ளூர் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையின் மாரன், துவரைக் கோமான், கீரந்தையார் முதலானவர்கள் சிறந்து விளங்கி, கலிக்குருகு, வெண்டாலி முதலிய நூல்கள் அரங்கேற்றப்பட்டன. இச் சங்கத்தார் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் முதலியவற்றை நூல்களாக வழங்கி வந்தார்கள்.

கடைச் சங்கம் உத்தர மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் சங்க மேறியவர்கள் 49 பெயர். அவர்களில் இறையனார், உக்கிரப் பெருவழுதியார், கபிலர், பரணர், நக்கீரர், பெருந்தேவனார், நச்சுமனார், குலபதி நாயனார், ஆலங்குடி வங்கனார் முதலானவர்கள் சிறந்து

விளங்கி, நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, எழுபது பரிபாடல், பதிற்றுப் பத்து, நூற்றைம்பது, கூத்தவரி, சிற்றிசை, பேரிசை முதலியனவற்றை அரங்கேற்றினார்கள். இப்படி முதற்சங்கத்தில் 4449 பெயரும், இடைச் சங்கத்தில் 3700 பெயரும், கடைச் சங்கத்தில் 49 பெயரும், அவ்வச் சங்கத்தில் தத்தம் காவியங்களை அரங்கேற்றினர் என்பது இதனடியிற் காணும் இறையனார் அகப்பொருளின் கவியால் விளங்கும்.

*வெண்பா*

*ஏழேழொ டைஞ்நூறு மேழே ழொடுபஃதும்*
*ஏழேழுஞ் சங்க மேதிய்னார் – ஏழேழ்சேர்*
*நாற்பதிநா னூறு முப்பானேழ் நூறுநானூற்று*
*நாற்பதினொன் பான்கவிஞர் நாடு.*

இப்படிப் பிரகாசித்த சங்கங்களில் முதற் சங்கத்தின் காலம் முன்பின் 450 என்றும், இடைச் சங்கத்தின் காலம் 350 என்றும், மூன்றாம் சங்கத்தின் காலம் 2000 என்றும் ஒரு நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

.அன்றியும், முதற்சங்கம் காய்சின வழுதி முதல் கடுங்கோன் வழுதி வரையில் 19 பாண்டியர் காலம் வரையினும், இடைச்சங்கம் வெண்டோச்சநியன் முதல் முடத்திருமாற னீறாக 59 பாண்டியர் காலம் வரையினும், மூன்றாஞ்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி யீறாக 49 பாண்டியர் காலம் வரையிலும், பிரபலப்பட்டிருந்த தன்றியில், இப்பாண்டியரில் முதற்சங்கத்தில் ஏழுபெயரும், இடைச்சங்கத்தில் ஐவரும், மூன்றாம் சங்கத்தில் மூவரும், கவியரங்கேறினதாக ஒரு சாசனத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சங்கத்துள் அரங்கேற்றியவற்றுள் திருக்குறளே கடைசியாம். சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு அதாவது உக்கிரப் பெருவழுதி காலத்தில் சங்கம் முடிய ஹேதுவாயிற்று. அதற்குக் காரணம், திருக்குறள் இயற்றிய திருவள்ளுவ நாயனார் ஜாதியில் வள்ளுவராகையால் அப்படிப்பட்ட கீழ் ஜாதியான் இயற்றிய திருக்குறளைச் சங்கப் பலகையின் மீதேற்றியது குற்றமெனக் கொண்ட அக்காலத்துப் பிராமணருக்குள் துர்பிமானம் பிறந்து இத்தமிழ்ச் சங்கத்தையும் அச் சங்கப் பலகையையும் பாழ்த்துப் போகச் செய்துவிட்டனரென்று Doctor Colledwell சாஸ்திரி யார் தன் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

அதன்பின் 200 வருஷங்கள் வரையில் சேர சோழ பாண்டியர் காலத்தில் அதிவீரராமன், ஔவை, புகழேந்தி, ஒட்டக் கூத்தர், கபிலர்,

கம்பர், அம்பிகாபதி, தமிழ் தண்டி, வில்லிபுத்தூரார் முதலான வித்துவசிகாமணிகள் கிரந்தங்களை இயற்றிப் புகழ் பெற்று வந்தாலும், பராக்கிரம பாண்டியன் காலத்தில் மகம்மதியர்கள் பாண்டிய நாட்டில் பிரவேசித்துப் பட்டணத்தைப் பாழக்கி நூல்களை நாசமாக்கி விட்டார்கள். அதனால் அனேக அருமையான நூல்கள் மறைந்துவிடவே, அமிழ்தினுஞ் சுவையுடைய தமிழ்ப் பாஷையின் பெருமை குலைந்து, அது ஸம்ஸ்கிருதாதி மற்றப் பாஷைகளில் சிறந்த தல்ல வென்று சொல்லவும், அதில் ஆத்மா முதலான பதங்களுக்கு வார்த்தைக ளுண்டோ வென்று சந்தேகிக்கும் படியான நிலைமைக்கும் வந்துவிட்டது.

அந்தோ பாருங்கள்! தமிழ் என்னும் பதத்திற்கு இனிமை என்றும், அதாவது இது எல்லா பாஷைகளைவிட இனிமையானதாகவும் சங்கிரகமான பாஷை என்றும், எ—ஒ என்றாதி சில எழுத்துக்களை ஸம்ஸ்கிருதாந்திராதி பாஷைகளுக்குத் தானங் கொடுத்த பாஷை என்றும், லௌகீக வைதீக வாகட ஜோஸ்ய முதலான பலவித விஷயங்களைத் தக்கபடி எழுதிக் காட்டப் பொருந்திய பாஷை என்றும், ஸமஸ்கிருத பாஷையில் இல்லாத மிளகாய் முதலான புராதன பதங்களையும் எழுவாய் பயனிலைகள் இன்னின்ன விடத்திலிருக்க வேண்டுமென்ற விதிநிலை வாக்கியாலங்காரத்தையும் வடமொழியில் இல்லாத வாகடம், ஜோஸ்ய முதலான சாஸ்திரங்களை ஏராளமாக உடைய ஓர் சிறந்த பாஷை என்றும், பல பண்டிதர்களால் கேட்டிருக்கின்றனம்.

மேலும், "தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங் கூத்தன் புறப்பட்டக் கால்" என்னும் வாக்கியத்தில் கண்ட கூத்தன் என்பதும், "உடல் பொருள் ஆவியெல்லா முன் வசமாக்கிக் கொண்டு" என்னும் வாக்கியத்தில் காணும் ஆவி என்னும் பதமும், இப்படியே சமயோசிதமாக அனேக பதங்கள் ஆத்மாவைக் குறிக்கிறதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

இம்மட்டோ! சங்கமேறிய அனேக நூல்களில் பாஷைக்கிருக்க வேண்டிய சகல அங்கங்களும் நிறைந்திருந்தன வென்பதற்கு இப்போது கும்பகோணம் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ சாமிநாதய்யரவர்களுடைய பெரு முயற்சிகளினால் அத்தி பூத்தது போல அபூர்வமாகக் கிடைக்கப்பெற்று வெளிக்கு வரும் சில புராதன நூல்களால் பிரத்தியக்ஷமாகின்றன.

மகமதியர் இந்நாட்டில் குடிகொள்ளவே, தமிழ் மாது தழைத்தோங்க வகையற்றுத் தவிக்க, பாண்டிய ராஜ்ஜியம் பாழ்த்துப் போக நேரிடுகையில், விசுவநாத நாயடு — திருமலை நாயடு முதலான இந்து

மதஸ்தர்களுடைய சமஸ்தானம் ம்துரையில் ஸ்தாபிக்கப்பட்டாலும், அந்த நாயடுமார்கள் அப்போது அடிக்கடி அவர்களைத் தாக்க வரும் அயலரசர்களிடம் போர் புரிந்து ஓட்டவும், மிச்சமாகும் காசையும் காலத்தையும் கோயில் கோபுர மண்டபம் மாளிகைகளைக் கட்டுவதிலும் போக்கி வந்தார்களே யொழிய அந்நிய மதஸ்தரான சமணர்களுக்கிருந்த அபிமானமாவது தமிழினிடம் காட்டி வந்ததாகச் சொல்லும் சரித்திரம் அகப்படவில்லை.

பிறகு, நாயடு ஸமஸ்தானமும் மகமதியர் ஸமஸ்தானமு மாறி ஆங்கிலேய சமஸ்தானம் ஸ்தாபிக்கப்பட, அவர்கள் ஆங்கிலேய பாஷையை அதிகமாகப் பரப்ப ஆரம்பித்தார்கள். ஆங்கிலேய பாஷையைக் கற்பவருக்குக் "கணபதி பூஜை கைமேல் பலன்" என்னும் பழமொழியின்படி முதலில் உணவுக்கும் உடுப்புக்கும் உல்லாசத்துக்கும் வேண்டிய உத்தியோகம் கிடைத்து வருவதால், ஏற்கெனவே ஏழைகளான சுதேசிகள் வடமொழியை வாட விட்டும் தென்மொழியைத் தவிக்கவிட்டும் எல்லா ஜாதியாரும் எல்லா மதஸ்தரும் ஆங்கிலேய பாஷையையே ஆபரணமாகக் கொண்டு ஆண்பெண் மக்களனைவரும் அநுஷ்டிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதற்கொரு வேடிக்கையான சம்பவத்தைக் கேளுங்கள்!

இந்தப் பாடசாலையைக் கூட்டும் ஜாடுமாலிப் பெண்ணும் நேற்று ஒருவரைப் பார்த்து, "ஐயா! காப்பி சாப்பிடுகிற டைமாச்சுதே, மீட்டிங்குக்குப் போகவில்லையா?" என்றாள். இதில் எத்தனை ஆங்கிலேய பதங்களும் எத்தனைத் தமிழ்ப் பதங்களும் கலந்திருக்கின்றன பாருங்கள்! ஜாடுமாலி பாஷையே இப்படியானால் இனி தலைமக்கள் பாஷை எப்படியிருக்கும்? இப்படிச் சொல்லியதனால் ஆங்கிலேய பாஷையை இகழ்ந்து பேசுவதாகக் கொள்ளவேண்டாம்.

ஆங்கிலேய பாஷையோ இப்பிரபஞ்சத்தில் பல பக்கங்களிலும் பிரபலமாக இருக்கும் ஒரு பெரிய பாஷை. இப்போது அந்தப் பாஷையில் எழுதியிருக்கும் சரித்திரங்கள், சாஸ்திரங்கள், தத்துவங்கள் அநந்தம். அவைகள் ஒரு புருஷ ஆயுளில் படிக்க முடியா. அது அப்படி ஆனதற்கு ஆங்கிலேயருடைய தேசாபிமானமும் பாஷாபிமானமுமே காரணமாகும்.

நாமோ நமது தாயாகிய தமிழை அசட்டை செய்துவிடவே, ஆங்கிலேயரும் அப்பாஷை விருத்தியில் அசிரத்தையாகிவிட்டார்கள். திருஷ்டாந்தமாக, இப்போது பரீக்ஷைகளுக்குத் தயார் செய்யும் கேள்விப் பத்திரிகைகளில் ஆங்கிலேய பாஷையில் எத்தனைப் பத்திரிகைகள்

தயாராகின்றன பாருங்கள்! மேலும், ஆங்கிலேய பாஷையைப் போதிக்கும் ஆங்கிலேய வாத்தியாருடைய சம்பளமென்ன? தமிழைப் போதிக்கும் பண்டிதர்களின் சம்பளமென்ன!

கோயமுத்தூர் காலேஜ் கமிட்டியில் நான் ஒரு மெம்பர். நான் மெம்பரான பிறகு நானறிந்த ஆங்கிலேய உபாத்தியாயர்கள் அக்கல்லூரியில் மாறினார்கள். அப்படி மாறி மாறி வந்தவர்களுக்கு மாதம் 1–க்கு 200, 300, 400, 500 ரூபாய் சம்பளமும், அந்தக் கலாசாலையில் தமிழைப் போதிக்கும் முனிஷிகளுக்கு 30, 35 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைப்பதில்லை.

ஆகவே இந்தச் சொற்ப சம்பளத்திலிருக்கும் உபாத்தியாயருடைய வார்த்தைகளை அநேக வித்தியார்த்திகள் சட்டை செய்யாமலும் (டெக்ஸ்டு புக்) பாட புத்தகங்களை வாங்கி வாசிக்காமலும், மற்றப்படி மொழிபெயர்ப்பு முதலான விஷயங்களில் கேட்கப்படும் சுலபமான கேள்விகளினால் மார்க்குகளைப் பெற்றுப் பரீக்ஷையில் தேறி வீட்டிலும் வெளியிலும் பெரும்பாலும் ஆங்கிலேய பதங்களை வழங்கி வர, அவைகளைக் கேட்கும் வீட்டுப் பெண்களும், அவர்களைப் பார்த்து ஜாடுமாலி முதலானவர்களும் அவைகளைப் போல் வழக்கமாக்கிக் கொள்ளுகிறார்கள்.

இத்தியாதி கஷ்டங்களைக் கருதியே "அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி அதிகமென்று கற்றுவிட்டோம் அறிவில்லாமல்" என்று இப்போது நமது பாண்டித்துரை அவர்கள் சொன்ன பாட்டைப் புலவர் ஒருவர் பாட நேர்ந்தது.

*"மூச்சுவிடு முன்னே முந்நூறும் நானூறும்*
*ஆச்சுதென்றால் ஆயிரம்பாட் டாகாதோ*
*இம்மென்னு முன்னே இருநூறு முந்நூறு*
*அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதா"*

என்று பாடிய காளமேகப் புலவரைப் போன்ற கவிகளெல்லாம் மறைந்துவிட்டனர்.

இடையில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், இராமலிங்கம் பிள்ளையும், ஆறுமுக நாவலரும் தோன்றித் தமிழ்ப் பாஷையை விருத்தியாக்கப் பிரயத்தனப் பட்டாலும், இவர்களில் ஒருவர் பெரும்பாலும் புராணங்களைப் பாடிமுடிப்பதிலும், ஒருவர் வைதிகமான பாடல்களைப் பாடுவதிலும், ஒருவர் வைதீக ஆகமாதி கிரந்தங்களை வழுவறத் திருத்தி

அருத்தத்துடன் பதிப்பிப்பதிலும் 'காலத்தைக் கழித்தார்களே யொழிய; வெப்ஸ்டர், ஆக்லிவிர் முதலானவர்களைப் போல் பெரிய அகராதிகள் முதலான விஷய விவேக சாகராதி கிரந்தங்களை எழுதிப் பொதுஜன சமூகத்தாருக்குத் தக்கபடி உதவினார்களில்லை.

கடைசியாக இக்காலத்திலோ தமிழினால் திரவிய உதவியும் அந்தஸ்தும் கிடைப்பதில்லை என்று கண்டு, அநேகர் அகராதிப் பண்டிதர்களாகிவிட்டார்கள். அந்தோ பாருங்கள்! நமது தமிழ்ப் பாஷைக்கு வந்த கஷ்டம்.

கோயமுத்தூர் சிவன்பிள்ளையைப் போன்ற சிலரிடத்தில் சில புராதன கிரந்தங்களிருக்கினும் அவைகளைச் செல்லுக்குக் கொடுக்க விரும்புகிறார்களே யொழியப் பிறர் பார்த்துப் படிக்க வெளிவிடே னென்கிறார்கள். புராதன தமிழ் வித்துவான்களுடைய நூல்களையும் சரித்திரங்களையும் படித்தாகிலும் சந்தோஷ மடையலாமெனில், இது விஷயமாகப் பண்டிதர் சாமிநாதய்யர் ஜில்லா ஜில்லாவாகத் திரிந்து பகீரதன் கங்கையைத் திருப்பப் பட்ட பாடெல்லாம் பட்டாலும் உண்மையான கிரந்தங்களும் சரித்திர சங்கதிகளும் கிட்டுவது கஷ்டமாக இருக்கின்றது. இதைப் பற்றி அப்பண்டிதர் அடிக்கடி சதேசமித்திரனில் எழுதிவருவதைப் படித்து வருகிறோமல்லவா! இனி எத்தனைக் காலந்தான் இப்பண்டிதர் பாடுபடக் கூடும்! தேக கஷ்டத்தோடு பணத்தையும் செலவழிக்க வேண்டுமே.

இது விஷயத்தில் பணத்தைச் செலவழிக்கும் பிரபுக்களும் இராஜர்களும் இக்காலத்திலில்லை என்று நமது சபாநாயகர் முன்சொன்னது நிஜமே ஆயினும், இது விஷயத்தைச் சோதிக்கும்படி சேர நாட்டுக்குப் போனேன்.

அங்குத் தமிழ்ப் பாஷாபிவிருத்திக்குப் பொருள் செலவழிக்கும் இராஜனில்லாததைக் கண்டு தயங்கினேன். பிறகு இது விஷயமாகச் சோழநாட்டுக் கேகினேன். அங்கும் அப்படிப்பட்ட அரசரைக் கண்டிலேன். கடைசியாக இப்போது புராதனமான பாண்டியன் நாட்டிற்கு வந்தேன். இங்கு இன்று இந்தச் சங்கத்துச் சபாநாயக ரத்தினமாகப் பிரகாசிக்கும் பாண்டித்துரைத் தேவருடைய தேசாபி மானத்தையும் தமிழ்ப் பாஷாபிமானத்தையும் காண, இவர்தான் முன் பாண்டிய நாட்டில் முச்சங்கங்களையும் பரிபாலித்து வந்த பாண்டியர்கள் யாவரும் கூடி ஓர் அவதாரமாக வந்ததாகக் கண்டு கொண்டதாக நினைக்கின்றேன். ஆம். அதற்குச் சந்தேகமில்லை.

இராமநாதபுர சேதுபதி சமஸ்தானத்தார் தொன்றுதொட்டு தமிழ்ப் பாஷையையும் சைவ சித்தாந்தப் பயிரையும் தழைத்தோங்கச் செய்து மங்காத புகழைப் பெற்றவர்களன்றோ?

நமது சபாநாயகருடைய உத்தம பிதாவான ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவர் சமுகத்தில் ஸ்ரீமான் தியாகராய செட்டியார், மாம்பழக் கவி முதலானவர்கள் வந்து பாடியும் சமுக வித்துவான்களோடு தருக்க மாடியும் பிரபல பிருதுகளைப் பெற்றார்களல்லவா?

ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவரே சமுத்திரவர்ணனை முதலான சிறந்த கிரந்தங்களை இயற்றி, இயலிசை நாடகப் புலவர் சிகாமணியாய் விளங்கவில்லையா!

அவர் காலத்தில் வேத சமாஜத்தை ஸ்தாபித்த மிஸ்டர் ராஜகோபாலாசாரியார் பிரசுரித்த தத்துவபோதினி பத்திரிகைக்கு அச்சியந்திரம் வாங்க 1000 ரூபாய் கொடுத் துதவவில்லையா?

இவ்வளவேன்? இப்போது இருக்கும் நமது சிரேஷ்ட சேதுபதியவர்கள் தமிழ் வித்துவான்களுக்கும் தமிழ்க் கிரந்தங்களுக்கும் தமிழ்ப் பத்திராதிபர்களுக்கும் வாரி வாரிக் கொடுத்த திரவியத்துக்குக் கணக்குண்டா? தமிழ் என்னும் பூங்கொடியைத் தாங்கும் கற்பக விருக்ஷத்தைப் போன்ற அந்தச் சேதுபதி வள்ளலார் இன்று இங்கு இல்லாதது நமது துர்ப்பாக்கியமே.

அவரைக் காண எவ்வளவோ ஆத்திரத்துடன் வந்தவர்கள் அவரைக் காணாமல் போதல் கண்களின் துர்ப்பாக்கியமே. அவரது அருமையான உபந்நியாசத்தைக் கேளாது திரும்புவது காதுகளின் துர்ப்பாக்கியமே! ஆயினும் நாமிப் போதிருக்கும் இப்பாடசாலையும் வித்துவான்களும் அந்த வள்ளலுடைய தரும குண கைங்கரியங்களைப் பற்றிப் பிரத்தியக்ஷமாகக் கோஷிக்கையில் இம் மதுரையில் மறுபடியும் நான்காம் தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கத் தடை என்ன இருக்கிறது.

அன்பர்களே! இவ்வுலகில் ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகாது. இரு கை தட்ட வேண்டும். ஆகவே, நமது பாண்டித்துரையவர்களும் சேதுபதி வள்ளலும் இது விஷயத்தில் கிருபா நோக்கங் கொண்டால் கூடிய சீக்கிரத்தில் சங்கம் ஸ்தாபிக்கப்படும்.

அதற்குப் பிரதி வருஷம் ஆவணி மாதம் சரஸ்வதி பூஜை காலத்தில் தமிழ்நாடுகளில் பரந்திருக்கும் பண்டிதர்களையும் கிரந்தங்களையும் பிரதிநிதிகாளகத் தருவித்தும், தக்க பண்டிதர்களால் பரீக்ஷித்தும்,

பஹூமானங்களையும் பட்டபிருதுக்களையும் கொடுத்தும், அவர்களியற்றிய கிரந்தங்களைப் பதிப்பித்துப் பிரபலமாக்கியும்,

கும்பகோணம் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ சாமிநாதய்ய ரவர்களையும் வேறு சில தக்க பண்டிதர்களையும் தெரிந்தெடுத்துத் தமிழ்நாட்டில் மறைந்து கிடக்கும் புராதனகிரந்தங்களையும், பாவலர் சாத்திரங்களையும் தேடிக் கொண்டுவரச் செய்து அவைகளைப் பதிப்பித்தும்,

சென்னைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ சூரிய நாராயண சாஸ்திரிகளையும் வேறு தக்கவர் சிலரையும் கொண்டு, வடமொழி ஆங்கிலோ பாஷைகளிலுள்ள நவநவமான நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பித்துப் பதிப்பித்தும்,

டிஸ்டிரிக்கு முன்சீப் பண்டிதர் மிஸ்டர் நல்லசாமி பிள்ளையையும் அவருக்குத் துணையாகச் சிலரையும் நியமித்துச் சைவசித்தாந்தாதி கிரந்தங்களை எழுதச் செய்து பதிப்பித்தும்,

மிஸ்டர் ஜி. சுப்பிரமணியம் ஐயரையும் அவருக்கு உதவியாகச் சிலரையும் சேர்த்து இராஜ்ஜிய விஷயமாகவும் அர்த்த சாஸ்திரம் கைத்தொழில் சாஸ்திராதிகளை ஆங்கிலேய பாஷையிலிருந்து மொழிபெயர்ப்பித்துப் பதிப்பித்தும், பி.ஏ., எம்.ஏ., பட்டமும் பெற்றுத் தமிழ்ப் பாஷையையும் நன்குணர்ந்த சுதேச வித்துவான்களைக் கொண்டு டிண்டல், ஸ்பென்ஸர், ஹக்ஸ்லி, லார்ட் கெல்வின், மில்டன், போஸ் முதலானவர்களுடைய தத்துவ சாஸ்திரங்களைத் தமிழ்ப்படுத்திப் பதிப்பித்தும்,

இதே மாதிரியாக ஆங்கிலேய பாஷையிலிருக்கும் பூகோள ககோள பவுதீகாதி சாஸ்திரங்களைத் தமிழில் பதிப்பித்தும், ஆகம வேத புராண இதிகாசங்களை அனைவரும் இலேசில் அறியும்படியான அகராதிகளையும், வெப்ஸ்டரைப் போன்ற பொது அகராதிகளையும் தமிழில் பதிப்பித்தும் வந்தால் சேதுபதியவர்களுடையவும், பாண்டித்துரையவர்களுடையவும் புகழ் இவ்வுலகம் உள்ள நாள் வரையில் மங்காமல் மகிமையைப் பெறுமென்பதில் சந்தேகமுண்டோ?

இச்சங்கத்தினால் நமது தேசத்துக் குண்டாகும் க்ஷேமத்துக்குக் கங்குகரையுண்டோ?

பிரபுக்களே! இது பெருத்த வேலைதான்! ஆனால், "ஆளுக்கொரு பிடி, ஆனைக்கு ஒரு சுமை" என்னும் பழமொழியைப் போல இத்தென்னாட்டில் தமிழ்மாதினிடம் அபிமானம் கொண்ட ஜமீன்தாரர்களும்,

பிராசுதார்களும், சவுகார்களும், செட்டிமார்களும், வர்த்தகர்களும், மனம் வைத்நால் வெகு சீக்கிரத்தில் ஸ்தாபிக்கலாகும்.

ஆகவே, பிரபுக்களே! நான் இதுகாறும் சொன்னதை ஒடுங்கிய மனதோடல்ல, விரிந்த சுபுத்தியால் யோசனை செய்து பாருங்கள்!

வேதநாயகன் வித்தக வார்த்தைகளின்படி 'நம்மைப் பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ், நம் மழலைச் சொல்லால் பெற்றோரை மகிழச் செய்ததும் தமிழ், நாம் பிறந்தபோது முந்தி ஆரம்பித்ததும் தமிழ், நமது பெற்றோர் பாலோடு புகட்டினது தமிழ், பெற்றோரும் பெரியோரும் ஆசிரியரும் ஆசாரியரும் ஆதியில் உபதேசித்ததும் தமிழ், அநேக நூற்றாண்டுகளாக நமது ஆதி தாய் தந்தைகள் பேசினதும் தமிழ், எழுதியதும் தமிழ், இப்போது நம் பெற்றோரும் பிள்ளைகளும் பேசுவதும் தமிழ், நமது வீட்டுப் பாஷையும் நாட்டுப் பாஷையும் தமிழ்.

நமது இக பர சாதனத்துக்கு இன்றியமையா திருப்பதும் தமிழ், அகத்தியர் நாவிலே பிறந்து ஆரியத்தின் மடியில் வளர்ந்து, ஆந்திர கன்னடாதி பாஷைகளோடு கூடிக்குலாவி, சங்கப்புலவர் நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசத்தில் சக்கராதிபத்தியஞ் செய்து, சேதுபதியவர்களுடைய குன்றாக் கொடையைக் கொடி கட்டிப் பரவச் செய்து, பாண்டித்துரையவர்களுடைய பெருமையைப் பன்னூற்றிரட்டினால் பாரெங்கும் புகச் செய்து, கடைசியாக இந்த மதுராபுரியை மண்டலமெங்கும் மேன்மைபடச் செய்ய, மதுராபுரியில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்துத் தமிழ்க்கொடியைத் தழைத்தோங்கச் செய்ய வாருங்கள்! வாருங்கள்! தமிழ்த்தாயே, உனக்கு மங்கள முண்டாவதாக!

★

*(இவ் அறிஞர் பெருமான் ஈரோட்டில் பிறந்தவர்:*
*சேலத்தில் குடியேறி வாழ்ந்தவர்)*

# பாண்டித்துரைத் தேவர்

(1867 - 1911)

*"ஆயிரத்தெண்ணூற்றறுபத் தேழாம் ஆண்டில்*
*அவதரித்த தேவர் யார்" "தெரியா தையா"*
*"தூயதுதி மஞ்சரி நூல் சைவம் சார்ந்த*
*துதிநூற்கள் தொகைத்திரட்டுப் போன்ற நூற்கள்*
*நாயகியின் தேன்முத்த வண்ணப் பாடல்*
*நாட்டுக்குத் தந்தார்யார்?" தெரியாதையா!"*
*"தீயசெயல் செய்யாத பொன்னு சாமித்*
*தேவரவர் புதல்வர்யார்?" தெரியா தையா!"*

*"அப்பாவி! செந்தமிழ்க்குத் தொண்டு செய்த*
*அறிஞரைநீ அறிந்துகொள்ளா திருக்கின்றாயே!*
*துப்பாய வானமழை வள்ளல் பாண்டித்*
*துரைத்தேவர் எனுமறிஞர் அவர்தான் தம்பி!*
*இப்போதோர் தமிழ்ச்சங்கம் மதுரை மண்ணில்*
*இருப்பதற்குக் காரணமே அவர்தான் தம்பி!*
*எப்போதும் மறவாதே அவரை! நீபோய்*
*எங்குமுள தமிழர்க்கும் இதனைக் கூறு!"*

**- உவமைக் கவிஞர் சுரதா**

★

# 3. நாடகம்

## *எஸ்.எஸ். அருணகிரிநாத முதலியார்* (1920)

'நாடகத்திற் சிறந்த நாடு நாகரிகத்திற் சிறக்கும்' என்று ஆங்கிலேயர் கூறுவர். அது முற்றும் உண்மையே. ஆதலால், நாடகத்தைப் பற்றி நாம் விசாரிப்பதற்கு முன் 'நாகரிகம்' என்றால் என்னவென்று அறிந்துகொள்ள வேண்டும். உடையிலும் நடையிலுமே நாகரிகம் அடங்கியிருப்பதாக அநேகர் நினைக்கிறார்கள். அது தவறு. உடை நடைகளையே நாகரிகம் என்று கொண்டால், வெகு சீக்கிரத்தில் நம்முடைய நாகரிக மெல்லாம் அநாகரிகமாய்விடும். உண்மையான நாகரிகம் உள்ளத்தைப் பற்றி இருக்க வேண்டும்.

*'பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க*
*நாகரிகம் வேண்டு பவர்'*

என்னும் திருக்குறளில், 'நாகரிகம்' என்பதற்குக் கண்ணோட்டம் என்று பொருள் கூறுகிறார் பரிமேலழகர். கண்ணோட்டம் என்பது தாட்சண்யம். தாட்சண்யத்துக்கு அடிப்படை அன்பு. மனிதர்கள் ஒருவரோடொருவர் அன்பு பாராட்டி வாழ்வதே நாகரிகத்தின் பயன். அன்புடைய மனமே நாகரிகத்துக்கு அடையாளம். அந்த அடையாளத்துக்கு அடையாளங்களாகும் நடையுடை முதலிய வெளித்தோற்றங்கள்.

ஆகவே, ஒரு 'நாடு நாகரிகத்திற் சிறக்கும்' என்பதாவது, அந்நாட்டினர் அன்புடைய சிந்தையராவர் என்பதேயாம். அன்பாவது, மனம் திருந்தி நுட்பமும் மென்மையும் அடைவதாகும். அதாவது, மனம் பக்குவமடைவது. ஆதலால் 'நாடகத்திற் சிறந்த நாடு நாகரிகத்திற் சிறக்கும்' என்பதன் கருத்து, 'நாடகத்தால் மனம் பக்குவமடையும்' என்பதே யாகும்.

நல்லது; நாடகம் எவ்வகையில் நமது மனத்தைப் பக்குவப் படுத்துகிறதென்று பார்ப்போம்.

அறிவிற் சிறந்த பெரியவர்கள் சிற்பம், சித்திரம், கவி, நாடகம், சங்கீதம் இவைகளை உயர்ந்த கலைகளென வகுத்திருக்கிறார்கள். இந்த உயர்ந்த கலைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

கண்ணுக்கு இன்பம் ஊட்டுபவை ஒரு பிரிவு. காதுக்கு இன்பம் ஊட்டுபவை மற்றொரு பிரிவு. சிற்பம், சித்திரம் என்பவை முன்னதிலும், கவி, சங்கீதம் என்பவை பின்னதிலும் அடங்கும். இந்த இரண்டு பிரிவுகளும் கூடி அமைந்ததாகும் நாடகம் என்பது. ஆகவே, மற்றக் கலைகளால் உண்டாகும் இன்பத்தைவிட நாடகத்தால் உண்டாகும் இன்பம் அதிகமென்று சொல்லலாம்.

மற்றக் கலைகளுக்கும் நாடகத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றியும், ஏற்றத் தாழ்வுகளைப் பற்றியும் விவரிப்ப தென்றால் விஷயம் விரியும். ஆதலால், நாடகமாவது இன்னது என்ற அளவில் நம்முடைய விஷயத்தைச் சுருக்கிக் கொள்ளுவோம்.

ஒரு பெரிய உருவத்தை அதன் அங்க அடையாளங்களில் கொஞ்சமும் வித்தியாசமில்லாமல் ஒரு சிறிய கண்ணாடி காட்டுவது போல உலக இயற்கையை மாறுபடாமல் சிற்றளவில் எடுத்துக் காட்டுவது நாடகமாகும். அதாவது மனித வாழ்க்கையின் பிரதிபிம்பத்தை நாடகமென்னலாம்.

## வாழ்க்கை

இன்ப துன்பம் முதலிய உணர்ச்சிகளின் சேர்க்கையே வாழ்க்கையாகும். ஒருவனுக்கு உயிர் இருந்தும் யாதொரு உணர்ச்சியுமின்றி அவன் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உறங்கிக் கிடப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அது வாழ்க்கையாகுமா? ஆகாது. அவ்வாறே ஒருவன் இன்பம் துன்பம் ஒன்றையும் உணராது இயந்திரத்திற்கு விறகிடுவது போல, தன் வயிற்றுக்கு உணவிட்டு இயந்திரம் வேலை செய்வதுபோல் ஏதோ ஒரு வேலையை யாதொரு உணர்ச்சியுமில்லாமல் செய்துகொண்டு வந்தால், அவனுடைய வாழ்க்கையும் வாழ்க்கையாகாது. அவன் ஒரு இயந்திரமே யாவான்.

மிருகங்களுக்குக் கூட உணர்ச்சி இல்லாமல் இல்லை. மிருகங்களைவிட உயர்ந்த உணர்ச்சிகளை அடைவதால்தான் மனிதர்கள்

மிருகங்களினும் மேலாக மதிக்கப்படுகின்றனர். வாழ்க்கையால் மனிதர்கள் அடையக் கூடிய உணர்ச்சிகளெல்லாம் சிதறிப் பரந்து கிடக்கின்றன. நாடகத்திலோ அவைகளெல்லாம் குறுக்கிச் சேர்த்துக் காட்டப்படுகின்றன. பல வருஷக்காலம் பல வகையான ஸ்திரீ புருஷர்கள் அனுபவித்த இன்பதுன்ப உணர்ச்சிகளையெல்லாம் நாடகமானது மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்குள் நமக்குக் காட்டுகின்றது. ஆதலால் நாடகத்தை வாழ்க்கையின் சாரம் (Essence of Life) என்றும் சொல்லலாம்.

எப்பொழுது நாடகம் வாழ்க்கையின் சாரமாய்விட்டதோ அப்பொழுதே அது வாழ்க்கையின் சிறந்த பாகமாக வேண்டும் என்பதும் ஏற்பட்டுவிட்டது. எப்படி என்றால், ரோஜாமலர் வேண்டுபவர்கள் அன்று மலர்ந்த ரோஜா, முதல்நாள் மலர்ந்த ரோஜா, நன்றாய் மலர்ந்த ரோஜா என்று வித்தியாசம் பாராட்டாமல் கூடியவரையில் நல்ல ரோஜாக்களை மட்டும் பார்த்து எடுத்துக் கொள்ளுவார்கள். ரோஜாவின் சாரம் வேண்டுபவர்கள் அப்படி எடுக்க முடியாது. அப்பொழுது மலர்ந்த சிறந்த ரோஜாக்களை மட்டுமே தெரிந்து எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சாரம் கெட்டுப்போகும்.

இப்படியேதான் நாடகத்திலும் வாழ்க்கையின் சிறந்த பாகங்கள் இன்னவென்று ஜாக்கிரதையோடு தெரிந்தெடுத்து அமைக்கப்பட்ட நாடகந்தான் நல்ல நாடகம் ஆகும். நல்ல ரோஜாவின்சாரம் போல மிகுந்த பயன் கொடுப்பது அவ்விதமான நாடகங்கள்தான். அவ்விதம் அமைக்கப்படாத நாடகங்கள் கெட்ட ரோஜாவின் சாரம் போல் மிகுந்த கெடுதல்களை விளைவிக்குமேயன்றி நன்மை விளைக்க மாட்டா. ஆதலால் நாடகத்தை எழுதுபவர்களும், நாடகத்தை நடிப்பவர்களும் மிகுந்த நுண்ணறிவும், பெருந்தன்மையும், அனுதாபமும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

## நாடகத்தின் பயன்

அப்படிப்பட்டவர்களால் எழுதப்படும் அல்லது நடிக்கப்படும் நாடகங்களைப் பார்ப்பதால் மக்களுடைய மன இயற்கை திருந்தும். அதனால் வாழ்க்கை சிறப்படையும். அதனால் உண்மை நாகரிகம் தலை தூக்கும்.

எப்படி என்றால், ஆன்மாவின் இயல்பு எதைச் சார்கிறதோ அதன் வண்ணமாகும். ஒரு கண்ணாடிக்கெதிரே நீலநிறத்தைக் காட்டினால்

நீலமாகவும், இன்னும் எந்த நிறத்தைக் காட்டினாலும் அந்நிறமாகவும் அந்தக் கண்ணாடியில் தோன்றும். ஆன்மாவின் இயல்பும் அப்படிப்பட்டதே யாகும். அதனால்தான் தாயுமானவர்,

*யாதொன்று சாரின் அதன் இயல்பாய் நின்று*
*பந்தமறு பளிங்கனைய சித்துநீ*

என்றார். இதை நாம் பிரத்தியட்ச அனுபவமாகவும் அநேக நாடகங்களிற் காணலாம்.

பிரகலாத நாடகத்தைக் காண்பவரிற் சிலர் நரசிம்ஹாவதாரத்தைக் கண்டதும் தாங்களும் நரசிம்ம வேசம் கொள்ளப் பார்த்திருக்கிறோம். அரிச்சந்திரனும் சந்திரமதியும் தங்கள் பிள்ளையை இழந்து, பரிதவிப்பதைக் காண்போர் தாங்கள் தங்களுடைய பிள்ளைகளை இழந்துவிட்டவர்களைப் போல கண்ணீர் விட்டுத் துக்கிப்பதையும் கண்டிருக்கிறோம். நாடகமேடையில் சிவாலயத்தைக் கண்டு நந்தனார் வேடந்தரித்து வருவோன் கைகூப்பினால் சபையோர்களும் தங்களை மறந்து கைகூப்பி வணங்கி பக்தி வெள்ளத்தில் அழுந்துகின்றனர். இப்படிப்பட்ட உணர்ச்சிகளைச் சிறிது நேரமாவது அனுபவித்தால் மனம் திருந்துவது ஓர் ஆச்சரியமல்லவே.

சச்சரவிட்டு வாழும் இரண்டு சகோதரர்கள் ஓரிரவு பாதுகா பட்டாபிஷேக நாடகத்தைப் பார்த்து வந்தால் மறுநாள் ஒரு நாளேனும் அவர்கள் தம் சச்சரவை விட்டு ஒற்றுமை யுற்றிருப்பார்கள் என்பது திண்ணம். இவ்வாறே நாடகத்தால் விளையும் நன்மைகள் பல உண்டு. ஆனால் ஒன்று.

நாடகத்தைக் காண்பவர்களுக்கு அது உண்மையாய் நிகழக் கூடியதுதான் என்ற உணர்ச்சி இல்லாவிட்டால், அந்த நாடகத்தால் உண்டாகும் பயன் ஒன்றும் இல்லை என்னலாம். இந்த உண்மை உணர்ச்சியைக் காட்டுவதில் நம் நாட்டு நாடகங்களைவிட மேல் நாட்டு நாடகங்கள் சிறந்து விளங்குகின்றன.

நம் நாட்டவர்கள் பெரும்பாலும் சங்கீதத்தின் பேரிலேயே நாட்டமாய் இருந்து உண்மைத் தோற்றத்தைக் கைவிட்டு விடுகின்றனர். இதனால் சங்கீதத்தைக் குறைவுபடுத்தியதாகக் கொள்ளக் கூடாது. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்னும் பழமொழி சங்கீதத்திற்கும்

பொருந்தும். சிவாலயத்திற்கு முன்னால் இருந்து நந்தனார் கைகூப்பித் தொழும்போது பக்திவெள்ளத்தினால் இயற்கையாகவே பண்ணும் பாட்டும் ஊற்றெடுத்துப் பெருகுவது போலப் பெருகும். அவ்விடத்தில் பக்திரசமான பாட்டுக்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பாடக்கூடும். அதைவிட்டு, நந்தனார் வேதியரிடத்தில் உத்தரவு கேட்பதும் வேதியர் அவருக்கு விடை கொடுப்பதும் பாட்டாகப் பாடினால் நாமும் நம் நாட்டு நாடகநிலை இன்னும் இப்படி இருக்கிறதே என்று ஒப்பாரிப் பாடிப் புலம்ப வேண்டியிருக்கிறது.

நந்தனார் சரித்திரமட்டும் இப்படி நடிப்பதாக நான் சொல்லவில்லை. அநேக நாடக சபைகளில் 'எல்லப்பச் செட்டி லெக்க ஏகலெக்க' என்றபடி எல்லா நாடகங்களும் இவ்விதமாகத்தான் நடிக்கப்படுகின்றன. 'தடுக்கம்' 'ஸ்பெஷல்' என்று விளம்பரம் செய்யும் நாடக சபைகள் எத்தனையோ இருக்கின்றன. இவ்விதமான குறைகளை நீக்குவதற்கு தனலட்சுமி விலாச சபையாரைப் போன்ற சில கௌரவ சபையார் முன்வந்திருப்பது நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு நற்குறியாகும்.

இத்தகைய சபையார்கள் மேல்நாட்டு நாடகங்களைப் பின்பற்றிச் செய்யக்கூடிய சீர்திருத்தங்கள் பல உள. அவற்றுள் முக்கியமானது கால இயல்புக்கு ஏற்றவாறு ஜனங்கள் திருந்தி வாழக்கூடிய விதமாக நல்ல ஆசிரியரைக் கொண்டு பல நவீன நாடகங்கள் இயற்றி அவற்றை இயற்கைக்கு மாறாகாதபடி நடித்துக் காட்டுவதேயாகும்.

'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்பது பழமொழியாதலால், நமது புராணேதிகாசக் கதைகள் எவ்வளவுதான் அருமையுடையனவாய் இருந்தபோதிலும் திரும்பத் திரும்ப அவைகளையே பார்ப்பது சிலர்க்குச் சலிப்பாகத் தோன்றக்கூடும். அதுவுமல்லாமல் நமது முன்னோர்கள் தேடி வைத்த பொருளையே அநுபவித்துக் கொண்டு நம்முடைய முயற்சியால் புதுப்பொருள் ஏதும் தேடாமல் இருப்பது நமது ஆண்மைக்கும் பெருமைக்கும் பழுதாகும். ஆகையால், பழைய நாடகங்களோடு புதிய நாடகங்களும் சில இயற்றி நடித்தல் வேண்டும்.

இதுகாறும் கூறியதிலிருந்து நாடகத்தால் நாகரிகம் சிறக்குமென்பதும், நாடகத்தின் தன்மை இத்தகையதென்பதும், நாடகத்தால் மனம் திருந்தும் வகை இவ்வாறு என்பதும், தற்கால நாடகங்களில்

உள்ள குறைகள் இவை என்பதும், ஏற்படவேண்டிய சீர்திருத்தங்கள் இவையென்பதும் ஒருவாறு சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன.

முடிவாக ஒரு விஷயம் சொல்லி எனது உபந்நியாசத்தை நிறுத்தி விடுகின்றேன். மேல் நாட்டில் நாடகமென்பது தலைதூக்குவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னமே நம் இந்திய நாட்டில் மகாகவி காளிதாசர், ஸ்ரீஹர்ஷ தேவர், பவபூதி முதலிய வித்துவச் சிரோமணிகள் சமஸ்கிருத பாஷையில் உலகமெல்லாம் மெச்சக் கூடிய அரிய நாடகங்கள் பல எழுதியிருக்கின்றார்கள். நமது தமிழ்ப் பாஷையிலும் பல நாடகக் கிரந்தங்கள் இருந்ததாகத் தெரிகின்றது. ஆனல், நமது புண்ணியக் குறைவால் அவை இப்பொழுது நமது கைக்கு எட்டவில்லை. தமிழ்ப்பாஷை இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருப்பதனாலேயே இதில் பல நாடக நூல்களும் நாடக இலக்கணங்களும் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகின்றது.

(சென்னை புரசவாக்கம் தனலட்சுமி விலாச சமாஜத்தில் திருவாளர் எஸ்.பி. சத்தியநாடார் எம்.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் திரு.எஸ்.எஸ். அருணகிரிநாத முதலியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.)

*இதழ்: நல்லாசிரியன் (1920)*

★

*இப்பெருமகனார் 'திராவிடன்' இதழில் பணியாற்றிய எழுத்தாளர் ஆவர். கல்விச்சாலையில் ஆசிரியப் பணியாற்றிய இவர்தம் மகனும் மகளும், மருகரான தமிழ்மன்னன் எனும் பெயரில் பலப்பல அரியனவற்றை எழுதி வெளியிட்டு வருகிற இராச கோபாலன் அவர்களும் தமிழ் வளர்க்கும் குடும்பத்தினராவர்.*

# 4. வடலூர்
## சமரச சன்மார்க்க மகாநாடு

***கா. நமச்சிவாய முதலியார்*** அவர்கள்
இம் மகாசபைக்குத் தலைமை வகித்தபோது
கூறிய முன்னுரை. 28.1.1926

*அருள்பழுத்த செழுங்கனியே அகம்பழுத்த சிவஞான*
*அமுதே முத்திப்*
*பொருள்பழுத்த அருட்பாவை எமக்களித்த தெய்வமணப்*
*பூவே என்றும்*
*மருள்பழுத்த அடியேங்கள் மனவிருளை அகற்றவரு*
*மணியே மெய்ம்மைத்*
*தெருள்பழுத்த வடலூர்வாழ் இராமலிங்க நின்னருளைச்*
*சிந்திப் பேனே!*

*தேன்கலந்த திருவமுதாம் தேவாரத் திருப்பாட்டைத்*
*தினமு நாடி*
*'நான்கலந்து பாடுங்கால் நானறியேன் எனை' எனநீ*
*நவின்ற பாட்டை*
*வான்கலந்த வடலூர் வாழ் இராமலிங்க மணியேயான்*
*வழுத்துங் காலை*
*ஊன்கலந்த உயிரெல்லாம் உளமெல்லாம் உணர்வெல்லாம்*
*உருகு மாலோ.*

*வள்ளால்நின் வாசகத்தை வடித்ததமிழ்த் தேனென்கோ*
*வானோர் எய்தா*
*அள்ளாத அமுதென்கோ அருளென்கோ அன்பென்கோ*
*அறமே என்கோ*
*பொள்ளாத மணியென்கோ பொருளென்கோ பொன்னென்கோ*
*புலன்கள் நாடி*
*விள்ளாத வீடென்கோ இராமலிங்க மாமணியே*
*விரிக்கொ ணாதே..*

சமரச சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்த அன்பர்காள்! திருவருட் பிரகாச வள்ளலாராகிய சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவடித் தாமரைகட்கு மெய்யன்பு பூண்டொழுகும் தொண்டர்காள்! உங்கள் அனைவோர்க்கும் அடியேன் செய்துகொள்ளும் விண்ணப்பமாவது:

வடலூர் என்னும் இத்தெய்வத் திருப்பதிக்கண் இன்று நடைபெறும் இம்மகா சபைக்கு அடியேனைத் தலைமை வகிக்குமாறு நியமித்த நுமது பெருந்தகைமைக்கு அடியேன் முதற்கண் மனமார்ந்த வந்தனம் செலுத்து கின்றேன். இன்று இம் மகாசபையைத் திறந் துதவி நம்மனோர்க்கு வழி காட்டி நம் கருத்துக்கள் வாய்ப்பச் செய்த பேரறிவாளராகிய சர். டி. சதாசிவ ஐயர் அவர்கட்கும் என் அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்தி, அப்பெரியாரை வாயார வாழ்த்துகின்றேன்.

சென்னை இராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்க சங்கத்துக் காரியதரிசியும், இம்மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தின் தலைவரும் ஆகிய சாம்பசிவ முதலியார் அவர்களும், மற்றுஞ் சில அன்பர்களும் அறிவு ஆற்றல்களில் ஆற்றவும் சிறியேனாகிய அடியேனை இம்மகா சபைக்குத் தலைமை வகிக்குமாறு கேட்ட காலத்தே, என் சிறுமையினையும் இம்மகாநாட்டின் பெருமையினையும் உணர்ந்து என் மனமே என்னை இசைய வொட்டாது தடுத்ததாயினும், சதாசிவமும் சாம்பசிவமும் சமரச சன்மார்க்க சங்கமும் என்பால் துணை நின்று உதவி புரியும் என்னுந் துணிவு தூண்டியதனால், அதற்கு உடன்பட ஒருவாறு ஒருப்பட்டேன்.

ஒருவன் தனக்கு வரும் சிறுமை பெருமைகளைக் கருதாது நன்முயற்சிக்கண் தலையிட்டுக் கொள்ளுதல் தக்கதேயாம் என்னும் ஆன்றோர் கருத்தும் என் மனத்தில் தோன்றி என்னை ஊக்கி நின்றது.

அன்பர்காள், நந்தம் தமிழகத்தே தொன்று தொட்டு வழங்கி வரும் வரலாறுகளை ஆதரவோடு ஆராய்ந்து பார்ப்பவர்க்குக் காலந்தான் கடவுளோ, கடவுள்தான் காலமோ எனக் கருதுவதற்குப் பெரிதும் இடமுண்டாகும். அஃது யாதோ எனின், பண்டைக் காலத்தே மாந்தர்கள் தம் எண்ணங்கள் கைகூடுமாறு எண்ணித் தொழுதலும் கடவுளர் அவர்கட்குக் கண்கூடாக வந்து நின்று வரமளித்துச் சென்றனர் என்று வழங்கும் வரலாறுகள் எண்ணிறந்தனவாம்.

நம் நாட்டில் தமிழ்மொழியின் பண்டைநாள் வரலாற்றைப் பாகுபடுத்து நாடுங்கால், அகத்தியனார் தென்னாடு போந்து தமிழ்மொழியைப் பயின்று தலைச் சங்கத்தைத் தாபித்த காலமே தொடக்கமானதாகத் தோன்றும். அக்காலத்தே திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும் முன்னின்று அருள்

புரிந்தனர் என்னும் உண்மைக் கூற்று உலகறிந்ததேயாம். இடைச் சங்கம் நடந்த காலத்தே அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் அக்கடவுளர் அருள் பெற்றுத் தமிழாராய்ந்தனர் என்பதும் தமிழ்மக்கள் அறிந்த உண்மையாம். கடைச் சங்கம் நிகழ்ந்த காலத்தே நல்லிசைப் புலவராய நக்கீரனார், 'நெற்றிக்கண் காட்டினுங் குற்றங் குற்றமே' என்று நவின்று வாதாடுமாறு சுந்தரேசர் வந்து நின்றனர் என்னும் வரலாற்றை, கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்னும் செந்தமிழ்ப் பாடலை அன்புறக் கற்றோர் ஐயமுறுவரோ! மற்றும் பொய்யடிமை இல்லாத புலவர்பெருமக்கள் விளங்கிய அச் சங்க காலத்தே தெய்வத் திருவருளால் நடந்த அற்புதச் செயல்களை அளவிட்டுக் கூறுதல் எளிமையாமோ?

அன்புடையீர், இது நிற்க, பிற்காலத்தே திருவருட் செயலாய் சைவசமயாசாரிய மூர்த்திகளும் உண்மை நாயன்மார்களும், வைணவப் பெரியாரும்இவ்வுலகில் அவதரித்தருளி நம்மனோரெல்லாம் உண்மை கண்டு உய்யுமாறு அற்புதச் செயல்கள் பற்பல ஆங்காங்கே நிகழ்த்தி அருள் புரிந்தனர். அப்பெரியார் அனைவருக்கும் தெய்வத் திருவருள் கைமேற் கண்ட கருந்தனமாய், பண்பால் தோன்றிய பழம் பொருளாய் விளங்கிய உண்மைகளை உணராதார் யாவர்?

பின்னர், 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே' என்னும் உறுதியுரையைக் கண்டதும், மலைபோலுஞ் செல்வமும் நிலையாதென்றுணர்ந்து முற்றத் துறந்த பட்டினத்தடிகளும், முருகப் பெருமான் திருவடி ஞானத்தை ஒருவாதடைந்த அருணகிரிநாதரும், பவஞானம் நீங்கித் தவராஜ சிங்கமாய் விளங்கிய தாயுமான சுவாமிகளும் ஆகிய மெய்யன்பர்கள் தோன்றி நம்மனோரையெல்லாம் உய்வித்தருளினர்.

ஆன்மநேய முற்ற அன்பர்களே, இதுகாறும் யாம் கூறிவந்த ஆன்றோர் அனைவரும் அவ்வப்போது இப்பூவுலகில் தோன்றி, தெய்வத் திருவருள் கைவரப் பெற்று, ஆங்காங்கே அற்புதங்கள் நிகழ்த்தி உண்மைப் பொருளை நம்மனோர்க்கு உணர்த்தித் திகழ்ந்தனர் என்பதை அவர்தம் தெய்வத் திருவாக்கே தெள்ளிதின் விளக்குகின்றன; அன்றியும், அன்னார் திருவவதாரம் செய்த திருப்பதிகளும், அற்புதங்கள் நிகழ்த்திய நற்பதிகளும் இன்றும் நின்று நிலவுகின்றனவன்றோ! இம்மட்டோ, ஆங்காங்கே காணும் கற்சிலைகளும் கல்வெட்டுக்களும் சாயாது நின்று சான்று பகர்கின்றன. இன்னும் என்னதான் வேண்டும்! இவையனைத்துங் காலத்தாற் கண்ட கடவுட் செயல்களே என்பதை மறுத்துக்கூற எவரால் இயலும்? ஒருவராலும் இயலாதன்றே!

இனி, நந்தம் திருவருட் பிரகாச வள்ளலாராய சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அவதாரஞ் செய்து, நம்மனோர்க்கு அறிவுறுத்திய

உண்மைகளையும் நடத்தி யருளிய அற்புதங்களையும் என் சிற்றறிவிற்கு எட்டிய வரையில் எடுத்துக் கூறி என் முன்னுரையினை ஒருவாறு முடித்துக் கொள்ள முன்னுவேனாக.

திருவருட் செல்வர்காள், நந்தம் வள்ளலாரது அருமை பெருமைகளைக் கூறுங்கால் எவ்வகையிலேனுங் குற்றங் குறைகள் காணுமாயின் அவற்றைப் பொறுத்தருளுமாறு உங்கள் திருமுன் விண்ணப்பஞ் செய்து கொள்ளுகின்றேன்.

பெரியீர், நந்தம் வள்ளற் பெருமானைக் கண்ணாரக் கண்டு வாயார வாழத்திய பெரும் பேற்றைப் பெற்ற புண்ணிய சீலரிற் பலர் இங்குக் குழுமியிருத்தல் கூடும். அப்பெரியார் காலத்திற்றானே நிகழ்ந்த அற்புதங்களைக் கண்டார் வாய்க் கேட்டு உண்மையுணர்ந்து உய்யுந் திறனடைந்த அன்பரிற் பலர் இங்கே அடைந்திருத்தல் கூடும்; அம்மாதவப் பெருந்தகையை உபாசனா மூர்த்தியாகக் கொண்டு செய்தவம் கைவரப் பெற்றுத் திகழுந் தொண்டரிற் பல்லோார் ஈண்டுத் தோன்றியிருத்தல் கூடும். அத்தகைய அன்பர்கட்கெல்லாம் இவ்வெளியேன் கூறும் புன்மொழிகள் ஒரு பொருளாகத் தோற்றுதல் எங்ஙனம்.

அன்பர்காள், இன்று இங்கே கூடியுள்ள ஆயிரக் கணக்கான அன்பர்களின் திருவுருவப் பொலிவையும் சிவஞானத் தெளிவையும் தம்மை மறந்த தன்மையையும், தத்போதம் அழிந்த தகைமையையும் பந்தமகன்ற பான்மையையும் சமரசஞானச் சார்பையும் உண்மையுணர்ந்த உவகையையும் நாம் கண்ணாரக் காணும் இக்காட்சி யொன்றே நம் வள்ளலார் மாட்சிமைகளை நமக்கு நன்கு விளக்குமன்றே!

நம் வள்ளற் பெருமான் சுமார் நூறுயாண்டுகளுக்கு முன்னர் (கி.பி. 1823 இல்) சென்னையிற் றோன்றி நல்லறிவும் நல்லொழுக்கமும் உடன் வளர வளர்ந்து திருவருள் ஞானங் கைவரப் பெற்று விளங்கினர்.

இப்பெரியார் வரலாறு அருட்பா முதலியவற்றைத் தொகுத்து, உண்மை நேயம் வாய்ந்த காரணப்பட்டுக் கந்தசாமிப் பிள்ளையவர்கள், மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கள் ஆகிய இவ்விருவரது துணையைக் கொண்டு, இராமச்சந்திரபுரம் ஸ்ரீமான் முத்தையா செட்டியார் அவர்கள் அழகுறப் பதித்து பலர்க்கும் இலவசமாக உபகரித்தனர். அதன் முகத்தில் நந்தம் வள்ளலாரது வரலாறுகளும் அவர் செய்தருளிய அற்புதங்களும் முறையே அமைக்கப் பெற்றுள்ளன; ஆதலின், அவற்றை அடியேன் ஈண்டு விரித்துரைத்தல் மிகையாகும்; ஆண்டுக் கண்டுகொள்க.

தெள்ளத் தெளிந்த உள்ளன்புடையீர். நந்தம் வள்ளற் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாக்களின் மாண்மைப் பற்றி ஒரு சிறிது கூறுவோம்;

திருவருட் பாடல்களோ பல்லாயிரமாம், அவற்றின் பண்போ பாலினும் இனிப்பது, தேனினும் தித்திப்பது, உள்ளத்தை உருக்குவது, கள்ளத்தைக் கருக்குவது; பவத்தைப் போக்குவது, அவத்தை நீக்குவது, இன்பத்தை ஊட்டுவது, துன்பத்தை வீட்டுவது, வீட்டு நெறியைக் காட்டுவது. இத்தகைய இன்னிசைப்பாக்களை நாம் அடையப் பெற்றது நந்தம் அருந்தவப் பயனேயன்றோ?

*'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்'*

என்னும் திருவாக்கிற்குத் திருவருட்பா தக்க இலக்கியம் ஆகுமன்றே.

நமது வள்ளலார் தம் கருத்துக்களையும், அனுபவங்களையும் உரை நடையிலும் செய்யுள் நடையிலும் எழுதி உலகினர்க்குப் பரக்கக் காட்டி விளக்கியிருக்கின்றனர். அன்னார் தம் விருப்பத்தைக் கூறும் செய்யுட்களில் ஒன்றை ஈண்டு எடுத்துரைப்போம்.

*அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்*
*ஆருயிர்கட் கெல்லாநான் அன்புசெயல் வேண்டும்*
*எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே*
*எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்*
*செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்*
*திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்*
*தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்*
*தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.*

இவ்வாறே தம் விருப்பத்தை இன்னும் பல பாக்களினால் வெளியிடுகின்றனர்.

வள்ளலார் அகவொழுக்கம் புறவொழுக்கங்களை அன்புடன் உணர்த்தி, அகமார்க்கம் புறமார்க்கம் என்னும் இரு மார்க்கங்களையும் வகுத்தனர். இவையனைத்தினும் சீவகாருண்ய ஒழுக்கமே சிறந்த ஒழுக்கம் என்று திருவாய் மலர்ந்து செய்து காட்டினர். உடற்றூய்மை உண்டித்தூய்மை ஒழுக்கத்தூய்மை முதலியவற்றை உரை நடையில் எழுதி உபகரித்தருளினர். ஆன்மநேய சுகமார்க்கத்தை அருட்பாக்களினால் அருளிச் செய்தனர்.

நந்தம் வள்ளலார் தாய் மொழியாகிய தமிழ்மொழியைத் தம் உயிரினுஞ் சிறந்த உயர்மொழியாகக் கொண்டு போற்றி வந்தனர் என்பது அன்னார் எழுதியருளிய 'தமிழ்' என்னும் கட்டுரையே காட்டுமன்றே;

தமிழ்மக்களே, வள்ளலார் மேற்கொண்ட வண்டமிழ் மொழியை வளர்மின், வாழ்த்துமின், அத் தெய்வமொழி தளர்வடையாது தழைத்தோங்கச் செய்மின், அருட்பா முதலிய அருமறை நூல்களைப் படிமின், பாடுமின்.

வள்ளலார் சமரச சன்மார்க்கம் உலகெங்கும் ஓங்கி வளர உள்ளங் கொண்டனர். சாதி சமய வேறுபாடுகளைக் கருதாது மெய்யன்பு பாராட்டிச் சார்ந்து ஒழுகுதலே சமரசமாம். அத்தகைய சமரசம் கைவர ஒழுகுதலே சன்மார்க்கமாகும். இந்நிலையை மெய்ந்நிலையாகக் கொண்டு ஒழுகுவோமாயின் நாம் நம் வள்ளற் பெருமானை உள்ளன்போடு வழிபட்டவ ராவோம், வணங்கினவ ராவோம். அப் பெரியாரது பொன்னடிக்குத் தொண்டு பூண்ட தூய்மையராவோம்.

அன்றியும், மெய்யன்பர்கள், இறைவன் திருமுன் சாதிவேற்றுமையில்லை, சமய வேற்றுமையில்லை, செல்வர் வறியர் என்னும் வேற்றுமையில்லை. உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேற்றுமையும் இல்லை. சகலரும் சமானர். ஒன்றே தெய்வம், ஒன்றே குலம், ஒன்றே சமயம் என்றே எண்ணுக என்பதே நந்தம் வள்ளலார் நமக்குக் காட்டிய ருளிய மார்க்கம், அதுவே சமரச சன்மார்க்கம்.

சென்னை இராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்க சங்கத்தார் திருவொற்றியூரில் திருமடம் ஒன்று தாபித்து, மாதந்தோறும் மகேசுர பூசை நடத்தி வருகின்றனர். திருஅருட்பாவை எங்கும் பரவச் செய்கின்றனர். திருவருட்பாவின் சிறப்புக்களையும் உண்மைகளையும் வள்ளலாரது கொள்கைகளையும் சிறுசிறு நூல்களின் வழியே வெளியிடுகின்றனர். இவ்வாறே சமரச சன்மார்க்க சபைகள் தமிழ் நாட்டில் ஆங்காங்கே தோன்றி வள்ளலார் கொள்கைகளை வளர்த்து வருகின்றன. ஆயினும், தலைச் சங்கம் என்றும் கிளைச் சங்கம் என்றும் ஏற்பட்டு ஒற்றுமைப்பட்டு உழைத்து வருமாயின் நன்மை விளையும் என்பது அன்பர் பலர் கொண்டுள்ள கருத்தாகும்.

இவ்வகையில் சென்னையிலுள்ள சபை தலைச்சபையாகவும் தமிழ் நாட்டில் ஆங்காங்கே ஏற்படும் சபைகள் கிளைச் சபைகளாகவும்

ஏற்படுமாயின் ஒற்றுமையும் சமரசமும் உண்டாகும். அன்றியும் இச்சபையோர் அனைவரும் வள்ளலார் கருத்துக்களுக்கு ஒரு சிறிதும் மாறுபடாத மனமுடையராதல் வேண்டும். தமிழ்மொழியைப் பல்லாற்றானும் வளர்த்தல் வேண்டும், புத்தக சாலைகள் அமைத்தல் வேண்டும்; புதியனவும் பழையனவும் ஆகிய நூல்களைத் தேடி வெளியிடுதல் வேண்டும். அன்பர்காள், எழுமின்! எழுமின்!! எழுமின்!!!

உண்மை நேயம் வாய்ந்த மெய்யன்பர்களே, இனி நம் கருத்துக்கள் அனைத்தும் எண்ணியாங்கே ஈடேறுமாறு நம் வள்ளற் பெருமானை உள்ளன்போடு வாழ்த்தி வழிபடுவோமாக.

*எழுவோம் எழுவோம் அனைவரும் எழுவோம்*
*தொழுவோம் தொழுவோம் துணைக்கரம் கூப்புவோம்*

*அராமலி சடையோற் கன்புரு வான*
*இராம லிங்கன் இணையடி வாழ்த்துவோம்*

*சமரசம் ஓங்குக சன்மார்க்கம் ஓங்குக*
*திமிரம் நீங்கிச் செகமெலாம் ஓங்குக*

*வாழையடி வாழையா வந்த மரபினர்*
*கோழை யகன்றே குலவி வாழ்க*

*அன்பர் வாழ்க ஆண்டான் வாழ்க*
*இன்பம் பெருகி எல்லாம் வாழ்க*

*வாழ்க வடலூர் வாழ்க வளாகம்*
*வாழ்க வடலூர்ச் சபையும் வாழ்கவே.*

★

# 5. 3-வது தமிழ்ச் சித்த வைத்திய மாநாடு - கண்காட்சிகள்

திருமலை நாயக்கர் மகால்
மதுரை (19. 4. 1927)

(வரவேற்புக் கழகத் தலைவர், உத்தமபாளையம்
***எம். டி. சுப்பிரமணிய முதலியார்*** அவர்கள்
ஆற்றிய சொற்பொழிவு.)

சீமாட்டிகளே! கனவான்களே!! சித்த வைத்தியர்களே!!!

தெய்வப் புலவர்கள் கூடி முத்தமிழ்ச் சங்கம் வளர்த்துச் செந்தமிழ் ஆராய்ந்த இந்த மதுராபுரி என்னும் நான்மாடக் கூடலிலே, நாகரீகத்திற் சிறந்த பண்டைய காலத் தமிழ் மக்கள் மன்னன் அரசு புரிந்த பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையிலே, திருமலை நாயக்கர் மகாலிலுள்ள இந்தக் கொலுமண்டபத்தில் உங்களை எல்லாம் இந்த மகாநாட்டின் சார்பாக நான் வரவேற்கிறேன். இந்த மகா மண்டபத்தில் நாமெல்லோரும் கூடியிருப்பதானது, சித்த வைத்தியத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய நல்ல காலக் குறி என்று எண்ணுகிறேன்.

வெளியூர்களிலிருந்து இங்கு வந்திருக்கிற பிரபுக்களுக்கும் சித்த வைத்தியப் புலவர்களுக்கும் அவரவர்கள் வேண்டியதற்குத் தக்கபடி சௌகரியங்கள் செய்து கொடுக்க முடியாவிட்டாலும், எங்களால் கூடிய வரையில் இடவசதி முதலிய ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அப்படிச் செய்திருப்பதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும் பொறுத்துக் கொள்ளுவீர்க ளென்று நம்புகிறோம்.

## *தமிழ் தொன்மை*

நமது தமிழ் நாடானது உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் மிகப் பழைய நாடு என்று சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் பலரும் கூறுகின்றனர். கன்னியாகுமரிக்குத் தெற்கே 49 தமிழ் நாடுகள் இருந்து கடலில் மூழ்கி விட்டதாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

தமிழ் நாகரீகம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று

இடைச்சங்கம், கடைச் சங்கம் முதலிய மூன்று சங்கங்கள் பத்தாயிரம் ஆண்டுகள் வரை நடைபெற்றதாகவும் கூறுகின்றனர். கடைச் சங்கமானது மறைந்து இற்றைக்கு 1800 ஆண்டுகள் ஆய்விட்டன என்றால், தமிழர் நாகரீகம் எவ்வளவு காலத்திற்கு முற்பட்டது என்பதைக் கவனியுங்கள்.

## பதினெண் சித்தர் சித்த வைத்தியம்

முதற் சங்க காலத்திலேயே சகல தத்துவ நூல்களும், தமிழ் வைத்திய நூல்களும் இருந்திருக்கின்றன. ஆதியில் சிவனாரும் முருகவேளும் வைத்தியத்தை நந்திக்குச் சொன்னதாகவும், நந்தி மூலமாகத் திருமூலர், போகர் முதலிய பதினெட்டுச் சித்தர்களும் தெரிந்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறது. இந்தப் பதினெண் சித்தர்களும் தமிழ் மொழியில் எழுதியிருக்கிற வைத்தியத்தைச் சித்த வைத்தியம் என்று சொல்லுகிறோம்.

சித்த வைத்தியமானது எல்லா வைத்தியங்களுக்கும் முற்பட்டது என்று சொல்ல இடமிருக்கிறது. பெரிய படிப்பாளியாகிய லேட் திவான் பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை எம்.ஏ., பி.எல்., எல்.எல்.பி., ஐ.எஸ்.ஒ., சென்னைச் சட்டசபை பிரசிடெண்டு அவர்கள் 'ஜயினர், பௌத்தர், கிரேக்கர், உரோமர் நூல்களைக் காட்டிலும் நம் மருத்துவ நூல் முந்தியதெனக் கருத இடமுண்டு. நாம் கையாடிய நூல்கள் எல்லாவற்றிலும் இம் மருத்துவ நூலிலேயே பிறருதவியின்றி உழைத்திருக்கிறோம். என்றும்...... ஐயமின்றிச் சொல்லலாம் என்றும், மருத்துவத்திலோ என்றால் நாம் மற்ற நாடுகளிலிருந்து கைக்கொண்டது கொஞ்சம். நாமே உண்டு பண்ணியதும், மற்றவர்களுக்குப் பகுத்துரைத்ததும் அதிகம் என்றும், நமது மருத்துவப் பயிற்சியோ நாளுக்கு நாள் பரவி நமது நாட்டவரில் பெரும் பகுதியாரைக் கவர்ந்து கொண்டிருக்கிறது' என்றும் சொல்லியிருக்கிறார்.

## சித்த வைத்தியத்தின் பெருமை

ஆதலால் சித்த வைத்தியம் அனுபவத்தால் சிறந்தது என்று தெரிகிறது. ஆங்கிலம் முதலிய பிற வைத்திய முறைகளில் இப்பொழுது குணப்படுத்த முடியாது என்று சொல்லப்படுகிற தீராத வியாதிகளைச் **(Incurable Diseases)** சித்த வைத்தியர்கள் குணப்படுத்தி இருக்கிறதில் சிலவற்றை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

சித்த வைத்தியம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கையாளப்பட்டு வருவது. அதனால் அனுபவத்தில் சிறந்தது. நமது நாட்டு

மக்கள் உடம்புக்கும் உணவுக்கும் தேச கால இயல்புகளுக்கும் பொருத்தமானது. பிற வைத்தியங்களில் தீர்க்க முடியாத நோய்களைத் தீர்க்க வல்ல உயர்ந்த மருந்துகளை ஏராளமாக உடையது. பதினாயிரக் கணக்கான பாட்டுகள் அடங்கிய அச்சுப் புத்தகங்களும் ஏட்டுச் சுவடிகளும் மிகுந்துள்ளது. நாடுகளிலும் நகரங்களிலும் அரண்மனைகளிலும் இன்றைக்கும் இருந்து வருகிறது சித்த வைத்திமே.

இவ்வளவு பெருமை வாய்ந்த சித்த வைத்தியத்தை நமது நாட்டுச் செல்வம் படைத்த மக்களும், அரசு புரிவோரும் போற்றாமல் விட்டுவிட்டதினால் சித்த வைத்தியர்களுடைய நிலைமை தாழ்ந்து வருகிறது. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதை அரசியல் முதலாவதாகக் கவனிக்க வேண்டும்.

சமீப காலத்தில் திராவிட மக்கள் தலைவராகிய பனகால் ராஜா அவர்களுடைய பெருந்தன்மையான முயற்சியினால், சென்னையில் இந்திய மருத்துவ கலாசாலை ஒன்றை அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நாமெல்லோரும் கனம் பனகால் ராஜா அவர்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

சென்னை ராஜதானியில் 22,832 கிராமங்களிருக்கின்றன. இவைகளுக்கு 800 ஆங்கில வைத்திய ஆஸ்பத்திரிகள்தான் அமைத்திருக்கிறார்கள். அப்படியானால் 28 கிராமங்களுக்கு ஒரு ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. ஆகையால், மற்ற கிராமங்களிலுள்ள மக்களுக்குச் சுதேச வைத்தியர்கள்தான் மருந்து கொடுத்து இன்றைக்கும் குணப்படுத்தி வருகிறார்கள் என்று நிச்சயமாய்த் தெரிகிறது.

சென்னை ராஜதானியில் மொத்தம் 25,815 வைத்தியர்களில் நாட்டு வைத்தியர் சுமார் 20,000 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், நமது வைத்தியம் எவ்வளவு பெரியது என்று பாருங்கள். நமது வைத்தியம் கிராமத்தார்களுக்கும், ஏழைகளுக்கும் உதவியுள்ளது. ஏனென்றால், ஆங்கில வைத்தியத்தில் ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு மருந்துச் செலவு 3 அணா முதல் •6 அணா 2 பைசா வரையில் ஆகிறது. வடமொழி ஆயுள்வேத வைத்தியத்தில் 9 முதல் 11 பைசா செலவாகிறது. ஆனால் சித்த வைத்தியத்தில் 6 முதல் 7 பைசாதான் செலவாகிறது. ஆகையால், தமிழ்ச் சித்த வைத்தியமே நமக்குப் பல வழிகளிலும் நன்மையுள்ளதாயிருக்கிறது. நமது நாட்டில் இதை மறுபடியும் நிலைநாட்டுவதற்கு நாமெல்லாரும் பெரிய முயற்சியும் கிளர்ச்சியும் செய்ய வேண்டும்.

இப்பொழுது சென்னை சட்ட சபையில் வைத்திய உதவியைப் பற்றி வாதம் நடப்பதில் வெளியூர்களுக்குப் போதுமான அளவு வைத்திய

உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 100–க்கு 80 பேர்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்குப் போதுமான வைத்திய ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அரசாங்கத்தாருடைய கடமையாகும்.

அவ்வாறு சென்னை ராஜதானியிலுள்ள 22,832 கிராமங்களுக்கும் ஆங்கில வைத்திய சாலைகளை அமைப்பதானால் அரசாங்கத்திற்கு ஏராளமான பொருட் செலவு ஏற்படும். அப்படியல்லாமல், சித்த வைத்தியத்திற்கு உதவி செய்து அதிகமான சித்த வைத்தியர்களை உண்டாக்கி விட்டால், பணச் செலவு மிகவும் குறைவாக இருக்கும். மேலும் வைத்தியசாலைகளுக்காகக் கட்டடங்கள் கட்ட வேண்டிய செலவுகள் இல்லை. இன்னும் ஆஸ்பத்திரி சம்பந்தமான பெரிய செலவுகள் ஆண்டுதோறும் ஏற்படமாட்டா, ஆகையால் சொற்பச் செலவில் கிராமங்களுக்கெல்லாம் வைத்திய உதவி செய்ய சித்த வைத்தியர்களே போதும்.

இவ்வழியில் பணம் மிச்சப்படுமாகையால், அரசாங்கத்தார் ஒரு நிமிஷங்கூட தாமசம் செய்யாது சித்த வைத்தியத்தை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போதிருக்கிற சித்த வைத்தியர்களைச் சென்னையில் ஏற்படுத்தியிருக்கும் சித்த வைத்திய கல்லூரிகளுக்கு வரவழைத்துச் சுகாதாரப் பாடங்களைச் சில மாதங்களுக்குள் கற்பித்துக் கொடுத்தால், அவர்களே கிராமங்களில் சுகாதாரம் வைத்தியம் முதலியவைகளைக் கவனித்துக் கொள்வார்கள். கிராமங்களில் சுகாதாரம் மிகக் குறைவாக இருக்கிறது. மேற்கண்டவாறு செய்தால், எல்லா ஜனங்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் இலாபம் உண்டு.

ஆகையால் சித்த வைத்தியர்களுக்கு மேற்கண்ட பயிற்சிகளை உடனே செய்து கொடுக்கும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## சித்த வைத்தியக் கல்லூரி

சித்த வைத்தியம் யாவரும் புகழும்படி முன்னேற்றமடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய உண்மையான எண்ணம். அதற்கு முதலாவது, சித்த வைத்தியக் கல்லூரி வைத்து மாணாக்கர்களுக்குப் பாடம் கற்பித்து, சோதனையில் தேறி வந்தவர்களை யாவரும் ஆதரிக்கும்படி செய்ய வேண்டும். வைத்தியக் கல்லூரி இல்லாமல் ஒரு

சித்த வைத்திய முறையானது சிறப்படைய மாட்டாது. ஆதலால், கல்லூரியை வைப்பதற்கு இப்பொழுதே ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

## சித்தப்பாட புத்தகக் கழகம்

கல்லூரிக்கு முதலாவது வேண்டியது, ஆசிரியர்களும் பாடப் புத்தகங்களுமாம். பரிபாஷை நிறைந்து கிடக்கிற சித்த நூல்கள் ஏராளமாக நாடு முழுமையும் சிதறிக்கிடக்கின்றன. அவைகளை ஒழுங்குப் படுத்தி எளிய நடையில் பாடப் புத்தகங்கள் எழுதவேண்டும். சித்த பாடப் புத்தகக் கழகத்தை அமைத்து வேண்டிய பாடப் புத்தகங்களை எழுதி முடிக்க வேண்டும்மென்று இங்கு கூடியிருக்கிற சித்த வைத்தியப் புலவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## சித்த மருத்துவ மன்றம்

சித்த மருத்துவ மன்றம் என்கிற பெயருள்ள ஒரு சபையாரை அமைக்க வேண்டும். இதில் சித்த வைத்தியத்தில் திறமையுள்ளவர் களையும் ஆங்கில வைத்தியர்களாயிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்டு சித்த வைத்தியத்தில் அன்புடையவராயிருக்கிறவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். சித்த வைத்தியத்தில் திறமையும், நல்ல மருந்துகளும் உடையவர்களை இந்த மருத்துவ மன்றத்தார், சபையின் சொந்தச் செலவில் வரவழைத்து அவர்களுடைய மருந்துகளைச் சோதனை செய்து நோயாளிகளுக்குக் கொடுத்துப் பார்த்து நல்ல குணங்கள் இருப்பதாகக் கண்டால், அவர்களுக்கு இந்த மருத்துவ மன்றத்தின் மூலமாக நற்சாட்சிகளும் பல வகையான ஆதரவுகளும் செய்யப்படும்.

## சித்த மருந்து ஆராய்ச்சி சாலை

சித்த மருந்துகளில் நூற்றுக்கணக்கான அருமையான மருந்து முறைகள் இருக்கின்றன, போதுமான பொருளுதவி இருந்தால், திறமையுள்ள அறிவாளிகளை வைத்து மருந்துகளைத் தேர்ந்தெடுத்துக் கையாளலாம். மருத்துவ மன்றத்தாருடைய ஆளுகையில் சித்த மருந்து ஆராய்ச்சி சாலையை வைத்து நூற்றுக்கணக்கான முருந்துகளைச் செய்து முடித்துச் சோதனை பார்த்து வரையறுத்துப் பயமில்லாமல் எல்லா வைத்தியர்களும் கையாளும்படி செய்து, உலகத்தாருக்கும் சித்த வைத்தியர்களுக்கும் உதவி செய்யலாம். இதனால் வைத்தியர்கள் மருந்து செய்யும் வேலையும், பச்சிலை தேடும் கஷ்டங்களும் புடம் போட்டு வருந்தும் துன்பங்களும் ஒழியுமல்லவா?

சித்த வைத்தியர்களும் இங்கிலீஷ் வைத்தியர்களைப் போல, சித்த மருந்துகளை நினைத்த சமயத்தில் மருந்துக் கடைகளில் வாங்கி உடனே கையாளலாமல்லவா? ஆகையால் மருந்து ஆராய்ச்சி சாலையும் சீக்கிரமாக அமைக்க வேண்டும்.

## சித்த மருந்து செய்முறை நூல்

சித்த மருந்துகளை முறைப்படி செய்வதற்கு சித்த மருந்து செய்முறை நூல் ஒன்று அவசியம் வேண்டும். இந்தப் புத்தகம்தான் சித்த வைத்தியத்திற்கு அடிப்படையானது. முதன்மையானது. உயிர் நிலையாயுள்ளது. இந்த மகாநாட்டிலே அந்தப் புத்தகத்தை எழுதி முடிப்பது அவசியமாகும். இங்கு வந்திருக்கிற மகான்களும், சித்த வைத்திய ரத்தினங்களும் கூடி ஒற்றுமையுடன் ஆலோசனை செய்து இதை எழுதி முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

## சித்த வைத்திய சாலை

மேலே சொல்லிய காரியங்களெல்லாம் சீக்கிரமாக முடிவு பெற்றால், சித்த வைத்திய ஆஸ்பத்திரிகளை நமது நாடு முழுவதிலும் வைக்கலாம். இங்கிலீஷ் வைத்திய ஆஸ்பத்திரியில் ஆப்ரேஷன் (அறுவைவைத்தியம்) பிரசவ வைத்தியங்கள் இப்பொழுது மிக்க திறமையுடன் நடத்தப்படுகின்றது. ஆகையால் நாம் இப்பொழுது தீராத வியாதிகள் **(Incurable Diseases)** என்று சொல்லப்படுகிற வியாதிகளைக் குணப்படுத்த வேண்டும். அப்படிக் குணப்படுத்தி, சித்த வைத்தியர்களுக்குப் புகழ் உண்டாகும்படி செய்யவேண்டும்.

மேற்கண்டபடியெல்லாம் செய்து, சித்த வைத்தியமும் நமது வைத்தியர்களும் முன்னேற்றமடைய வேண்டுமானால், செல்வமுள்ள மக்களுடைய உதவி வேண்டும். அரசாங்கத்தாருடைய ஆதரவு வேண்டும். இதற்குப் பாடுபட்டு உழைப்பதற்குத் திறமையுள்ள பொறுப்பாளிகள் வேண்டும். நமது சித்த வைத்தியர்களுக்குள் ஒற்றுமை வேண்டும்.

ஆங்கில வைத்தியர்களுள் ஒருவரை யொருவர் புகழ்ந்து ஒற்றுமையாயிருந்து பணம் சம்பாதித்துப் பெருமையடைந்திருக்கிறார்கள். அதைப்போல் உங்களிடத்தில் ஒற்றுமை இருக்கிறதா என்று கேட்கிறேன். நீங்கள் ஒருவரை யொருவர் புகழ்ந்து பேசுகிறீர்களா என்ற கேட்கிறேன். சித்த வைத்தியத்தை உலகத்தார் புகழும்படி செய்வதற்கு நீங்கள்

ஒவ்வொருவரும் ஆராயச்சி செய்து இந்தச் சங்கத்தின் மூலமாக எந்த விதமான உங்கள் கடமையைச் செய்ய நினைத்திருக்கிறீர்கள் என்று உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்கிறேன்.

எனது அன்பார்ந்த சித்த வைத்தியர்களே! நீங்கள் யாவரும் முன்னேற்ற மடைந்து, புகழும் பெருமையும் பெறவேண்டு மென்கிற பிரியம் எனக்கு மிகுதியாக உண்டு. அதனால் இப்பொழுது எனக்குத் தெரிந்த பல வழிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இவ்விடத்தில் பல மகான்களும் திறமையுள்ள சித்த வைத்தியர்களும் வந்து கூடியிருக்கிறார்கள். இன்னும் மற்ற காரியங்களைப் பற்றி நீங்களும் யோசித்து எல்லாவற்றையும் சிறப்பாய் முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நீங்களும் ஒற்றுமைப்பட்டுப் பொது நோக்கத்துடனும் தயாளமான எண்ணத்துடன் சித்த வைத்தியத்தைப் பல வழிகளிலும் முன்னேற்ற மடையும்படி செய்ய உண்மையான மனதுடன் ஒத்துழைப்பீர்களானால், உங்களுக்கு உதவிசெய்ய பல பெரியோர்கள் முன் வருவார்களென்று நிச்சயமாய் எண்ணுங்கள். இத்துடன் எனது சொற்பொழிவை முடிப்பதோடு, நாமெல்லோரும் சித்த வைத்தியத்திற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தந்து எண்ணிலாத பிரயாசையை யெடுத்து இவ்வளவு பெருமையுடன் இந்த மகாநாட்டை நடத்தி வைக்கிற சங்க அமைச்சர் சிவஞான யோகிகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## வரவேற்பு

நமது வேண்டுகோளுக்கு இணைங்கி கனம் ஆனரபில் மந்திரி ஆர்.என். ஆரோக்கியசாமி முதலியார் பி.ஏ., பி.சி.இ., எம்.எல்.சி. அவர்கள் தங்கள் சௌரியங்களையெல்லாம் கவனியாது இந்த மகாநாட்டிற்குத் தலைமை பூண்டு, நம்மைப் பெருமைப்படுத்த வந்திருப்பதற்கு இச்சங்கத்தின் சார்பாக நான் வரவேற்கிறேன்.

கண்காட்சியைத் திறந்து வைக்க நம்பால் அன்பு வைத்து இங்கு வந்திருக்கும் இந்திய மருத்துவ கலாசாலை பிரின்ஸிபால் கேப்டன் டாக்டர் ஸ்ரீனிவாச மூர்த்தி பி.ஏ.,பி.எல்., பி.சி.எம்., அவர்களையும் இச்சங்கத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

இந்த ராஜதானியின் பற்பல இடங்களிலிருந்து இங்கு வந்திருக்கின்ற பிரபுக்களையும், சித்த வைத்தியர்களையும் மிக்க அன்போடு வரவேற்கின்றேன்.

மற்றொரு முறையும் இவ்விடம் வெளியூர்களிலிருந்து வந்திருக்கிறவர்களுக்கு, நாங்கள் கொடுத்திருக்கிற சௌரியங்களில் ஏதாவது குறைகளிருந்தாலும் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

★

*தலைவர், அமைச்சர் ஆர்.என். ஆரோக்கியசாமி முதலியார்*

*இதழ்: திராவிடன் - (19-4-1927)*

# 6. மாயவரம் இளைஞர் மாநாடு

(8. 5. 1927)

## சனக சங்கர கண்ணப்பர்

*(மாயவரத்தில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பெருக்கின் சுருக்கம்.)*

சகோதரர்களே!

பண்டைப் புகழும் பேரும் பெற்ற இம்மாயவரத்தின்கண் நடைபெறும் இளைஞர் மகாநாட்டிற்கு, ஒன்றுக்கும் பற்றா எளியேனைத் தலைவனாய்த் தெரிந்தெடுத்தது பற்றி வரவேற்புக் கழகத்தாருக்கு என் மனமுவந்த வந்தனம் செலுத்துகின்றேன். என்னினும் அறிவுள்ளார் பலர் உள்ளார்கள். இருந்தும் என்னைத் தேர்ந்தெடுத்தது என்பால். நுங்கட்கு இருக்கும் அன்பின் பெருக்கத்தைத் தெளிவுறக் காட்டுகின்றது.

## இளைஞர் இயக்கம்

இதுவே நம் மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இளைஞரின் முதலாவது மகாநாடாகும். அத்தகைய மகாநாடுகள் நம்மனோர் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதனவா என்று பலர் நம்மை உசாவுகின்றார்கள். இக்கேள்விக்கு விடை இறுக்க வேண்டுவது நம் கடனாகும்.

இப்பொழுது இளைஞர்களாய் இருப்பவர்கள்தான் நாளை பெரியோர்களாக வேண்டியவர்கள்; இவர்கள்தான் இன்னும் சிலவாண்டுகளுள் நாட்டை ஆளப்போகின்றவர்கள்; தலைவர்களாய்த் திகழப் போகின்றவர்கள். ஆகவே, முளையிலேயே இவர்களை நல்ல துறையில் திருப்பிவிட்டால் இவர்கள் குற்றம் குறைபாடு அற்ற தூய மணிகளாய், நாட்டின் விடுதலைக்குழைக்கும் சான்றோர்களாய்த் தன்னலம் விடுத்த பெரியோர்களாய் வாழ்வர். என்னை?

உயிரென்பது ஒரு கண்ணாடி. அஃது எதைப் பற்றியதோ அதன் இயல்பாய், அதன் வடிவாய் நிற்பது. கண்ணாடி தன்னை நோக்குவார்

யாரோ, அவர் தம் முகத்தைக் கள்ளங் கபடின்றிக் காட்டுகின்றது. அத்தன்மைத்தே தான் இளைஞர்களும். அவர்களை நல்வழியில் திருப்ப வேண்டுமென்றால், திருப்பலாம். தீயவழியில் திருப்ப வேண்டுமென்றால் திருப்பலாம். அவர்களை அடிமை வாழ்க்கையில் அமிழ்த்த வேண்டுமென்றால் அமிழ்த்தலாம். விடுதலை வழியில் புகுத்த் வேண்டுமென்றால் புகுத்தலாம்.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த நெப்போலியன் அறிவுள்ளவ னானான்; வீரனானான். ஆனால் அவன் அண்ணன் ஜோசப்போ கோழையானான், மூடனானான். காரணமென்ன? நெப்போலியன் கருப்பத்திலிருந்த காலத்து அவன் தாயார் வீரத்திறன் நிகழ்ச்சிகளைப் படித்து, அவ்வீரத்திறனைக் கருப்பத்திலிருந்த நெப்போலியனுக்கு ஏற்றினாள். ஆனால் ஜோசப் கருப்பத்திலிருந்த காலத்தோ அவள் சோம்பேறியாய் இருந்தாள். ஆகையால் நெப்போலியனுக்கும் ஜோசப்புக்கும் அத்துணை வேற்றுமை. அத்தன்மைத்தே நாம் விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் முதலிய உணர்ச்சிகளை இப்பொழுது முளைக்கும் முளையிலேயே நம் இளைஞர்கட்கு அவர்கள் உடம்பில் குத்தி ஏற்றிவிடுவோ மாயின், அவைகள் உடம்பு முழுவதும் பரவிவிடும்; விடவே, அவர்கள் நாட்டின் விடுதலைக்கு என்றும் எக்காலத்தும், எஞ்ஞான்றும் உடல் பொருள் உயிர் மூன்றையும் மனமுவந்து கொடுக்கும் வீரர்களாய் விளங்குவார்கள். ஆகையினாற்றான் இளைஞர் இயக்கம் இன்றியமையாது வேண்டற் பாலதென்று நாம் நினைந்திருக்கின்றோம்.

### இளைஞர்களிடம் நம்பிக்கை

இனிப், பெரியோர்களைக் காட்டினும் இளைஞர்களிடத்தே எனக்கு மிகுந்த நம்பிக்கையிருக்கிறது. ஏனெனில் பெரியோர் குறுகிய கொள்கைகளுள் அகப்பட்டு உழல்கின்றனர். ஒருபுடை குடும்பக் கவலையும், பிறிதொரு புடை மூப்பும் அவர்களைப் பிணித்து இறுகக் கட்டிக் கொண்டுள்ளன. ஆனால் இளைஞர்கட்கோ பெரியோர்கட்குள்ள மேற்கூறிய விலங்குகள் கிடையா! ஆகலான் அவர்கள் எடுத்த கருமம் தட்டுத் தடையின்றி முட்டி முடிக்கும் திறன் உடையார்கள்.

பெரியோர்களால் செய்ய வியலாதவைகளை யெல்லாம் இளைஞர்களே முடித்துக் கொடுத்திருக்கின்றார்கள். பெரியோர்களின் குறுகிய தவறான கொள்கைகளால், அடிமைப் பெருங்குழியில் வீழ்ந்து கிடந்த நாடுகளைப் புத்துயிர் அளித்து மீட்டுக் கொடுத்தவர்களெல்லாம் இளைஞர்களே! மற்றும் சமத்துவம், சகோதரத்துவம் முதலியவைகளை அடிப்படையாய்க் கொண்ட சமயங்களை நிலைநாட்டியவர்களும்

இளைஞர்களே! இவ்வுண்மைகளெல்லாம், உலக சரித்திரம் படிப்பார்க்குத் தெள்ளத் தெளிய விளங்கும். ஆகலான் இளைஞர்களால் விடுதலை பெற்ற நாடுகளில் சிலவற்றை எடுத்துக் கூறுவோம்.

## பிற இடங்களில்

முதலில், ஜெர்மனியை எடுத்துக் கொள்வோம். இந்நாடு பல தத்துவ நூல்களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் ஈன்றதாகும். சென்ற 25 ஆண்டுகட்கு முன் இந்நாட்டில் இளைஞர் இயக்கம் தோன்றிற்று. அவர்களுக்குப் பெரியோர்கள் கொள்கை வெறுப்பைக் கொடுத்தது. பெரியோர்கள் எப்பொழுதும் ஆசை மிகுதியாய் சண்டைக்கு முனைந்து நிற்கும் கொள்கை இளைஞர்கட்கு விருப்பத்தைக் கொடுக்கவில்லை. ஆகவே, இளைஞர் இயக்கம் சண்டை வெறி பிடித்து அமுங்கிக் கிடந்த ஜெர்மனியைச், சீர்திருத்த இங்கு எழுந்ததாகும்.

முதன்முதலாக ஜெர்மனிய இளைஞர்கள், கிராமங்கள் தோறும் சென்று ஏழைகளுடன் கலந்துறவாடி, அவர்கள் குறைளை அறிந்துணர முற்பட்டார்கள். இது பெரியோர்கட்கு மனக் கசப்பாய் இருந்தது. இஃது ஒரு புறமிருக்க, சண்டை கிளம்பிவிட்டது. விடவே, இளைஞர்கள் தங்கள் விருப்பத்துக்கு மாறாய்ச் சண்டை கிளம்பிய தென்பதையும் பொருட்படுத்தாது, தம் நாட்டைப் பாதுகாப்பதன் பொருட்டு இரத்தம் சிந்த முற்பட்டு வந்தார்கள். சண்டை தீர்ந்து அமைதி நிலவியதும் பெரியோர்கள் இளைஞர்கள் சொற்களைக் கேட்பார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. அதில் ஏமாற்றமடையவே, இளைஞர் தமக்கெனத் தனிக் கழகங்கள் நிறுவிக் கொண்டு, சண்டையால் தம் நாட்டில் ஏற்பட்ட வறுமையைப் போக்கப் பாடுபட்டு வருகிறார்கள்.

இனிக் கானாடாவிலோ, இளைஞர் இயக்கம் மிக வலுவாய் இருக்கின்றது. அவர்கள் தங்களுக்கெனப் பாராளுமன்றங்களும், நகர சபைகளும் நிறுவிக் கொண்டு தங்களுக்குள்ளேயே நகர சபை அங்கத்தவர்களும் தலைவர்களும் உடைத்தாய் இருக்கின்றார்கள்.

இளைஞர் தங்கள் நகர சபை வாயிலான் மக்களின் சுகாதாரத்தையும் கல்வியையும் கவனித்து வருகின்றார்கள். இனி ஒரு காலத்தில் “ஐரோப்பாவின் நோயாளி” என்று எண்ணி நகையாடப்பட்ட துருக்கி, இன்று பிரிட்டனும் நடுநடுங்கக் கூடிய வல்லரசாய்த் திகழ்தற்குக் காரணம் யாதுகொல்! கெமால் பாட்சாவைத் தலைமையாய்க் கொண்ட இளைஞர் இயக்கமன்றோ! இளைஞர் இயக்கத்தினால்தான் இப்பொழுது பெண்மக்கள் படிக்கக் கூடாது என்ற குருட்டு நம்பிக்கைகளும், சமய மூடக்கொள்கைகளும் துருக்கியை விட்டுப் பறந்தோடுகின்றன.

இனி ஆசியா கண்டத்தை எடுத்துக் கொள்வோம். ஜப்பான் மனித நிலையை அடைந்தது இளைஞர்களாலேயே. இப்பொழுது சீனாவில் அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுதற்கு நிகழ்த்தப்படும் சண்டை இளைஞர்களுடையதன்றோ!

இந்தியாவில் பிராமண மதத்தை ஒழித்துப் புத்த மதத்தை நிலைநாட்டிய புத்தர் பெருமானும், தென்னாட்டில் சமண சமயத்தை ஒழித்துச் சைவ சமயத்தை நிலைநாட்டிய சம்பந்தரும் இளைஞர்களே. ஆகையினாற்றான் நம் நாடும் நம் வகுப்பும் முன்னேறுவதற்கு இளைஞர் இயக்கம் இன்றியமையாதது என்கின்றோம். இவ்வுண்மையை உணர்ந்தே நாங்கள் சென்னையில் திரு. சுரேந்திரநாத் ஆரியா அவர்களின் தலைமையின்பால் இளைஞர் சங்கம் ஒன்று நிலைநாட்டி அதன் கிளைச் சங்கங்களைப் பல இடங்களிலும் நிலைநாட்டிக் கொண்டு வருகின்றோம். நம் இளைஞர் இயக்கமும் வளர்பிறை போன்று வளர்ந்து வருதல் நமக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

## இளைஞர்கள் செய்ய வேண்டுவது யாது?

இனி இளைஞர்கள் செய்ய வேண்டுவது யாது? முதலாவதாக, நம் பெரியோர் நம் நாட்டின் விடுதலைக்காகக் தொடுத்திருக்கும் போரில் நமது இளைஞர்கள் அவர்கட்குத் துணை செய்தல் வேண்டும். பார்ப்பன இளைஞர்கள் எவ்வாறு தம் வகுப்பு முன்னேற்றத்துக்காக உழைக்கும் திரு. சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி கம்பெனியாருக்குத் துணை செய்கின்றார்களோ, அத்தன்மைத்தே பார்ப்பனரல்லாத இளைஞர்களும் பனகால் அரசர் போருக்கு இரத்தம் சிந்த முன்வரல் வேண்டும். ஏனெனில் பிராமணரல்லாதார் இயக்கந்தான் பார்ப்பனரல்லாத பெரியோர்கட்கும், இளைஞர்கட்கும் விடுதலையைக் கொடுப்பதாகும். மற்றும் நாம் பெரியோர்கட்கு உதவியாய் நின்றாலன்றோ அவர்கள் சட்டசபைக்குள் நுழைந்து நமக்குப் பள்ளிக்கூடங்களில் படித்து ... நியமிக்க முடியும்?

ஆகையினாற்றான் பெரியவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்கிறோம். இது மட்டும் போதாது. பெரியோர்கள் உறங்குகின்ற காலத்து அவர்களை இளைஞர்கள் தட்டியெழுப்புதல் வேண்டும். அவர்கள் தவறுகின்ற காலத்துக் கண்டிக்கவும் வேண்டும்.

இரண்டாவதாக, நம் இளைஞர்கள் நம் நாட்டிலுள்ள சாதி வேற்றுமை, தீண்டாமை முதலிய பெரும் பிசாசுகளை ஒட்ட வேண்டும். அதற்காக அவர்கள் ஓய்விருக்கும் நேரங்களிலெல்லாம், கிராமங்களிடைச் சென்று சாதி வேற்றுமைகளின் கொடுமைகளையும் தீணடாமையின் அநியாயத்தையும் எடுத்துரைக்க வேண்டும்.

நம் பெரியோர்களாய நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாக்களெல்லாம் சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் கண்டிப்பனவாய் உள்ளன. இப் பாக்களைக் கிராம மக்களுக்கு எடுத்துரைத்தால் அவர்கள் மனம் திரும்பாதிருக்குமோ? இப்பாக்களையெல்லாம் கேட்பார்களாயின் அவர்கள் தம் சாதிவேற்றுமை விலங்குகளை அடியோடு அறுத்து எறிந்து விடுவார்களென்பது திண்ணம்.

ஜப்பானில் சாதி வேற்றுமைகள் இளைஞர்களாலேயே அறுபட்டொழிந்தது. அத்தன்மைத்தே இந்தியாவிலும் சாதி வேற்றுமை ஒழிய வேண்டுமானால் அஃது இளைஞர்களாற்றான் முடியும்.

இனி நம் கோவில் அந்நிய மதத்தாராய பிராமணர்கள் கையில் இருக்கின்றபடியால், அங்குச் சாதி நாற்றமே வீசுகின்றது. அந்நிய மதத்தார் உள்ளே போகலாம், கோயிலின் மதத்தைச் சார்ந்தவர்கள் உள்ளே போகவியலாது. ஆதலான் நம் இளைஞர்கள் கோயில்களையும் மடங்களையும் அந்நிய மதத்தார் கையிலிருந்து மீண்டும் பெற வேலை செய்தல் வேண்டும். அகத்தியம் நேரிடின் சத்தியாக்கிரகமும் செய்யத் துணிதல் வேண்டும்.

நம் கோயில்களிலும் மடங்களிலும் உள்ள சாதி நாற்றம் ஒழிய வேண்டுமாயின் எல்லா வகுப்பாரும் கோயிலுக்குள் நுழைய நாம் வேலை செய்தல் வேண்டும். இதற்காக நாம் உயிர் கொடுக்கவும் துணிதல் வேண்டும். இத்துறையில் நம் நண்பர் திரு இராமநாதன் வேலை செய்து வருவது பாராட்டத் தக்கதாகும். அவர் முயற்சிக்கு நாம் துணை நிற்றல் வேண்டும்.

மூன்றாவதாக, நம் இளைஞர்கள் நம் பத்திரிகைளாய "திராடவிடன், குடியரசு, ஜஸ்டிஸ்" முதலியவைகளைக் கிராமங்கள் தோறும் பரப்புதல் வேண்டும். ஏனெனில் இப்பத்திரிகைகள்தான் நம் வாய்கள்.

இனி இறுதியாக நம் இளைஞர்கட்கு நான் ஒன்று கூற விழைகின்றேன். நீங்கள் அதிரா ஊக்கத்துடன் வேலை செய்தல் வேண்டும். உங்களால் நம் நாடு விடுதலை பெறவேண்டும். ஆகலான் எல்லா இடங்களிலும் இளைஞர் சங்கங்கள் நிறுவி இளைஞர் இயக்கத்தை வளர்த்து வருதல் வேண்டும்.

*– திராவிடன், 16.5.1927*

★

# 7. கல்வி முறையும் பெண்கள் சீர்திருத்தமும்

### *வ. உ. சிதம்பரம்பிள்ளை* (13. 3. 1928)

தலைவர்களே! சீமான்களே! சீமாட்டிகளே! நமது தேசத்தில் இப்பொழுது கல்வி கற்பிக்கும் முறை பொருத்தமானதாயில்லை. அதனைச் சீர்திருத்தி நன்னிலைக்குக் கொண்டுவரத் தலைவர்கள் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். அம்முடிவை நீங்கள் நன்கு ஆராய்ந்து நன்மையெனத் தோன்றும் பட்சத்தில் அதனைக் கவர்மெண்டுக் கலாசாலைகளிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியுள்ள கலாசாலைகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சியுங்கள். புதிதாக ஏற்படுத்தப்பெறும் கலாசாலை, பாடசாலைகளிலும் இத்திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

நம் தேசத்தினர் கலாசாலைகளில் படித்து வெளிவந்தவுடன் கவர்ன்மெண்டு உத்தியோகங்கட்கும், கிளர்க்கு வேலைகட்கும் முயற்சி செய்கின்றனர். அவர்கள் அவ்வேலைகட் கன்றி வேறு வேலைகட்கு உபயோகமானவர்களாக இருக்கவில்லை. கவர்ன்மெண்டிலும் எத்தனை பேருக்குத்தான் உத்தியோகம் கிடைத்தல் கூடும்?

இந்தியாவில் ஸ்கூல்பைனல் பரீட்சையில் தேறியவர்கட்கு எத்தனை பேருக்கு உத்தியோகம் கிடைக்கிறதென்று கணக்கிட்டால், ஆயிரத்துக்கு ஒரு பேரும், எப்.ஏ., பி.ஏ., எம்.ஏ.,க்களில் ஆயிரத்துக்கு இருபத்தைந்து பேருக்குமேல் உத்தியோகம் கிடைப்பதில்லை. மற்றவர்க்குப் பிழைப்புக்கு வழியில்லாமலிருக்கிறது.

வக்கீல் உத்தியோகத்தில் எனக்குள்ள அனுபவத்தைக் கூறுகிறேன். 1924ஆம் வருஷத்தில் மீண்டும் நான் வக்கீல் தொழிலில் புகுந்தேன். அப்போது சராசரி மாதம் ரூபாய் ஆயிரம் எனக்கு வரும்படி வந்தது. அவ்வமயம் இருபது வக்கீல்கள் என்னுடனிருந்தனர். இப்பொழுது நாற்பது வக்கீல்கள் இருக்கின்றனர். எனவே, இப்பொழுது மாதம் ரூபாய் நானூறு, ஐந்நூறுதான் வருகின்றது. பிராமணர், பிராமணரல்லாதார் சண்டைக்குக் காரணம் உத்தியோகமென்றே கூறலாம்.

## தொழிற் கல்வி

நமது கலாசாலைகளில் தொழிற்கல்வி கற்பிக்க வேண்டும். பணமுள்ளவர்கள் தேசசரித்திரம், பூகோள சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் முதலியவைகளில் தேர்ச்சி பெறுதற்கு வேண்டிய கல்வியைக் கற்கலாம். சாதாரண மாணவர்கள் எல்லோரும் நன்கு எழுதவும், பேசவும், அவசியமானால் உபந்யாசம் செய்யவும் வேண்டிய கல்வியைக் கற்பதோடு, தொழிற் கல்வியையும் கற்க வேண்டும். தந்தி வாசிக்கும் அளவு ஆங்கிலமும் கற்றுக்கொள்ள விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றை மாணவர்கட்குப் போதிக்க வேண்டும்.

நன்செய், புன்செய், தோட்டம் ஆகியவற்றில் மாணவ மாணவிகளுக்குப் பயிற்சியளித்தல் அவசியமாகும். எல்லா விஷயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் செய்தல் அவசியமாகும். ஆனால் அவர்கள் அதற்குத் தகுதியுடைவர்களா என்று பார்க்கின், இல்லை. ஏன்? அவர்கட்குக் கல்வி இல்லாமையே. எனவே பெண்கட்குக் கல்வி கற்பிக்க வேண்டியது அவசியமாகும்.

புஞ்சை, நஞ்சைகளில் வேலை செய்வதற்குக் கூட கல்வி அவசியமாவெனக் கேட்கலாம். இருபது வயதுவரை வெயிலில் நின்று வேலை செய்யாத பழக்கத்தால், இருபது வயதுக்கு மேல் நன்செய், புன்செய் ஆகியவற்றில் வேலை செய்தல் கஷ்டமாக இருக்கின்றது. எனவே, சிறு வயதிலேயே அப்பயிற்சியை அளித்தல் வேண்டும்.

நான் ஜெயிலில் இருக்கும் பொழுது மீண்டும் வக்கீல் தொழில் செய்வதில்லையென்று சத்தியமும் செய்து கொள்வதுண்டு. ஆனால் வெளியில் வந்து பத்திரிகை ஆபீசில் உதவி ஆசிரியனாக இருந்தேன். நெய் வியாபாரம் செய்தேன். ஆனால் ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை.

எனக்கு நிலங்கள் உண்டு. எனினும், சிறு போழ்தில் வெயிலில் வேலை செய்து பழக்கமின்மையால், விவசாயம் செய்து ஜீவிக்க முடியவில்லை. என் மனைவி மக்களும் அவ்வாறே இருக்கின்றார்கள். என் செய்வது!

இனி, கலாசாலைகளில் ஒருமணி நேரம் தொழிற் கல்வியும் கற்பித்தல் வேண்டும். கைத்தொழில், விவசாயம் ஆகியவற்றைக் கட்டாயப் பாடமாக வைத்தல் அவசியமாகும்.

## ஆதித் திராவிடர்கள்

நேற்று ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் (ஜெயங் கொண்டபுரம் மெ.ராம.மெ.) அவர்களால், ஆதித் திராவிடர்களுக்காக வைக்கப் பெற்றிருக்கும் பள்ளிக் கூடத்தையும், மேல் ஜாதியாருக்காக வைக்கப் பெற்றிருக்கும் பள்ளிக் கூடத்தையும் பார்த்தேன். ஆதித் திராவிட பள்ளிப் பிள்ளைகட்கு வேட்டி வாங்கிக் கொடுக்கிறார்கள். இன்னும் வேண்டும் சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள். எனினும் அங்குக் கொடுக்கப்படும் கல்வி முறையைக் கண்டபொழுது எனக்கு ஒரு சந்தேக முண்டாயிற்று. அதனை இங்கும் தெரிவிக்கிறேன்.

தனவைசியர்கட்குப் பணமுடை யில்லாதிருக்கலாம். அவர்கள் நாற்பதினாயிரம் ஜனங்கள்தான். மற்ற ஜனங்கள் அவ்வாறில்லை. எனவே, அவர்களுக்குத் தொழிற்கல்வி போதிக்க வேண்டும். அத்தொழிலில் வரும் வரும்படியை அவர்கள் பெற்றோர்கட்குக் கொடுத்துவிடலாம். ஆதித் திராவிடர்கள் நன்கு படித்துவிட்டாலும் உத்தியோம் கிடைத்தா லல்லாவா சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியும்?

படித்தவர்கள் எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்து விடுமா? ஒவ்வொரு கலாசாலையிலும், குருகுலம் போல தோட்டம், நன்செய், புன்செய் முதலியன ஏற்படுத்தித் தொழிற்கல்வி போதிக்க வேண்டும்.

ஆதித் திராவிட மாணவர்கட்குப் பன்னிரண்டு மணிவரை விவசாயமும், அதற்குமேல் பாஷா ஞானமும் போதிப்பது மேன்மை தரும். பணமில்லாமல் ஒருவனும் ஒரு வேலையும் செய்ய முடியாது. தரித்திரனாக ஒருவன் இருப்பானாயின் அவன் அறிவு திறம்பட வேலை செய்வதில்லை. அரசாங்கத்தாரால் அனைவருக்கும் உத்தியோம் கொடுக்க முடியுமா என்பதுபற்றி நான் ஒன்றும் கூற முடியாது.

அரசியல் விஷயங்களைக் குறித்து நான் ஒன்றும் இப்பொழுது அதிகமாய்ப் பேசுவதில்லை. சாரமாகச் சொல்வதுண்டு. அரசியலைப் பற்றிப் பேச நண்பர்களான திரு ரங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி அவர்களே தகுதியுடையவர்கள். ஏனென்றால், சில சமயங்களில் பொய் பேச நேரலாம். புகழும்படி நேரலாம். எனவே நான் அதற்குச் சிறிதும் அருகனல்ல. நான் பேசினேனானால் 'ஸ்பிரிட்' உண்டாகிவிடும். உடனே என் மனதில் உள்ளன வெல்லாம் வெளியில் வந்துவிடும்.

உடனே இன்னும் நான்கு வருஷமோ, நாற்பது வருஷமோ ஜெயிலுக்குப் போகவேண்டுவதுதான். பின்னர் என் பெண்டாட்டி, பிள்ளைகளெல்லாம் சாப்பாட்டிற்குத் திண்டாட வேண்டியதுதான்.

பொருளில்லாமல் ஒரு வேலையும் செய்ய முடியாது. அதற்குத் தொழிற்கல்வி, விவசாயம் கற்பிக்க வேண்டியது அவசியமாகும். சட்டசபை மெம்பர்களிடம் சொல்லிக் கட்டாயமாக விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றைப் போதிக்க வேண்டுமென்று மசோதா கொண்டு வரச் செய்யுங்கள். அதனை அவர்கள் செய்யாவிட்டால், அடுத்த தேர்தலில் அவர்கட்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள்.

தனவைசியர்கள் கலாசாலை போன்றவைகளுக்குப் பொருள் நல்குவது சந்தோஷத்தைத் தருகின்றது. ஆனால், பணத்தைப் பிறரிடம் கொடுத்தால் எடுத்துக் கொண்டு விடுவார்களோ என்று பயப்படக் கூடாது. எனினும் வறுமையுடையவனிடம் பணப்பொறுப்பை விடுதல் தகாது. ஏனெனில், தனக்குத் தேவையிருக்கும்போது அப்பணத்தை உபயோகப்படுத்தி விடுவான்.

### *பெண்மக்கள் நிலை*

நம் நாட்டில் பெண்மக்களைச் சமைக்கும் இயந்திரமாகச் செய்து விட்டனர். இந்நாட்டில் இது இல்லையென எண்ணுகிறேன். பிள்ளைபெறும் இயந்திரமாக அனைவருமே செய்துவிட்டோம். நம்மைப் போல் பெண்கட்கும் சமஉரிமை இருத்தல் வேண்டும். எல்லா விஷயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் செய்தல் அவசியமாகும். ஆனால், அவர்கள் அதற்குத் தகுதியுடைவர்களா என்று பார்க்கின், இல்லை. ஏன்? அவர்கட்குக் கல்வி இல்லாமையே. எனவே பெண்கட்குக் கல்வி கற்பிக்க வேண்டியது அவசியமாகும்.

இந்நாட்டில் மனைவியோடு பேசுவது கஷ்டமென்று எனது நண்பர் சொன்னார். இது மிக மோசமானது. பெண்களும் தங்கள் கணவர்களை நன்கு மதித்து நடக்க வேண்டும்.

எச்சில் இலையில் சாப்பிடும் வழக்கம் எங்கள் ஜாதியில் உண்டு. இங்கு உண்டோ என்னமோ தெரியவில்லை. (உண்டு, உண்டு என்று ஜனங்கள் கூறினர்.) பிராமண வீட்டிலும் இருக்கிறதா? (இருக்கிறது என்றனர்.) நாகரிகமில்லாதவர் என்பவரிடத்தில்கூட இக்கொடுமை இல்லை.

அயலூருக்கு விருந்துக்குப் போயிருந்தாலும், ஆயிரம்பேர் சாப்பிட்ட இலைகளில் என் இலையைத் தேடிப் பார்த்து அதிலேயே என் மனைவி சாப்பிடவேண்டும். அதில் மண் விழுந்திருக்கும். இன்னொருவருடைய இலையில் அப்பளங்கள் விழுந்திருக்கலாம். அவைகளைக் கவனிப்

பதில்லை. எச்சில் இலையை நாய்களன்றோ தின்னும்? முருங்கைக் காயைக் கடித்து மென்று தின்று விட்டுத் துப்பியிருப்பேன்; (சிரிப்பு) அதில் உண்ண வேண்டும். அப்படியில்லாவிட்டால் புருஷன்மேல் பற்றில்லாதவளென்று கூறப்படுகிறது. எச்சிலிலையில் சாப்பிடாவிட்டால், 'புருஷன் இலையில் சாப்பிடாத தேவடியாள்' என்று சொல்லுகின்றனர்.

எனக்குக் கல்யாணம் ஆனது முதல், எச்சில் இலையில் உண்ணக் கூடாது என்று என் மனைவிக்கு உத்தரவிட்டு விட்டேன். பெண்கட்கும் சம சுதந்திரம் கொடுக்க வேண்டும். ஆனால், கல்வி இல்லாத அக்காலத்தில் தீர்ப்பளிக்கும் உரிமை புருஷனிடம் இருக்கவேண்டும். உரிமை பெறப் பெண்கள் போராடுதல் வேண்டும்.

## பத்திரிகைச் சண்டை

உள்ளூர் சம்பந்தமாக ஒன்று கூற விரும்புகிறேன். தனவைசியர்களால் நடத்தப்படும் இரண்டு பத்திரிகைகள் கொடிகட்டிச் சண்டையிட்டுக் கொள்கின்றன. அதனை நான் இலோசாக நினைத்தேன். பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியார், 'குமரன்' ஆசிரியருக்கும் 'ஊழியன்' ஆசிரியருக்கும் நண்பர். பார்க்கும் பொழுது இருவரிடத்திலும் ஒரே விதமான அன்பிருக்கிறதாகவே தோன்றுகின்றது. அவர் தலையிட்டால் இச் சண்டையை ஒழித்து விடலாம். ஆனால் அவர்கள் இருவர்களையும் சமாதானப் படுத்த முடியாதென்று சொல்லுகிறார்கள். சந்தாதார்கள் கூட்டம் போட்டு இம்மாதிரி ஒருவருக்கொருவர் சொந்தச் செய்திகளைக் குறித்துச் சண்டையிட்டுக் கொள்வதைத் தடுக்க வேண்டும். குமரனில் 'இதோடு முடித்து விட்டோம்' என்ற குறிப்பைப் படித்துப் பார்த்தேன்.



*(செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குக் காரைக்குடி காந்தி சௌக்கத்தில் சிவஞான யோகிகள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.)*
*(இதழ்: திராவிடன், 15.3.1928)*

# 8. அகத்தியர் வெறும் கட்டுக்கதை!

## கா. நமசிவாய முதலியார் (2.2.1929)

*சனிக்கிழமை மாலை 5 மணிக்குச் சென்னை அரசாங்கக் கலாசாலை 'இங்கிலீஷ் லெக்சர்' மண்டபத்தில் மேற்படி கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் திரு. கா. ரா. நமசிவாய முதலியாரவர்கள் தமது ரீடர்ஷிப் லெக்சராக 'அகத்தியர்' என்பது பற்றி ஒருமணி நேரம் பின்வருமாறு பேசினார்கள்.*

என்னைச் சென்னை யூனிவர்சிட்டியார் 'ரீடராக' நியமித்தது எனக்கு மாத்திரம் கௌரவமன்று. என்னைப் போன்ற தமிழ்ப் பண்டிதர்களையும் கௌரவித்ததேயாகும். அவ்வாறே என்னையும் தமிழ்ப் பண்டிதர்களையும் கௌரவித்த இந்த யூனிவர்சிட்டியாருக்கு எனது மனமார்ந்த வந்தனம்.

நூல்களிலே திருவள்ளுவர் திருக்குறள் மேலாக மதிக்கப்படும் நூல். அதற்குப் பல உரைகளிருந்தும் நாம் அதிகமாகப் படிப்பது பரிமேலழகர் உரைதான். இவ்வுரையே அதிகமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. அதனைப் படிக்கும்போது சில ஆட்சேபங்கள் தோன்றுகின்றன. பல உரைகளும் வெளிப்பட்டிருக்குமானால் இன்னும் பல விஷயங்களும் பல புதுக் கருத்துக்களும் தோன்றாமலிரா. அதே போல நான் எடுத்துக்கொண்ட விஷயமான அகஸ்தியரைப் பற்றி என்ன சொல்லியிருக்கின்றதென்று பார்ப்போம்.

முதன் முதலாக ருக் வேதத்தில் இவர் பெயர் காணப்படுகிறது. அங்கே இவரை மாண்ய என்றழைக்கப்படுகிறது. மானவின் புத்திரர் என்று பொருள். மான என்பது பிரமனுக்கு ஒரு பெயர். அதே நூலில் மித்திர வருணரது பிள்ளையென்று கூறப்பட்டிருக்கிறது. அது உண்மையா? இஃதுண்மையா வென்று யோசனை செய்யவேண்டும்.

அகத்தியர் என்ற சொல்லுக்குப் பொருள் இன்னதென்று விளங்க்வில்லை.

இவ்வகத்தியர் உலோபா முத்திரை என்ற பெண்ணைச் சந்தித்துப் பேசுகிறார். அவர்கள் சம்பாஷணை இவ்விடம் சொல்வதற்குத் தகுதியற்றது.

இனிப் புராணங்களில் என்ன சொல்கிறதென்று பார்ப்போம்.

மச்ச புராணத்திலே மித்திர வர்ணன் காமக் கிலேசனாக, தனது வீரியத்தைக் குடத்திலே பெய்தானென்றும் அதனாலேயே அவருக்குக் கும்பயோனி யென்று பெயரென்றும் காணப்படுகிறது.

என் நண்பரொருவர் காச்மீர தேசம் சென்றார். அது மிகக் குளிரான தேசம். அங்கே ஏழ்மையுடைய ஸ்திரீகள் குளிருக்குப் பயந்து குடத்தில் நெருப்பைப் பெய்து வயிற்றில் வைத்துக் கட்டிக் கொண்டிருப்பது வழக்கமாம். இவர் முதன் முதல் அந்நாட்டு மகளிரைக் கண்டபோது எல்லோரும் கருத்தரித்ததாக எண்ணி அதிசயப்பட்டாராம். பின் விசாரித்தபோது உண்மை தெரிந்து கொண்டதாகச் சென்னார். அப்படி ஏதாவது இருந்தாலு மிருக்கலாம்.

அதனை விட்டுக் கந்த புராணத்தைக் கவனிப்போம். அதனில் அவர் பிறப்பு – வளர்ப்பு ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால், மூன்று விஷயங்கள் பெறப்படுகின்றன. அவை (1) பூமி தென்பாலுயர்ந்து வடபால் தாழ்ந்தது என்பது, (2) வாதாபி வில்வலன் கதை, (3) அகத்தியர் பொதியமடைந்தது.

இவற்றுள்ளே பூமி தாழ்ந்த கதைக்கு ஆதாரமாகச் சிவபெருமான் திருமணம் கூறப்படுகிறது. அங்கே எல்லோரும் கூடி விட்டதாலே தென்பக்கம் உயர்ந்துவிட்டதாம். பூமி உருண்டையென்பது, ஒரு பக்கம் தாழ்தலும் ஒரு பக்கம் உயர்தலும் கூடாத காரியமென்பதும் அனைவரும் அறிந்தது. இந்தக் கதையை நாலாவது வகுப்புப் பையன்கூட நம்பமாட்டான் என்றால் பிறர் எப்படி நம்புவார்கள்? ஆனால் ஒன்று உண்மையாக விருக்கக் கூடுமென நினைக்கலாம். அதாவது அறிவாள ரெல்லாம் வடபுறம் சேர்ந்துவிட்டாரென்பது. அப்போதுகூட தென்னாட்டில் அறிவு மிகுந்தவர் இல்லையென்றாகும். அக்கருத்துக்குள்ள இடையூறோ அகத்தியர் முதன் முதலாகத் தமிழ் இலக்கணம் செய்தாரென்பது.

அன்னியர் புதிதாக ஒரு நாட்டுக்குச் செல்வாரானால் அப்பாஷையின் அமைப்பைத் தெரிந்துகொள்ள முதலில் இலக்கணம் செய்வது வழக்கமாக யிருக்கிறது. வீரமா முனிபோல் முதலானவர்கள் இலக்கணம் செய்ததை உதாரணமாகக் கூறலாம். அப்படியானால் 'தமிழ்'

மிக உயர்ந்த நிலையிலிருந்திருக்க வேண்டும் என்றாகும். ஆகவே, அதுவும் பொருந்தாக் கூற்றாக முடியும்.

இனி, வாதாபி வில்லவன் கதையை எடுத்துக் கொள்வோம். வாதாபி ஆடாக, வில்வலன் அவனைக் கொன்று, வந்த விருந்தினருக்கு இடுவதாம். விருந்தினர் உண்டு களையாறும் சமயம் வில்லவன் வாதாபியை யழைக்க, அவன் விருந்தினர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவதாம். இவ்விதமாக நடக்குமா வென்பதை அறிஞரே யோசிக்க வேண்டும்.

மூன்றாவது பொதியமலைக்கதை. இக்கதையைப் பற்றித் தமிழ் நூலிலே வருகிறதென்ன வென்று பார்ப்போம்.

சங்கநூலை எடுத்துக்கொள்வோம். சங்கம் என்ற சொல்லே தமிழ்ச்சொல்லல்ல. சகரம் அ, ஐ, ஔ என்ற எழுத்துக்களோடு முதலில் வராது என்பது இலக்கணம். அவ்வாறு வரவேண்டுமானால் சகரம் போய்விடும். சபை என்பது அவை யென்று வருகிறதைக் கவனிக்க.

இனி அகத்தியர் முதற் சங்கமிருந்த காலம் 4440 யாண்டு. இடைச்சங்கமிருந்த காலம் 3700; ஆக 8140 யாண்டு ஆகிறது. அதன்பின் இரண்டாயிரம் ஆண்டு சென்றிருக்கின்றன. எண்ணயிரம் ஆண்டு இருந்த அகஸ்தியர் இன்னுமொரு இரண்டாயிரமாண்டு இருந்தாரானால் யூனிவர்சிட்டி சரித்திர ரீடரான நமக்கு முன்னிருக்கும் திரு. பி.டி. சீனிவாச ஐயங்காரவர்கள் அகத்தியரை நேரே கேட்டு எல்லாவற்றையும் எழுதிவிடுவார். ஆனால் அகத்தியர் இன்னுமிருக்கின்றார் என்று சொல்லி அதனை முற்றும் நம்பும் ஜனங்களும் உண்டு (கரகோஷம்). இன்னும் இதுபோலப் பலவுண்டு.

மு. ராகவையங்காரவர்களைப் பார்த்து, சங்கம் என்பது எப்படி வந்ததென இவர்கள்தான் சொல்ல வேண்டுமென்று சொல்ல, தொகையென்று பெயரிருக்கலாமென்றும் அது 'மதுரைத் தொகையாக்கினானும் என்ற தேவாரத்தில் வருவதாகவும் சொல்ல, அது அந்தப் பொருளில் வந்ததாக வேறு, உதாரணங்கள் இல்லையென்றும் கூறினார்கள். அதனிலும் அகத்தியர் பேர் காணப்படவில்லை. இறையனார் களவியலில் தான் முதன் முதலாக வருகிறது.

அகத்தியர் புலத்தியரிடம் சென்று, உலோபா முத்திரையைப் பெற்று அவளை அங்கேயே வைத்துவிட்டுச் சமதக்கினியிடம் சென்று திரண தூமாக்கினியைப் பெற்று அழைத்துக்கொண்டு, கங்கையிடம் சென்று காவிரியைப் பெற்றுத் தென்னாடு சென்றாராம்.

திரணதூமாக்கினி என்ற சொல்லுக்குப் பொருளில்லை. ஒருவர் பேர் வைக்கும்போது பொருள் கவனித்தா வைக்கின்றனர். அஃது உண்மையாயினும் ஈண்டு இச்சொல் திரணம் என்றால் துகள் என்றும், தூமம் என்றால் புகையென்றும், அக்கினி யென்றால் நெருப்பு என்றும் பொருள்படும். ஆகவே கொள்ளி வைப்போன் என்று கொள்ளலாம் (சிரிப்பு). இவ்வாறு ஒரு பெயர் இருக்குமாவெனச் சபையினர் ஆலோசிக்க வேண்டும்.

மற்றொரு கதையைக் கேளுங்கள். அகத்தியர் தனது மனைவியை அழைத்து வரும்படி தொல்காப்பியரை அனுப்பினராம். அவர், 'எவ்வாறு அழைத்துவர' என்று கேட்ட காலம்............

..................... அகத்தியர்க்கு மாணாக்கர் சொன்னார். அவர் வெகுண்டு, மாணக்கரைச் சொர்க்கம் போகாமலிருக்கக் கடவது எனச் சபித்தனராம். இந்தப்படியொரு கதை கேட்டதுண்டாவென யோசியுங்கள்.

வைகையில் தண்ணீர் எத்தனை நாளைக்கு ஓடும். அன்றியும் தண்ணீர் அடித்துக்கொண்டுபோன ஒரு உயிரைக் காப்பாற்றியதற்கு மகிழ்ச்சியடைவார்களா? வருத்தப்படுவார்களா? அதற்கு வந்தனம் கூறுவதா? சாபமிடுவதா? அதனை இவரிடம் வந்து தெரிவிக்க வேண்டிய காரணம்தானென்ன? (பெருங்கரகோஷம்)

ஆனால் சொர்க்கம் என்பது வடதிசை என்பதால் இனி அவர் வடதிசை செல்ல வேண்டாமென்று சொல்லியிருக்கலாம். அஃதொருவாறு உண்மையாக விருக்கக் கூடும்.

இப்படிப் பல வித்திலும் நம்பமுடியாத கட்டுக் கதைகளே மலிந்து கிடக்கின்றன........

சங்க நூல்கள் இறையனார் களவியற் செய்தி....................

*[முடிவு கிடைக்கவில்லை]*

★

தமிழ்த் திருநாள் தோற்றுவித்த
பேராசிரியர் கா.நமச்சிவாயர் இயற்றிய

# பொங்கற் புதுநாள்
## வாழ்த்து

பொங்கற் புதுநாள் போந்தது போந்தது!
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!

பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!
பொங்குக பொங்கல், பொங்குக பாலும்!

ஒக்கலும் மக்களும் உகந்துடன் உண்க!
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!

புத்துடை உடுமின் புத்தணி அணிமின்!
பக்தி கொண்டே பரமனைப் பணிமின்!

நந்தம் தமிழ்மொழி நலம்பெற் றோங்கிட!
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!

தண்கடல் பரப்பிற் சாரும் மணலினும்!
பண்புற வானில் பரவும் மீனினும்!

வாழ்க அனைவரும், வாழ்க பல்லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!

★

# 9. சாலியர் மகாஜன சங்க 2-வது மாநாடு

## ***திரு. எ. நாயனாரின்*** தலைமைப் பேருரை
(8. 7. 1929)

*(அருப்புக் கோட்டையில் ஜூலை 8ஆம் தேதி கூடிய சாலியர் மகாஜனக் கூட்ட இரண்டாம் மகாநாட்டின் தலைவர் திரு. எ. நாயனார் அவர்கள் பி.ஏ.,பி.எல்., நிகழ்த்திய உரை வருமாறு.)*

இந்த மகாநாடு சிறக்கப் பெருங் கருணையுடன் இங்குக் குழுமியிருக்கின்ற பெரியோர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். சிறுவனாம் என்னைத் தலைவராக நியமித்துக் கௌரவப் படுத்திய சாலியர் சங்க நிர்வாகிகளுக்கும், வரவேற்புக் கழகத்தார்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம். அன்பர்கள் பணிக்க, ஏற்றுக்கொண்ட வேலையானது இனிது முடிய உங்கள் ஆதரவை வேண்டுகிறேன்.

நாம் மிகவும் நெருக்கடியான காலத்தில் வாழ்ந்து வருகிறோம். தேச முழுவதும் புத்துயிர் பெற்று வருகிறது. சமய, சமூக, அரசியல் துறைகளில் நாளுக்கு நாள் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. எங்கு பார்க்கினும் சுதந்தர தாகம் கொழுந்துவிட்டு எரிகின்றது. நமது சமூக முன்னேற்றத்திற்கான முயற்சிகள் எங்கும் நடக்கின்றன. சமூக மகாநாடுகள் கூடுவதையும் முன்னேற்றத்துக்கு இன்றியமையாததான தீர்மானங்கள் நிறைவேறுகிறதையும் என்றும் பார்த்து வருகிறோம். இவ்வித நிலைமையில் நம் குறைகளை ஆராய்ந்து நமது முன்னேற்றத்துக்கான வழிகளைக் கலந்தாலோசித்து முடிவு செய்ய நாம் இங்கு குழுமியிருக்கிறோம்.

சமூக முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு சாலியர் மகாசங்கம் என்ற சங்கத்தை நிறுவி முதலாவது மகாநாட்டை நடத்தியது

தவிர இரண்டாவது மகாநாட்டையும் கூட்டி வைத்த அருப்புக்கோட்டைப் பெரியோர்களுக்குப் பெரிதும் நாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். அருப்புக் கோட்டை நண்பர்களின் விடாமுயற்சியாலும், தீவிர உழைப்பாலுந்தான் இந்த மகாநாடு கூடவும் நாம் இங்கு குழுமிப் பரஸ்பர சகோதரத்துவத்தைக் காட்டவும் இடமேற்பட்டதெனச் சொல்லுவது மிகையாகாது.

நமது முதலாவது மகாநாடு கூடிய பிறகு நம்மை விட்டுப் பிரிந்த அரும் பெரும் தேசத் தலைவர்களின் நினைவு முன் எழுகின்றது. தேசச் சேவை செய்ய உடல், பொருள், ஆவி யாவும் தத்தஞ் செய்த பாஞ்சால சிங்கம் எனப் புகழ்பெற்ற லாலாஜியை இழந்தோம். சமூக ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டு உழைத்து வந்த உத்தமனாம் பனகல் அரசரைப் பிரிந்தோம். இவர்களது மரணம் ஆற்றொணாத் துயரை நமக்கு விளைவிக்கின்றது. இவர்களது பருவுடல்கள் மறைந்தாலும், நுண்ணுடல் நமக்கு ஊக்கமூட்டி வருகின்றன. இவர்கள் காட்டிய வழி நின்று தேச சமூகச் சேவை செய்து முன்னேற்ற மடைவதே இவர்கட்கு நாம் அமைக்கும் நினைவுக் குறியாகும்.

## கல்வி

நம் நாடு விடுதலை பெற்றுச் சுகவாழ்வடைய, நாட்டிலுள்ள பல சமூகங்களும் முன்னேற்றமடைய வேண்டும். முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விருப்பது கல்வி. கல்வியற்ற சமூகம் கண்ணிழந்தமை யொக்கும். ஆகையால் கல்வியைப் பரவச் செய்ய தீவிரமாய் முயற்சிக்க வேண்டும்.

நம்மவர்களில் பெரும்பான்மையோரும் எழுத்து வாசனை யறியாதவர்களாகவே இருக்கின்றனர். கையெழுத்தை மாத்திரம் போடத் தெரியும் என்ற நிலைமையில் படித்தவர்கள் எத்தனைபேர்! மழைக்கேனும் பள்ளிக்கூடங்களில் ஒதுங்காதார் எத்தனை பேர்! இந்தப் பரிதாபகரமான நிலைமையை மாற்ற ஊக்கமாய் வேலை செய்ய வேண்டும்.

சமூகத்தில் ஒவ்வொருவரும் ஆரம்பக் கல்வியாவது கற்றிருக்க வேண்டும். வறுமையினாலும் மற்றும் ஏற்படுகிற கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் கற்பிக்க வேண்டும். எவ்வளவோ அர்த்தமற்ற அனாசாரங்களுக்கு இடையில் உண்டான கண்மூடி வழக்கங்களுக்கும், குருட்டு நம்பிக்கைகளுக்கும் செலவு செய்யும் பணத்தைக் கொண்டு கல்வியைப் புகட்டலாம்.

ஆரம்பக் கல்வி புகட்ட உற்சாகத்தை ஊட்டுவதுடன் உயர்தரக் கல்வி கற்க, செல்வமும் சௌகரியமும் வாய்க்கப் பெற்றவர்களைத் தூண்ட வேண்டும். புத்திக் கூர்மையுள்ள எத்தனையோ ஏழை வாலிபர்கள் உயர்தரக் கல்வி கற்க வழியின்றித் தவிக்கிறார்கள். இந்த ஏழைப் பிள்ளைகட்குப் பொருளுதவி செய்து கல்வி பயிற்றுவிக்க வேண்டும். பொருளுதவி செய்ய ஒவ்வொரு ஊரிலும் சங்கங்கள் நிறுவவேண்டும். அச்சங்கங்களுக் கென்று பெரும் நிதிகள் இருத்தல் வேண்டும். இந்த நிதிகளிலிருந்து ஏழைப் பிள்ளைகட்குக் கல்வி புகட்ட பொருளுதவி செய்ய வேண்டும்.

இதுபோன்ற சங்கங்கள் சில நம் ஊர்களில் நிறுவப்பட்டிருப்பதை யான் அறிவேன். இதுபற்றி யான் ஒருபுறம் மகிழ்வுறினும், மற்றோர் பக்கம் துக்கமடைகிறேன். ஏனெனில் சில சங்க்ங்கள் நிறுவப்பட்டுச் சில நாள் உயிரோடிருந்து மாண்டு மடிந்து போயின. எனவே சாலியர் வசிக்கின்ற ஒவ்வொரு ஊரிலும் சங்கமும் நிதியும் தோன்ற வேண்டுமென்பதே எனது அவா.

ஆடவர்களுக்குக் கல்வி கற்பித்து வருவதுடன் பெண்மக்களுக்கும் கல்வி புகட்ட வேண்டும். தாய்மார்களே, சிறுவர்களுக்கு முதல் ஆசிரியர்களாக அமைகின்றனர்.

கற்ற பெண்களையுடைய சமூகங்களிலே தான் அறிவும், ஆற்றலும், வாய்க்கப் பெற்ற வாலிபர்கள் காண்பது சகஜமாயிருக்கின்றது. ஆகையால், பெண்களுக்கும் கல்வி அத்தியாவசியம்.

உயர்தரக் கல்வி கற்று, இல்லாத பட்டங்களையெல்லாம் பெற்று உத்தியோகம் பெற வேண்டுமென்று யான் சொல்லவில்லை. குழந்தைகளைச் சரிவர வளர்க்கவும், குடும்பக் காரியங்களைச் சரிவர நடத்தவும் அவசியமுள்ள கல்வியையாவது புகட்ட வேண்டும். செல்வச் சிக்கனம், சுகாதாரம், பிள்ளை வளர்ப்பு ஆகிய அறிவைப் புகட்ட வேண்டியது இன்றியமையாதது.

### ஒழுக்கம், பழக்க வழக்கங்கள்

சமூகம் சிறக்க, கல்வியோடு ஒழுக்கமும் வேண்டும். ஒழுக்கமற்ற கல்வி பொய்மையை மெய்யென்றும், மெய்மையைப் பொய்யென்றும் சாதிக்கும். இது கொடிய விஷயமேயாகும். நமக்கு மேல் என்று கருதப்படுபவர்கள் நம்மை நேசிக்க வேண்டும். நம்மை சமமாகப் பாவிக்க வேண்டும் என்று விரும்புவது போல நமக்குக் கீழ் என்று கருதப்படுபவர்களை நேசித்து அவர்களைச் சமமாகப் பாவிக்க வேண்டும்.

தீண்டாமை ஒழிய வேண்டும். அறிவையும் உடல் நலனையும் செல்வத்தையும் அழிக்கிற மதுபானம் அகலுதல் வேண்டும். சமூகத்தை நாசம் செய்கின்ற மூட வழக்கங்கள் ஒழிய வேண்டும். டாம்பீகமான கல்யாணச் செலவுகள், குழந்தை விதவைகளின் தொகையை அதிகப்படுத்தும் பால்ய விவாகம், கிழவன் குழந்தையை மணத்தல் போன்ற பொருத்தமற்ற விவாகங்கள் முதலியன ஒழிதல் வேண்டும். சமூகம் ஆற்றலும் பலமும் அடைய பிரிவு உணர்ச்சி மறைய வேண்டும். பிரிந்து கிடக்கின்ற சமூகம் எவ்வித வித்தியாசமு மின்றி ஒன்றுபடல் வேண்டும்.

## கைத்தொழில், வர்த்தகம்

கைத்தொழில் அல்லது வர்த்தகத்தினால்தான் தேசங்களும், சமூகங்களும் செழித்து மேன்மையடைகின்றன. மனிதர்கள் சுயேச்சை அடைகின்றனர். ஆகையால் கைத்தொழில்களில் உயர்வான நம் நெசவுத் தொழிலையும், ஐவுளி வியாபாரத்தையும் விருத்தி பண்ண வேண்டும்.

ஒரு காலத்தில் மேலான நிலைமையிலிருந்த நம் நெசவுத் தொழில், தற்காலம் அழிந்து நம்மவர்கள் வறுமை வாய்ப்பட்டிருக்கின்றனர். இதன் காரணம் அந்நிய நாட்டு ஆலைத் தொழிற் போட்டியே. இயந்திரங்களைக் கொண்டு நெசவுத் தொழில் நடத்தப் போதுமான பணம் நம்மிடம் இல்லை. ஆனால் முயற்சியிருந்தால் ஆலைத் தொழிலோடு போட்டி போடக் கூடும் என்று சென்னைக் கைத்தொழில் இலாகா மாஜித் தலைவர் சர். ஆல்பர்ட் சாட்டர்டன் என்பார் கூறியிருக்கிறார்.

நம் தொழிலை விருத்தி பண்ண ஊக்கம் வேண்டும், விடாமுயற்சி வேண்டும், பெரும்பாலும் விசை நாடாத்தறி முறையை அனுசரித்து வருகின்றோம். சரிகை வேஷ்டிகள், பட்டுப் புடவைகள், சட்டைகளுக்கான துணிகள் யாவும் நெய்கிறோம். இவைகளை நயமாயும் பகட்டாயும் பிறர் மதித்து ஏற்றுக் கொள்ளும்படியும் ஆக்க வேண்டும்.

புதிய முறைகளைக் கற்பிக்க நம்மவர்கள் வசிக்கும் இடங்களில் ஆரம்பப் பாடசாலைகளோடு நெசவுப் பாடசாலைகளையும் ஸ்தாபிக்க அரசாங்கத்தாரை வேண்டிக் கொள்ளவேண்டும்.

புத்தி கூர்மையுள்ள வாலிபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும். இது விஷயத்தில் உதவி புரிய அரசாங்கத்தாரைக் கேட்க வேண்டும்.

ஊர்ஊராக வருடந்தோறும் சமூக மகாநாடு நடைபெறும்போது ஒரு கைத்தொழில் மகாநாடும் நடத்தி நெசவு சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெளிவுபடுத்தல் வேண்டும்.

நெசவுப் பொருட்காட்சியொன்று நடத்திப் போட்டிப் பரிசுகள் வழங்கப்படல் வேண்டும். நம்மவர்கள் வசிக்கும் இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். சங்கங்கள், நெசவுக்கு வேண்டிய பொருள்களை வரவழைத்துத் தவணைக் கடனுக்குக் கொடுத்து நம்மவர்கள் தயாரிக்கும் ஆடைகளைப் போட்டியில் குறைத்து விற்கும்படி விடாமல் நியாயமான விலைக்கு வாங்கிக் கொண்டு மொத்தமாய் வெளிக்கு அனுப்பவேண்டும்.

உலகம் எவ்வித ஆடைகளை விரும்புகின்றது என்று தெரிந்து அதன்படி தயாரிக்க ஏற்பாடுகள் செய்யவும், நெசவுத் தொழிலில் தேர்ந்தவர்களைக் கொண்டு வீடுதோறும் சென்று நூதன முறைகளைக் கையாளுமாறு கற்பித்து வரவும் வேண்டும்.

வியாபாரத்துக்குப் பயிற்சி தவிர, கல்வியும் வேண்டும். நம்நாட்டில் பெரும்பாலும் படிப்பற்றவர்களே வியாபாரம் செய்கின்றனர். மேல் நாடுகளில் நன்கு படித்த பின்னரே வியாபாரத்தில் இறங்குகின்றனர். சமுதாயத்தில் ஒருவரும் 12–வயது வரையாவது படித்த பிறகே தொழிலில் இறங்க வேண்டும்.

## பிரதிநிதித்துவம்

நமது குறைகளை நாமே நிவர்த்தி செய்து கொள்வதுமல்லாமல் அரசாங்கத்தாரையும் நமக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு கேட்க வேண்டும். நமது குறைகளை அரசாங்கத்தாரிடம் எடுத்துச் சொல்ல சட்ட சபைகளிலும் ஜில்லா போர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்களிலும் நம்மவர்களின் பிரதிநிதிகள் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுப்பு மூலம் சட்ட சபைகளிலோ ஸ்தாபனங்களிலோ அங்கம் பெறுவது நம்மால் இயலாது. ஆகவே நம்மவர்களிலிருந்தும் பிரதிநிதிகள் நியமிப்பதற்கு அரசாங்கத்தாரைக் கேட்க வேண்டும்.

### பத்திரிகை

சென்ற மகாநாட்டில் பத்திரிகையின் அவசியத்தை நன்குணர்ந்து ஒரு பத்திரிகை நடத்தப்படவேண்டும் என்றதோர் தீர்மானமும்

நிறைவேறியது. தீர்மானம் காகித அளவோடு நின்றதே யன்றிச் செய்கையில் கொண்டு வராததைப் பற்றி வருந்துகிறேன்.

நம் சமூகத்தின் சரித்திரங்களையும், நாம் அடைந்திருக்கும் நிலைமையையும், நமது குலம் முன்னேற்ற மடைவதற்கு வேண்டிய விஷயங்களையும் விளக்கி நம் சமூகத்திற்குள் நல்லுணர்ச்சியும் ஊக்கமும் ஒற்றுமையும் ஏற்பட ஒரு பத்திரிகை மிகவும் அவசிய மென்பதை இந்த மகாநாட்டிலும் வற்புறுத்திக் கூறுகிறேன்.

## இறுவாய்

அன்பர்களே! இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் என்னை அன்புடன் ஏற்று என் உபந்நியாசத்தை அமைதியோடு கேட்டிருந்ததற்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*- திராவிடன் (11-8-1929)*

★

*(சாலியர் மஹாஜன சங்கம் நாகர்கோவில் முனிசிபல் பிரசிடெண்ட் திருவாளர் ஏ.நாயனார் பி.ஏ.,பி.எல்., தலைவர்- அருப்புக்கோட்டையில் சாலியர் முதல் மாநாடு 29.4.1928இல் நடைபெற்றது.) - (திராவிடன்)*

# 10. கதரின் பெருமை

## (The Glory of Khaddar)

***டாக்டர் அருள்மணி பிச்சமுத்து*** (1930, மே)

மனிதனின் தினசரி வாழ்க்கைக்கு அத்தியந்த அவசியமானது அன்னமும் ஆடையுமே. அன்னம் உயிரைக் காப்பது. ஆடை உயிரினும் உயர்ந்த மானத்தைக் காப்பது. ஆகையால் ஆடையைத் தரும் நூல் நூற்றல், நெய்தல் தொழில்கள் பல சமயங்களிலும் பல தேசங்களிலும் வெகு சிறப்பாகவே கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றன.

உலகத்தில் முதன் முதல் இயற்றப்பட்ட நூலென்று மேல் நாட்டாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வேதங்களில் நெய்தல் என்னும் பதம் அடிக்கடி காணப்படுகிறது.

மணமகன் மணவறையில் மணமகள் நெய்த ஆடையையே உடுத்த வேண்டுமென்று ரிக், யஜுர், அதர்வ வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது. இது நிச்சயமென்று நிரூபிக்க, இன்னமும் இந்தப் பழக்கம் அஸ்ஸாம் தேசத்தில் நடந்து வருகிறதென்று தீனபந்து ஆண்ட்ரூஸ் அவர்கள் கூறுகிறார்கள். விஷ்ணுவைச் சிறப்பித்துக் கூறும் 100 நாமங்களில் இரண்டின் பொருள் நூற்பவர் என்பதாம். சில உற்சவ தினங்களிலும் நூலையே மாலையாகச் சாற்ற வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆனால் இப்பொழுது நாம் காண்கிற காட்சியென்ன? கடவுள் வசிக்கும் தேவாலயங்களில் சொரூபங்களை அலங்கரிப்பது, பரதேசிப் பருத்தி நூல் துணிகளும் பட்டு ஆடைகளுமே யென்றும், பூரி, அயோத்தி இன்னும் தாங்கள் தரிசித்த மற்ற தேவாலயங்களில் பார்த்தது துயரக் காட்சியென்றும் காந்தியடிகள் தமது பத்திரிகையில் கூறுகிறார்கள். அநேகமாய், பூணூல் தரிப்பவர்களும் சாஸ்திரப்படிக் கையினால் நூற்ற நூலை உபயோகிக்காமல், மில் அல்லது பரதேசி நூலைக்கொண்டே தயாரிக்கிறார்கள் என்று தமது பத்திரிகையில் விசனமாய்க் கூறுகிறார்கள்.

புத்தர் பெருமான் பெண்கள் மெல்லிய மஸ்லின் துணிகளை உபயோகிக்கக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறார். நகுல பீடமென்பவர் சாகும் தறுவாயில் தன் மனைவி தான் இறந்தபின் வறுமையினால் கஷ்டப்படுவாளேயென்று வருந்தினபோது, மனைவி அதை அறிந்து, "எனக்கு நூல் நூற்கத் தெரியும்; இதைக்கொண்டு பிழைப்பை நடத்திக் கொள்வேன்; ஆகையால் நீங்கள் வருந்த வேண்டாம்" என்று ஆறுதலான வார்த்தை சொன்னாளென்று புத்த சரிதைகளில் ஒரு கதை உண்டு.

கிறிஸ்து மதத்தில் ஸ்திரீகளுக்குச் சொல்லப்பட்ட உபதேசத்தில், பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும் நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும் நற்கிரியைகளினாலும் தாங்கள் அலங்கரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இது சகோதரிகள் கவனிக்க வேண்டிய விஷயம் : உதவி மறுத்தல் காலத்தில் நான் இங்கிலாந்தில் இருந்தபொழுது கதரைப் பற்றிப் பலமாக அங்கே பேச்சு நடந்தது. ஏழு வருஷத்திற்கு முன் நான் இந்தியா தேசம் திரும்பி வந்தபோது, "எல்லோரும் கதராடைதான் அணிந்திருப்பார்கள். நான் மாத்திரம் அந்நியத் துணி யணிந்து விகாரமாய்த் தோன்றுவேனே" என்று நாணத்தோடு வந்தேன். ஆனால் இங்கே எங்கு பார்த்தாலும் அதற்கு முழுவதும் எதிரிடையாக மெல்லிய சீமை மஸ்லின் துணிகளும், சீமையில் அவர்கள் பார்த்து நகைக்கும்படியான பழைய மாதிரி உடைகளே எங்கும் நிறைந்திருப்பதைப் பார்த்து வியப்பும் விசனமுமா யிருந்தது.

மகமதிய மதத்தில் பெண்களின் உத்தமத் தொழில் நூல் நூற்றலே என்று மகம்மது நபிநாயகம் அவர்கள் கூறியதாகத் தாபெமுல் இஸ்லாம் என்னும் மகம்மதிய நூல் கூறுகிறது. பெண்கள் வெளியில் செல்லாமலும், பிறரை எதிர்பாராமலும் கற்புடன் ஜீவனம் செய்வதற்கு உதவுவதாய், நூற்றல் பெண்களின் உத்தமத் தொழிலாயிற்று என்ற ஒரு மகம்மதிய நூலாசிரியர் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

காந்தியடிகள் அவர்கள் சுற்றுப் பிரயாணத்தில் ஒரு இடத்தில், 'நாளைக்குக் கண்ணுக்கு இனிய காட்சியைப் பாருங்கள்' என்று சொல்லி, தங்கள் நண்பரில் ஒருவருக்குப் பந்தலின் நிழலில் நூற்கும் 800 மகம்மதிய சகோதரிகளைக் காட்டினார். எவ்வளவோ ஏழை மகம்மதிய சகோதரிகளுக்கு நூல் நூற்பதினால் பிழைப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஸாக்ஸனி என்பது ஐரோப்பாவின் உள்நாடு. அந்நாட்டில் விவாக முகூர்த்த தினத்தன்று மணமகன் மணமகள் நெய்த உடையையே உடுத்துவது வழக்கமென்று வீபர் துரை கூறுகின்றார்.

இங்கிலாந்தில் மனிதனுக்கு அவசியம் வேண்டிய அன்னம் ஆடை இரண்டையும் தரக் கூடிய தொழில்கள் விவசாயமும் நூற்றல் நெய்தலுமாகையால் ஆண்கள் விவசாயத்தையும், பெண்கள் நெய்தல் தொழிலையும் செய்ததாக அர்த்தம் விளங்கும் பதங்கள் இங்கிலீஷ் பாஷையில் வழங்குகின்றன. இத்தகைய உயர்ந்த தொழில் யந்திர வரவினால் அழிந்துவிட்டதைக் குறித்து ஆங்கில சமஸ்தான வித்வான் வர்ட்ஸ்வொர்த் மகாகவி வருந்துகிறார்.

தமிழ் வேதம் உரைத்த திருவள்ளுவ நாயனார் அதில் உழவுத் தொழிலைப் புகழ்ந்ததோடு, செய்யும் தொழிலெல்லாம் நெய்யும் தொழிக்கு நிகரில்லை எனக் கூறியிருக்கிறார். அவர் செய்து வந்த தொழிலும் நெய்தலேயாகும்.

## இந்தியாவின் முற்கால நிலைமை

நூறு வருஷங்களுக்கு முன் நூற்றல் நெய்தல் தொழிலில் இந்தியாவின் நிலைமை என்னவென்று பார்ப்போம். உலகத்திலுள்ள பல ஜாதியாரில் இந்தியர்களே முதன் முதலில் இத்தொழிலைக் கையாண்டார்கள் என்பதற்கும், அது பல்லாயிர வருஷங்களுக்குமுன் என்பதற்கும், பல அத்தாக்ஷிகள் உண்டு. இந்தியர்களே முதன் முதலில் நாகரிகம் அடைந்தனர் என்பதை அறிஞர் பலரும் ஒப்புக்கொள்கின்றனர். மனிதனுக்கு அத்யாவசியமாகிய அன்னத்தையும் ஆடையையும் உற்பத்தி செய்து உபயோகிப்பதே நாகரிகத்தின் முதல் அம்சமாகும்.

உலகத்தில் முதல் முதலாக இயற்றப்பட்ட நூல் இந்து வேதங்களென்றும், அவை இயற்றப்பட்ட காலம் பல்லாயிர வருஷங்களுக்கு முன் என்றும், அறிவாளிகள் முடிவு செய்திருக்கிறார்கள். அவ்வேதங்களில், உழுதல் நெய்தல் முதலிய பதங்கள் அடிக்கடி காணப்படுகின்றன. ஆகவே வேத காலத்திற்கு முன்னதாகவே இந்தியர்கள் உழுதும் நெய்தும் ஜீவித்திருக்க வேண்டும்.

இந்தியர்கள் நெய்த துணி அழகாயும் மெல்லியதாயும் இருந்தது. அவை பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. அதனால் இந்தியர்களுக்கு ஏராளமான செல்வம் கிடைத்தது.

300 வருஷங்களுக்கு முன் எகிப்து தேசத்தில் அரசாண்ட அரசர்களின் தேகங்கள் மீது போர்த்தப் பட்டிருந்த துணிகள் மெல்லியவை; இந்தியவில் நெய்யப்பட்டவைகள் என்று மேல் நாட்டார் கூறுகின்றனர்.

பலஸ்தினாவில் அரசு புரிந்த சாலமோனுக்கு இந்தியாவிலிருந்து சிந்து என்னும் துணி போயிற்றாம். சிந்து என்றால் மஸ்லின் என்று பொருள். ரோமாபுரியில் சுமார் 200 வருஷங்களுக்கு முன் வாழ்ந்திருந்த பிளினி என்பவர், அவ்வூரிலுள்ள பெண்கள் வருஷந்தோறும் சுமார் 40 லட்சம் பெறுமான இந்திய மஸ்லீன் துணிகளை வாங்கியதாகக் கூறுகிறார். அத் துணிகளில் சிலவற்றிற்கு, காற்றால் செய்யப்பட்டது என்று பெயர் கூறுகிறார். அதாவது அவ்வளவு மெல்லியவைகளாம்.

ஒளரங்கசீப் மன்னர், தம்முடைய குமாரத்தி சபையில் வந்து நின்றபோது, 'இப்படி நீ சபையில் துணியில்லாமல் வந்து நிற்கிறது எனக்கு அவமானமாயிருக்கிறது' என்று கோபித்தார். அப்போது அவள், 'தகப்பனாரவர்களே! நான் அணிந்திருக்கும் ஆடையை 7 மடிப்பாக மடித்து உடுத்தியிருக்கிறேன்' என்றாளாம். அப்படியானால் அந்த ஆடை எவ்வளவு மெல்லியதாயிருக்கு மென்பதை நாமே நிதானித்துக் கொள்ளலாம்.

1000—வருஷங்களுக்கு முன்னிருந்த ராஜ ராஜ சோழர் காலத்தில் வெனிஸ் நகரத்திற்கு ஏராளமான துணிகளும் பட்டுகளும் அனுப்பப்பட்டதாகத் தெரிகின்றது. அக் காலத்தில் நெய்த துணி பாலாவி போலும் பாம்புச் சட்டை போலும் இருந்ததென்று தமிழ் நூல்களால் அறிகிறோம்.

ஆங்கிலேயர் சுமார் 300 வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்தபொழுது நம் கைத்தொழில் முன்போலவே சிறப்பாக நடந்து வந்தது. 1602ஆம் வருஷம் காப்டன் லங்காஸ்டர் துரை 20 கஜமுள்ள டாக்கா மஸ்லின் துணியைக் கைக்குட்டை போல் மடித்துத் தம் மகாராணி எலிஜபேத் அம்மைக்குக் காணிக்கையாக அனுப்பியிருக்கிறார். இன்னமும் ஆங்கிலேயர்களுக்கு இது ஞாபகத்திலிருக்கிறது. ஏனெனில் நான் லண்டனிலிருந்தபோது, என்னிடம் ஆங்கில நண்பர்கள் 'அழகான டாக்கா மஸ்லின் உன்னிடம் இருக்க வேண்டுமே, அதைக் காட்டு' என்கிறார்கள். என்னுடைய அறியாமைக்காக விசனப்பட்டேன். இப்பேர்ப்பட்ட அறிவீனத்திற்குக் காரணம் அரசாங்கத்தின் அடிமைப் படிப்பே. இதிலும் இன்னும் இதர விஷயங்களிலும் ஆங்கில அரசாங்கம் நமது புராதன நாகரிகம் கலை சாஸ்திரங்கள் தேசீய உண்மைச் சரித்திரங்களைப் பாடசாலைகளில் கையாடாதபடி தங்கள் தேசத்தின் கல்வி முறைபோல் அரசாங்க முறைகளுக்கேற்பத் தங்கள் சுயநலப் படிப்பு முறையைக் கையாள்வதே இதற்குக் காணரம்.

1721ஆம் வருஷத்தில் இந்தியாவில் அரசாண்ட ஜெகாங்கீர் பாதுஷா காலத்தில் நெய்த மஸ்லின் 15 கஜ நீளமுள்ளது முக்கால் பலம் நிறைதான் இருந்ததாம்.

1854இல் இந்தியர்கள் ஒரு ராத்தல் பஞ்சிலிருந்து 250 மைல் நீளமுள்ள அதாவது 500ஆம் நெம்பர் நூல் நூற்றதாக டாக்டர் டெயிலர் துரை எழுதுகிறர்.

நூற்றல் தொழில் அழிந்து போனாலும் நெய்தல் தொழில் முன்போலவே உலகத்தாரால் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. 1900–ஆம் வருஷம் இங்கிலாந்தில் ஓல்ட்ஹாம் பட்டணத்தில் நடந்த கண்காட்சியில், தலைவர் இந்தியரின் துணிகளைப் புகழ்ந்து இந்தியரின் கைவேலைப்பாட்டிற்குச் சமமாக நம்மால் நெய்ய முடியவில்லையே என்று வருந்தியிருக்கிறார்.

லண்டனில் நான் வழக்கமாய் ஆராதனைக்குப் போகும் ஒரு பெரிய கோவிலில், பாதிரியார் ஒருவர் 6–மாதம் இந்தியா தேசம் சுற்றிப் பார்த்துத் திரும்பி வந்த பின்னர், தான் இந்தியாவில் கண்ட கண்காட்சிகளை விவரித்துச் சொன்னதாவது:–

இந்தியர் ஒருவர் பித்தளைத் தட்டில் சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறதைப் பார்த்து, தாங்கள் முன்னுக்கு 'மாதிரி'யில்லாமல் எப்படி வரைகிறீர்களென்று கேட்டதற்கு, அவர் தம் தலையைத் தொட்டு, 'மாதிரி என் மூளையில்தான் இருக்கிறது' என்றாராம். இது பிரிட்டிஷ் தொழிலாளிக்கும் இந்தியத் தொழிலாளிக்கும் உள்ள வித்தியாசம். பிரிட்டிஷ் தொழிலாளி முன்னுக்கு மாதிரி ஒன்றில்லாது சித்திரம் வரைய முடியாது. இதிலிருந்து ஞான அர்த்தமான கடவுள் தம்முடைய மனதிலிருந்தே உலகத்தையும் மனிதர்களையும் சிருஷ்டித்தார் என்று அந்தப் பாதிரியார் பிரசங்கம் செய்தார்.

ஆங்கிலச் சித்திரக்காரர் ஒருவர் ஒரு சமயம் இந்திய தேசத்தைச் சுற்றிப் பார்த்துத் திரும்பின பின், லண்டனில் இந்திய மகாசபைக் கூட்டத்தில் நம்முடைய கிராமங்களின் அமைப்பையும் இயற்கை செயற்கை அலங்காரத்தையும் நமது வீடுகளின் உட்புற வெளிப்புறச் சித்திரச் சிறப்பு மகிமையையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார். நாம் அணியும் ஆடை ஆபரணங்களின் வேலைப் பாட்டிலிருந்தும் உருவங்களிலிருந்தும் சேலைகளின் வேஷ்டிகளின் அழகான சித்திரம் தீர்ந்த கரைகளிலிருந்தும் சரித்திர காலவரைகளை வரையறுக்க முடியுமென்று சொன்னார். இந்தியர்களுக்கு இது ஆச்சரியமாயிருந்தது. இப்படி நமது புராதனக் கலைகளையும் சாஸ்திரங்களையும் நமது தினசரி வாழ்க்கையிலும் குடியிருக்கும் வீடுகளிலும் அணியும் ஆடை ஆபரணங்களிலும் உருவாகக் கொண்ட நமக்கு அந்நிய நாட்டார் உணர்த்திக் காட்ட வேண்டியிருக்கிறது.

இப்படி இருக்கையில் நம்மில் அநேகர் நமக்குப் பொருந்தாத நமது நாட்டுச் சீதோஷ்ண ஸ்திதிக்கு அவசியமில்லாத ஆடைகளை ஆங்கிலேயர்களுடைய பாவனையில் அவர்கள் நகைக்கும்படியாக ஆண்களும் பெண்களும் உடுத்துகிறோம். இதைப் பற்றிச் சில மாதங்களுக்கு முன் "யௌவன இந்தியா" பத்திரிகையில் நிர்த்தேசீய மாக்கல் என்ற தலைப்பில் நீண்டதோர் கட்டுரை காந்தியடிகள் வரைந்திருக்கின்றார்கள்.

### தற்கால நிலை

300 வருஷங்களுக்கு முன்னிருந்து சுமார் 70 வருஷங்களுக்கு முன்வரை சிறப்பாய் நடந்து வந்த இந்திய நூல் நூற்றல் தொழில், இப்போது மறைந்து விட்டதன் காரணமென்ன? காரணம் தற்கால அரசாட்சி முறையேயாகும்.

ஆங்கிலேயர் இந்தியா தேசம் வருமுன்னர் பருத்திநூல் துணிகளைப் பார்த்ததுமில்லை; உடுத்தியதுமில்லை. ஆகையால் அவைகளின் மேல் அவர்களுக்கு அதிக விருப்பம் உண்டாயிற்று. அதனால் துணிகள் இந்தியாவிலிருந்து ஏராளமாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. ஆகையால் அந்த நாட்டுக் கம்பளிப் பட்டுச் சரக்குகள் விலை பெறாமல் போயின. அத்தொழிலாளிகள் அதிக திகிலடைந்தனர். அரசாங்கத்தாரிடம் முறையிட்டார்கள். அதன்பின் 1721ஆம் வருஷம் சில குறிப்பிட்ட துணி வகைகள்தான் இங்கிலாந்துக்கு வரலாமென்று சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அக் குறிப்பிட்ட துணிகளில் சல்லாவும் ஒன்று.

1757இல் 30 லக்ஷம் ரூபாய் பெறுமான சல்லாத் துணி, டாக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மறுபடியும் ஆங்கிலத் தொழிலாளிகள் முறையிட்டனர். இந்தியச் சரக்குகளை வரவொட்டாமல் தடுக்க 1812இல் அவைகள் மீது 100க்கு 70,80% வீதம் வரி ஏற்படுத்தினார்கள். அதனால் துணி விலை கூடினாலும் ஆங்கிலேயர் அவைகளையே விரும்பி வாங்கினர். அதன்மேல் அரசாங்கத்தார் இந்தியத் துணியை இங்கிலாந்தில் விற்பவர்களுக்கும் உடுத்துகிறவர்களுக்கும் முறையே 20 £ (300ரூ.), 5 £ (75ரூ.) அபராதம் விதித்தார்கள்.

அன்று முதல் இந்தியத் துணி இங்கிலாந்துக்குப் போவது அடியோடு நின்றுவிட்டது. இப்போதும் அரசாங்கம் நமது கையிலிருந்தால் நாமும் இதேவிதமாக நியாயமான வழியில் வரியை விதித்து நமது பருத்தி, பட்டுத் துணிகள் உற்பத்தியாகவும் விற்பனை செய்யவும் கூடும்.

இப்படி நூற்றல் நெய்தல் தொழிலை நசுக்கிவிட்டு, அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யாவிட்டாலும், உள் நாட்டிலுங் கூடத் தொழில் விருத்தி நமது பருத்தி, பட்டுத் துணிகள் உற்பத்தியாகவும் விற்பனை செய்யவும் கூடும்.

இப்படி நூற்றல் நெய்தல் தொழிலை நசுக்கிவிட்டு, அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யாவிட்டாலும், உள் நாட்டிலுங் கூடத் தொழில் விருத்தி செய்யவும் விற்பனை செய்யவும் விடாதபடி பிரிட்டிஷ்காரர் எடுத்துக்கொண்ட அநீதியான முறைகளையும், இந்தியர்களைப் பலாத்காரமாய்த் தொழிலைவிடச் செய்த கதையையும், இங்கிலாந்தில் அவர்கள் செய்த தீவிரப் பிரசாரங்களையும் நாம் கவனிக்கும்போது நமது மனதில் எழும்பும் கசப்பையும் கோபத்தையும் அடக்குவது கஷ்டமாயிருக்கிறது.

இப்படிக் கைத்தொழில் அழிக்கப்பட்டதால் இந்தியாவிலுள்ள அநேக தொழிலாளிகள் வேலையில்லாமல் தெருவில் நிற்கிறார்கள். இதைக் காட்டிலும் நமது அரசாங்கத்தின் கெடுதி வேறில்லையென்று ஸ்ரீமான் கேயர்டு துரை கூறுகிறார்.

முன்னால் ஐந்து கோடி ஜனங்கள் நெசவுத் தொழிலையே தங்களுக்கு ஜீவன உபயோகமாக வைத்திருந்தார்கள். இப்போதோ சுமார் 28 லட்சம் தறிகள்தான் இருக்கின்றன. தொழிலாளிகள் தங்கள் தறிகளை உழவுக் கலப்பைகளாக மாற்றி மூளை கெட்டுக் கூலியாளாக நேர்ந்திருக்கிறதென்று ஸ்ரீமான் ஹண்டர் துரை கூறுகிறார்.

காஷ்மீர் சால்வை நெசவுக்காரர் கொள்ளைக் காரர்களாகி விட்டார்கள் என்றும் பம்பாய் சேலம் ஜில்லாக்களில் தோட்டிகளாகவும், பஞ்சாபில் பட்டாளச் சேவகர்களாகவும் மாறிவிட்டார்கள் என்றும், "யௌவன இந்தியா" பத்திரிகையில் மகாத்மா காந்தியடிகள் கூறுகிறார்.

உலகத்திற்குத் துணி கொடுத்தது போக, இப்போது நாம் வருஷத்திற்கு 60 கோடி ரூபாய்க்கு அயல்நாட்டுத் துணி வாங்க நேரிட்டது. இதுவரையில் துணி வகையில் மட்டும் நம் நாட்டிலிருந்து சென்ற பணம் 6–வருஷத்திற்கு முன் எடுத்த கணக்கின் பிரகாரம் 4731 கோடி ரூபாய். இவ்வளவு பெருந்தொகை நாட்டை விட்டுப் போகுமானால், இந்தியா ஏழ்மை அடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. நாளுக்கு நாள் வருமானமும் குறைகிறது.

1850–ஆம் வருஷத்தில் ஒருவருக்குத் தினசரி வருமானம் 2 அணா. 1927–ஆம் வருஷத்தில் ஒருவரது தினசரி வருமானம் 11

பைசா. அதலால் நாட்டிலுள்ளவர்களில் 3½ கோடி பேர் பிச்சைக்காரர், 10 கோடி பேர்கள் வருஷத்தில் ஒரு வேளைகூட வயிறார உண்டறியாதவர்கள். சென்ற 10 வருஷத்தில் 36 பஞ்சங்கள் தோன்றின. அவைகளில் 3 கோடிபேர் உயிர் துறந்தனர். 2 கோடி பேர் சாகும் தறுவாயில் இருந்தனர் என்று ஸ்ரீமான் பி.ஸி.ரே சொல்லுகிறார்.

விவசாயத்தையும் கைத்தொழிலையும் பழையபடி விருத்தி செய்ய வேண்டும். அப்படியானால்தான் நாம் புராதன காலம்போல் பஞ்சமில்லாமல் பட்டினியில்லாமல் சுகமாக வாழ முடியும். ஆனால் அப்படி விருத்தி செய்வதற்கு யாதொரு முயற்சியும் செய்யாது ஒழித்தது அரசாங்கம். ஆகையால் தன் கையே தனக்கு உதவும் என்கிறபடி நாம்தான் முயற்சி செய்ய வேண்டும். விவசாயத்தை எல்லோரும் விருத்தி செய்ய முடியாது. ஏனெனில் எல்லோருக்கும் நிலமுமில்லை. விவசாயத்திற்கு வேண்டிய பணமுமில்லை. ஆகையால் நாம் எல்லோருமாக விருத்திசெய்ய வேண்டியது கைத்தொழிலே யாகும்.

கைத்தொழிலில் முதன்மை பெற்றது, எல்லோருக்கும் பலன் தரத் தக்கது, விவசாயிகளுக்கு உதவியாய் நிற்பதும், வருஷத்தில் 3,4 மாதங்களாக வயல்களில் வேலையில்லாத சமயம் விவசாயிகளும் மற்றக் குடி ஜனங்களும் வீண்பொழுது போக்காமல் செய்யக்கூடியதும், நூல் நூற்றல் நெய்தல் தொழிலேயாகும்.

நம் நாட்டில் விளையும் பருத்தியை அயல் நாடுகளுக்கு அனுப்பி அங்கிருந்து துணியை வாங்கி உடுத்துவதால் ஏழைகளாவதை விட்டு, நாம் அயல் நாட்டுத் துணிகளையும் நூலையும் வாங்காது நம் நாட்டிலேயே நூல் நூற்று நெய்து உடுத்துக் கொண்டால் வருஷந்தோறும் 60 கோடி ரூபாய் நமக்கு மிஞ்சும். ஏழைகள் பிழைப்பார்கள். நாளடைவில் செல்வம் பெருகும். வறுமை நீங்கவே பிறரை எதிர்பாராமல் வாழச் சக்தி பெறுவோம். பெறவே அடிமைத்தனம் நீங்கும். சுயராஜ்யம் சித்திக்கும்.

### *கதர் அணிவதற்கு ஆட்சேபனைகளும் சமாதானங்களும்*

"கதர் முரடாயிருக்கிறது" நூற்றல் தொழிலை வெகு நாளாக மறந்திருந்து இப்போது திரும்பவும் ஆரம்பிக்கும்போது முதலில் நூல் முரடாயிருக்கும். முரடாயிக்கிறதென்று நாம் இதை உபயோகிக்காவிட்டால் மறுபடியும் நூற்பது எப்படி? நூற்க நூற்கத்தானே நூல் நன்றாயிருக்கும். ராணியவர்கள் ஒருவருக்கு வைத்தியம் பார்க்கும்போது நான் நூல் நூற்பதைப் பற்றிச் சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு அதைக் காட்ட வேண்டும் என்று அபிமானத்தோடு அவர்கள் கேட்டார்கள்.

அப்படியே என் ராட்டினத்தை அவர்களிடம் கொடுத்து அரைமணி நேரந்தான் காட்டிக் கொடுத்தேன். ஒரு மாதம் கழித்து என் ராட்டினத்தைத் திருப்பி அனுப்பினபோது 6 சிட்டம் 30 நிர். நூலை ராட்டினத்திற்கு வாடகை என்று அனுப்பி வைத்தார்கள். நூல்கள் முறுக்கெல்லாம் சரிதானா வென்று பார்க்க வேண்டும் என்ற கதர் நெசவுக் காரர் ஒருவரிடம் நூல்களைக் காட்டினேன். அப்போது அவர் ராணியுடைய நூலை எடுத்துப் பார்த்து இதுதான் சரியான சைஸ் முறுக்குக் கொண்டதென்று பொறுக்கி எடுத்து, இதுதான் மாதிரி என்று சொன்னார். அந்த நூல் நூற்றது இன்னார் என்று சொன்னபோது ஆச்சரியப்பட்டார்.

இந்தியா தேசத்தில் மாத்திரமல்ல, ஐரோப்பா, இங்கிலாந்து முதலிய இதர தேசங்களிலும் அரண்மனைகளில் ராணிகளும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நூல் நூற்றதாகச் சொல்லப்படுகிறது. இது சகோதரிகள் கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

முதலில் துணி முரடாகத் தோன்றினாலும் இரண்டொரு வெள்ளைக்குப் பின் வெகு மிருதுவாகவே இருக்கிறது. இது நம்முடைய அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம். சில நண்பர் இப்படி சொல்லும்போது "கதர் துணி வாஸ்வத்தில் கனமும், முரடுமாயிருந்தாலும், உங்களுக்கு அப்படித் தோற்றுவதில்லை என்கிறார்கள். அப்படியானால் அவர்கள் சொற்படி நிதானித்தால் நாமெல்லாரும் தேசபிமானிகளாய் இருந்தால் நமது பாரததேசம் இச்சமயம் கதர் மயமாயிருக்க வேண்டியது. முரடான நூலானால் அதிகமாக நூற்க முடியும். அதிகமாய் நூற்றால் தானே அனைவருக்கும் கதர் உடுத்தத் துணிகள் தயாரிக்கப்பட்டு அந்நிய நாட்டுக்குப் போகும் பணத்தைப் போகவொட்டாது தடுக்க முடியும்.

ஆனால் இப்போது அவரவருடைய மனப் பான்மைக்குத் தகுந்தபடி மெல்லிய கதர்த் துணிகள் வந்துவிட்டன. ஆகையால் இந்த ஆக்ஷேபனையும் கூறமுடியாது.

2. "கதர் கனமாயிருக்கிறது" முதலில் நூற்கப்படும் நூல் கனமாக யிருக்கும். நாளடைவில் மெல்லிதாகிவிடுகிறது. நாளடைவில் மெல்லியதாகி விடுகிறது. 1920–ல் நூற்ற நூலைவிட 1928, 1929இல் நூற்கும் நூல் மெல்லியது என்று யாவரும் பரீக்ஷித்து அறிந்து கொள்ளலாம். மில் வேஷ்டியைவிட கதர் வேஷ்டி சுமார் 2 பங்கு அதிகக் கனமாயிருக்கும். சகோதரர்கள் முக்கியமாய் ஆங்கிலேய மாதிரியில் உடுத்துகிறவர்கள் கோட்டு, குடுத்துணி, கால் சராய் முதலியவைகளைத் தாங்கி வரும்போது கதரை மட்டும் தாங்க முடியாதா?

70 வயது சென்ற அலி சகோதரர் தாயார் பீ அம்மாவும், கதர் ஆரம்ப காலத்தில் கனமும் முரடான கதர் துணியை உடுத்தவில்லையா? சமீபத்தில் லாகூர் காங்கிரசில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த செல்வாக்கான பெருமாட்டிகள் முரடான கதர்உடை அணிந்திருந்ததைப் பார்த்தபோது தமிழ் நாட்டிலுள்ள நாம் இந்த விஷயத்தில் நமது மணப்பான்மையை மாற்றி உயரிய லட்சியம் கொள்ள வட இந்திய சகோதரிகள் நமக்கு முன் மாதிரி காட்டுகிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

மில் துணியில் துவைத்து அழுக்குப் போக்குவது வெகு கடினம். வெளுக்காமலிருக்க முடியாது; கதர்த் துணியில் அழுக்குப் போக்குவது வெகு சுலபம்.

3. "கதர் அழகாயில்லை."

அறியாதவர்தான் இவ்விதம் கூறுவார்கள். மில் துணியைவிடக் கதர்த் துணிதான் அதிக அழகும் வெண்மையும் உடையது. இதை நாம் அநுபவத்தில் பார்க்கலாம்.

ஒரு உத்தியோகஸ்தரிடம் 4, 5 வருஷங்களுக்கு முன்னர் கதரைப் பற்றிப் பேசியபோது அவர் முன்னால் நீங்களெல்லோரும் உடுத்தின துணி எவ்வளவு மெல்லியதாயும் அழகாயும் இருந்தது என்று சொல்லித் தன் பாரியையும், ஒரே பெண்ணையும் சுட்டிக் காட்டி இவர்கள் இப்படி அழகில்லாத முரட்டுத் துணியைக் கட்ட என் மனம் சகிக்காது என்றார். அந்தச் சந்தர்ப்பத்தின் பிறகு நான் இன்னும் அவர்களைச் சந்திக்கவில்லை. ஆடை ஏற்பட்டது என்னத்திற்கு? அலங்காரத்திற்கா? அல்ல, அங்கத்தை மூடத்தானே.

4. "கதர்" விலை அதிகம். கதர் சீக்கிரம் கிழிந்து போகும் என்று பல ஆக்ஷேபனை கூறுகிறார்கள். ஒவ்வொன்றாய்ச் சமாதானம் கூற இச்சமயம் முடியாது. பொதுவாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் சொல்லலாம்.

1. நம்முடைய தேசாபிமானக் குறைவே காரணம். நமது வீடுகளில் அன்னத்தைத் தயாரிக்கச் சுதந்திரமுண்டானால் ஒரு மணி நேரம் உட்கார்ந்து வீண்பொழுது போக்காமல் நூற்கிறதற்குச் சுதந்தரமில்லையா? சிலர் தங்கள் வீடுகளில் தறிகளும் வைத்துக் குடும்பத்திற்கு வேண்டிய துணிகளைத் தயாரித்துக் கொள்ளுகிறார்களென்றும் கேள்வி. இது எல்லோராலும் சாத்தியப்படாவிட்டாலும் தறிக்கு நாம் நூலை அனுப்பலாம்.

2. நாம் நூல் நூற்கச் சாவகாசமில்லாமற் போனாலும் கதரை வாங்கி அணியலாம். இப்படி நாம் வாங்கினால் கதர் உற்பத்தி செய்கிற நூற்றல் நெய்தல் தொழிலாளர்களுக்குப் பிழைப்புக் கொடுக்கிறோம்.

3. கதர் அரசாங்கத்திற்கு விரோதம் என்று கதர் அணியப் பயப்படுகிறார்கள். சில இடங்களில் இது உண்மையே. நாம் உண்மை அபிமானிகளாயிருந்தால் காந்தியடிகள் சொல்லுகிற பிரகாரம் பயத்தைக் களைந்துவிட்டு வீடுகளில் மாத்திரமல்ல, உத்தியோக ஸ்தாபனங்களிலும் பிரிட்டிஷ் மேலதிகாரிகளுக்குப் பயப்படாமல் எப்போதும் கதராடையை அணிவோம். வேலைத் திட்டங்களை ஒழுங்காயும் நியாயமாயும் செய்ய வேண்டியதுதான் நமது கடமையே அல்லாது, நமது அங்கத்தைப் பரதேசித் துணியையோ சுதேசித் துணியையோ போட்டு மூடியிருக்கிறதைப் பற்றி அதிகார வர்க்கத்தினர்க்கு இது விஷயத்தில் லட்சியம் ஒன்றுமில்லை.

எல்லோரும் ஒற்றுமையாய் இதில் ஈடுபட்டால் உத்தியோகம் போய்விடுமே என்கிற கவலையில்லை. அப்படியானால் எல்லாரும் உத்தியோக ஸ்தலங்களை விட்டு நீங்க வேண்டியதாயிருக்குமே. அரசாங்கம் நின்று போய்விடும், இல்லை நிற்காது. அன்றுதான் நிலை மாறி சுயராஜ்யமாகும்.

1920ஆம் வருஷம் உதவி மறுத்தல் காலத்தில் காந்தியடிகள் கதரைப் பற்றியும், அதன் உண்மைத் தத்துவத்தைப் பற்றியும், வறுமைப்பிணி நீங்க இந்தக் குடிசைத் தொழில் ஒன்றே சாதனமாகு மென்றும் சொன்னபோது, இந்தியர்களில் அநேகம் பேர் ஒப்புக்கொள்ள வில்லை. இதைப்பற்றி நகைத்தார்கள். பயித்தியமென்றார்கள். இந்திய ஜனசேவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்கூட நேரிலும் அவர்களுடைய பத்திரிகைகளிலும் பரிகாசமான கட்டுரைகள் வரைந்தார்கள். ஆனால் இதே சமயத்து இங்கிலாந்தில் நடந்ததென்ன? சர் மைக்கல் ஓட்வியர், ஷாராக் என்பவர்கள் சபை கூடிப் பெரிய பரபரப்பை உண்டாக்கினார்கள். திகில் பிடித்துவிட்டது.

ஈவினிங் ஸ்டாண்டர்டு—பத்திரிகையில், "மிஸ்டர் காந்தியால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒத்துழையாமை சித்தி பெறுமானால் ஒரே அடியில் வருஷத்திற்கு 8 கோடி பவுன் (ரூபாய் 120கோடி) நஷ்டமாகும். லங்காஷயர் மில்லிலிருந்து மாத்திரம் 34,4580 பவுண்ட் (ரூபாய் 5,16,87,000) பெறுமான துணிகளை நாம் இந்தியாவிற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம். இன்னும் இரும்பு வியாபராம் முதலிய மற்ற வியாபாரங்களில் மிகுந்த நஷ்டம் ஏற்படும். இது மாத்திரமல்ல, இதை ஒட்டி நமது எத்தனையோ வியாபாரச் சங்கங்கள் கலைந்துவிடும். இப்போதுதானே வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்" என்ற கட்டுரை பலமாய் வெளிப்பட்டது.

இந்தியர்களைச் சந்திக்கும்போது "உங்கள் காந்தி இந்த மாதிரி அந்நியத் துணி சுட்டெரிக்கிறாரே, இது நியாயமா?" என்று இங்கிலாந்தில்

பலவாறாகக் கேட்டார்கள். தாங்கள் இந்தியத் துணி ஏற்றிப்போன கப்பல்களைத் தங்கள் துறைமுகங்களில் அமிழ்த்தினதையும் சரக்குகளை விற்கிறவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் அபராதம் போட்டதையும் மறந்து போனார்கள் போலும்.

இந்தியர்கள் ஆக்ஷேபனைகள் கூறிக்கொண்டு நிர்விசாரமாய்க் கவலையற்றவர்களாய் இருக்கும்போது, இங்கிலாந்தில் பரபரப்பு, கலக்கம். இது நம் மனப்பான்மை இன்னதென்று காட்டுகிறது. காரியங்கள் எல்லாவற்றையும் கவனிக்கும்போது நாம் இனிக் கதர்ப்பிரசங்கம் சபைகளில் செய்வதை விட்டு, காந்தியடிகள் சொல்லுகிற பிரகாரம், தேசபக்தர்கள் அதிலும் இளைஞர்கள் (ஏனெனில் இது இளைஞர் யுகம். இளைஞரே காங்கிரஸ் தலைமை வகிக்கிறார்) கிராமங்களில் கதர் இயக்கத்தைப் பரவச் செய்து ஆசிரமங்களை உண்டு பண்ணித் தாங்கள் உடுத்தும் துணியைத் தாங்களே தயாரிக்க முயற்சி செய்யவேண்டும்.

இப்போது ராஜபாளையத்தில் சில மாதங்களுக்கு முன் பார்த்த காட்சி என் கண்முன் வருகிறது. அங்கே நூல் நூற்கிறவர்களின் வீடுகளை நாங்கள் பார்க்கப் போனபோது ஒரு சகோதரி தன் கையில் நூலை வைத்துக்கொண்டு "இது எங்களுக்குச் சாசுவதமாய்ப் பிழைப்புக் கொடுக்குமா?" என்று சந்தேகத்துடன் கேட்டார். அப்போது நாங்கள் "உங்களுக்குப் பிழைப்புக் கொடுக்கும்படிதான் நீங்கள் நூற்ற நூலால் தயாரிக்கப்பட்ட துணிகளை, மெல்லியது முரடு என்று கவனிக்காமல் உடுத்துகிறோம்" என்று தைரிய வார்த்தைகளைச் சொன்னோம்.

இங்குக் கூடியிருக்கும் அநேகம் பேருக்கு ஒருநாள் வருவாய் 1 ரூ., 2 ரூ. முதல் 10 ரூபாய் வரை மதிப்புப் போடலாம். ஆனால் நூல் நூற்றலைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு 2 அணா 3 அணாத்தான் கிடைக்கும். நாம் அவர்கள் நிலைமையிலிருந்தால் அந்த 2 அணா 3 அணா வருவாயும் போனால் எப்படியிருக்கும் என்று யோசியுங்கள்.

★

*தூத்துக்குடி கதர்க் காட்சியைத் திறந்து வைத்தபொழுது நிகழ்த்திய சொற்பொழிவு. (1930, மே)*

# 11. தமிழ்மாகாண முதலாவது சங்கீத மகாநாடு

ஈரோடு 12. 5. 1930

## தலைவர் *திரு. கே. பொன்னையா பிள்ளை* அவர்கள் சொற்பொழிவு

சகோதர சகோதரிகளே!

இம்மாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்க என்னைவிடத் திறமையுள்ள பெரியார்கள் இருக்கும்பொழுது, சிறியேனை அந்தப் பெருமையை அடையும்படி தாங்கள் மனமொப்பிக் கொடுத்த சந்தர்ப்பத்திற்காக நான் எனது ஆழ்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இம்மகாநாடு இனிது முடிவுறும்படி தாங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் மிகவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### *சங்கீதத்தின் பெருமையும் முற்கால நிலைமையும்*

சங்கீதம், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கினையும் மனித சமூகத்திற்கு அளித்து நல் வாழ்க்கைப் படுத்துவதாக இருக்கின்றது. நமது பெரியார் திருவள்ளுவரும் திருக்குறளில் "செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும்" என்று திருவாய் மலர்ந்தருளி இருப்பதை நாம் அறிவோம். ஆகையால் நல்ல சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தால், பசி முதலிய பிணிகளால் தொந்திர வேற்படா தென்பது நன்கு விளங்குகிறது. இதைத் தவிர சமூக சீர்திருத்தத்திற்குச் சங்கீதம் அத்தியாவசியமானது. இதற்கிணங்க, திரு கமால் பாட்சா அவர்கள் சங்கீதம் அவசியமென்று மொழியாற்றி யிருப்பதை 'திராவிடன்' பத்திரிகை மூலம் எல்லாரும் அறிந்திருப்பீர்கள்.

இப் பெருமை வாய்ந்த கலைக்கு முற்காலத்தில் சங்க நூல்களிற் கண்ட பல புலவர்களும், பல மன்னர்களும், இசை வல்லாராக இருந்து பல நூல்களியற்றி சங்கீதத்தைப் போற்றி வளர்த்தார்கள். பிறகு பல பெரியார்கள் தெலுங்கிலும், தமிழிலும், சமஸ்கிருதத்திலும் நூல்கள் மூலமாகப் பொது ஜனங்களுக்கிடையே சங்கீத வித்தையை அபிவிருத்தி

செய்து வந்தார்கள். கி.பி. 1576இல் முதல் 1620 வருஷம் வரையில் தஞ்சையை ஆண்டு வந்த இராஜாக்களில் ரகுநாத நாயக்கர் என்பவர் சங்கீத சாகித்தியத்தில் வல்லவராக இருந்து, அதை வளர்ப்பதற்குப் பெரு முயற்சி எடுத்துள்ளார். அவர் வீணை வாசிப்பதில் திறமை வாய்ந்தவர் என்று அக்காலத்து கோவிந்த தீட்சதர், வெங்கிடமகி ஆகிய வித்வான்களால் புகழப் பெற்றவர். அவர் சங்கீத வித்வான்களின் கூட்டுறவின் பேரில் "சங்கீத சுதாநிதி" என்னும் நூல் இயற்றினார். ரெகுநாத வீணையென்று இவர் பெயரால் ஒரு வீணையும் இருந்திருக்கின்றது.

மகாராஷ்டிர அரசரான ஷாஜி மகாராஜாவும் சங்கீதக் கலையை விருத்தி செய்துள்ளார். அவருக்குப் பின்னர் கி.பி.1760 முதல் 1790 வருஷம் வரையில் ஆண்டு வந்துள்ள ஜாமகாராஜா என்பவர் சங்கீத வளர்ச்சிக்கென்று ஒரு நாடக சாலையை ஏற்படுத்தி பரதம், வாய்ப்பாட்டு, வாத்தியங்கள் இவைகளைத் தனித்தனியே கவனித்து வளரும்படி செய்துள்ளார்.

இவர் காலத்தில், தஞ்சை சின்னையா, பொன்னையா, சிவானந்தம் வடிவேலு என்னும் நால்வர், ஒவ்வொருவரும் சங்கீதத்தின் ஒவ்வொரு பாகத்தில் பாண்டித்ய முடையவரா யிருந்து மகாராஜாக்களின் கூட்டுறவினால் சாகித்ய முதலியவைகள் செய்து சங்கீதத்தை விருத்தி பண்ணினார்கள்.

வடிவேல் என்பவர்தான் பிடில் வாத்தியத்தை முதன் முதலில் தென்னாட்டு சங்கீதத்திற்கு அமைத்து வாசித்துக் கீர்த்தி அடைந்தவரென்று சர். சௌரீந்தர மோகன டாகூர் தனது நூலில் எழுதியுள்ளார்.

இதுவரையிலும் நான் சொல்லி வந்த சில உதாரணங்களினால் தென்னாட்டில் சங்கீதம் வளர்ந்து வந்ததற்குக் காரணம் தமிழ் மக்களின் போதிய ஆதரவு என்பதற்கு ஐயமில்லை.

### *சங்கீதத்தின் தற்கால நிலைமையும் நம் கடமையும்*

தற்காலம் சங்கீதக் கலையானது ஆதரிப்பாரின்றி நாளுக்கு நாள் குறைவுபட்டு வருகின்றது. இது சமயம் நமது செட்டிநாட்டு அரசர் ராஜா சர். அண்ணாமலையார் சங்கீத பல்கலைக் கழகம் நிறுவி, தமிழ் நாட்டிற்கு ஒரு பேருதவி செய்திருக்கிறார். வள்ளல் ராஜா அவர்களுக்கு, தமிழ் நாட்டார் பல்வேறு இடங்களில் இருந்தும் மாணவர்களைச் சங்கீதம் கற்கும்படி அனுப்புவதே ராஜா அவர்களுக்கு நன்றி செலுத்துவதாகும்.

இப்போது சங்கீதம் எல்லா வகைகளிலும் சீர்குலைந்து இருப்பதை நாம் நன்கு அறிவோம். என்னுடைய சிறு வயதில் நான் கேட்ட சங்கீதம் இப்போதில்லை.

முக்கியமாக சங்கீதத்திற்கு ராகபாவம், தாளம், சாகித்தியம் – இம்மூன்று அம்சங்களும் நிறைந்து சுத்தமாக இருக்க வேண்டியது அவசியமாகும். அப்படியிருந்தால்தான் கேட்போருக்கு உண்மையான உணர்ச்சியையும் அதனால் இன்பத்தையும் கொடுக்கு மென்பது ப்ரத்யட்ச அனுபவம்.

தவிர புராதன கீர்த்தனங்கள் வர்ணங்கள் பதம் இவைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றன.

சென்றொழிந்த இராகங்கள் போக நமக்குள் வழங்கிக்கொண்டு வரும் ராகங்களிலும் ஒருவர்க்கொருவர் அபிப்பிராய பேதம் காணப்பட்டு வருகின்றது. சூளாதி, டாயம், பிரபந்தம் – இம்மாதிரியான பாட்டுகள் பெரும்பான்மையோரிடம் வழக்கத்தில் இல்லை. தாள சம்பந்தமாக 108 பஞ்ச தாளம் ரகண மட்டியம் முதலிய பல தாளங்களும் மறைந்து கிடக்கின்றன.

சங்கீத சம்பந்தமாகத் தற்காலம் நம்முடைய பழக்கத்திற்கும் நூல்களுக்கும் அதிக முரண்பாடுகள் காணப்படுகின்றன. அவைகளைச் சங்கீத வித்வான்கள் ஒன்று கூடி, ஆராய்ந்து அமைத்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகிறது. நிற்க, நான் தங்களுக்கு ஒரு விஷயம் ஞாபகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. என்னவென்றால், சங்கீதத் தொழிலானது ஜன சமூகத்திற்குப் பொதுவாக நம் தமிழ் மக்களுள் நீண்ட காலமாக இருந்து வருகிற தென்பதேயாம். ஆகையால் நம் தமிழ் மக்களும், செல்வந்தர்களும் தங்கள் வீட்டு விசேஷ சந்தர்ப்பங்களில் தமிழர்களாகிய சங்கீத வித்வான்களை அதிகமாக வரவழைத்து உற்சாக மூட்டல் வேண்டும். சங்கீதக் கொடியைத் தமிழ்நாடு முழுவதும் பரவும்படி செய்தல் வேண்டும். அப்படிச் செய்ய செல்வந்தர்களும் வித்வான்களும் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழ் மக்களுள் சங்கீதம் கேட்கும் பழக்கம் மிகக் குறைவாக யிருக்கின்றது. சங்கீதத் தொழில் செய்பவர் தமிழராகவும் ஆதரிக்கிறவர்கள் மற்றவர்களாகவு மிருப்பதென்றால் எவ்விதம் அச்சங்கீதம் உச்ச நிலையை அடைய முடியும் என்பதை எல்லோரும் சிந்தித்துத் தெளியுங்கள்.

சங்கீதத்தைச் செவியுறுதலில் ஒவ்வொருவர்க்கும் அவாவிருக்க வேண்டும். வெறும் அவா மட்டு மில்லாமல் ஒவ்வொரு ஊரிலும் சங்கீதச் சபைகளை ஏற்படுத்திப் பல பேர்களின் பாட்டும் வாத்தியங்களும் கேட்கும் படியான சந்தர்ப்பங்களையும், வசதிகளையும் உண்டு பண்ணிக்கொள்ள வேண்டும்.

நம் மக்களுக்குப் பொதுக் கல்வி அறிவுடன் சங்கீதத்தை முறையோடு கற்பிக்கத் தாலுகாவிற்குக் குறைந்தது ஒரு பள்ளிக் கூடமாவது அமைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு அனுகூலமாக நமது கவர்ன்மெண்டார் சங்கீதத்தைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் படிப்பாக வைக்கவும் ஒப்புக்கொண்டது நாம் பாராட்டத் தக்கதாகும்.

ஒரு எஜமானனுக்கு நன்றாய்ச் சாப்பிடத் தெரியாவிடின் அவரிடமிருக்கும் சமையல் ஆளுக்கு சமையல் செய்வது மறந்து போய்விடும். நல்ல ருசியுடன் சமைக்கத் தெரிந்திருந்த போதிலும், எஜமானன் அதை அறிந்து சந்தோஷப்படுத்தாவிடில் அவன் தொழிலுக்கு விலையில்லை யென்று மனமுடைந்து போய் மேலே சீர்திருத்தம் செய்யாது நின்றுவிடுவான். அது போலவே சங்கீதம் கேட்பவர்கள் திறமை எவ்வளவிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு சங்கீதம் உச்ச நிலையை அடையும்.

தென்னாட்டில் சங்கீதம் கேட்பவர்கள் அதிகமாயிருந்ததால்தான் அது வளர்ந்தது. உச்சத்தை அடைந்திருந்தது.

அன்பர்களே! சங்கீதம் குறைவு பெற்றும், தாழ்த்தப்பட்டும் வருகின்ற இத்தறுவாயில் இம் மகாநாட்டைக் கூட்டி ஊக்கத்தை எழுப்பும்படி சந்தர்ப்பத்தை உண்டாக்கிய நமது உயர்திருவாளர் இராமசாமிப் பெரியாருக்கும் வரவேற்புத் தலைவர்களுக்கும் மற்ற சங்கீத வித்வான்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் எனது அன்பார்ந்த வந்தனமளித்து என்னுடைய பிரசங்கத்தை முடிவு செய்கின்றேன்.

★

# பொன்னையா பிள்ளை

## தஞ்சை (1887 - 1945)

ஈரோடு மே 12–ல் சுயமரியாதை மாநாட்டுப் பந்தலில் 1930 மே 12 பகல் 2 மணிக்கு முதலாவது தமிழ்மாகாண சங்கீத மகாநாடு கூடிற்று. 4000 மக்களுக்கு அதிகமாக ஆண்களும் பெண்களும் கூடியிருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் வித்வான்கள்.

காஞ்சிபுரம் திரு நயினா பிள்ளை, சிதம்பரம் திரு. கே. பொன்னையா பிள்ளை, கீவளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிதம்பரம் செல்வ ரெத்தினம் பிள்ளை, திருவீழிமிழலை திரு. சாமிநாத பிள்ளை, சேலம் திரு. ரங்கதாஸ், கும்பகோணம் திரு. வடிவேல் பிள்ளை, சேலம் திரு. பழனிச்சாமி செட்டியார், சென்னை திரு. சுப்பிரமணிய பிள்ளை, திருச்சி திரு. நடேச பிள்ளை, சேலம் திரு. காளியப்ப பிள்ளை, சென்னை திரு. நாதமுனி பண்டிதர், திருத்துரைப்பூண்டி, திரு. கிருஷ்ணமூர்த்தி, திருவல்லிக்கேணி திரு. வேணு நாயக்கர், பழனி திரு. சுப்பிரமணிய பிள்ளை, திருச்சி மலைக்கோட்டை திரு. கிருஷ்ணசாமி பிள்ளை, திருக்கோகர்ணம் திருமதி ரெங்கநாயகி சுப்புலட்சுமி, சென்னை திரு. முனிசாமி பிள்ளை, திருக்குவளை திரு. முத்துக் குமாரசாமி பிரதர்ஸ் முதலியோர்களாகும்.

பல வித்வான்கள் வரமுடியாமைக்குத் தந்திகள் கடிதங்கள் அனுப்பியிருந்தனர். மகாநாடு மேள வாத்தியத்தோடு ஆரம்பமாகியது. திருக்குவளை திரு. முத்துக்குமாரசாமி பிரதர்ஸ் நாகசுரத்தில் "ரவிச்சந்திரிகை", "சங்கராபரணம்", 'தர்பார்', 'பைரவி' முதலிய இராகங்களில் இனிய கீர்த்தனைகளை வாசித்தார்கள்.

வரவேற்புக் கழகத்தாரின் விருப்பப்படி திரு. ஈ.வே. இராமசாமி அவர்கள் சாரமுள்ள சொற்பொழிவை நிகழ்த்தி மாநாட்டைத் திறந்து வைத்தார்கள். பிறகு திரு.சொ.முருகப்பா அவர்கள் தமது வரவேற்புக் கழகத் தலைமை யுரையைப் படித்தார்கள்.

சிதம்பரம் ராஜா சர் அண்ணாமலை பல்கலைக் கழகச் சங்கீத வித்வான் திரு. கே. பொன்னையா அவர்கள் தலைமை ஏற்றுச் சொற்பொழிவாற்றினார்.

*'குடியரசு' – 25.5.1930*

# தஞ்சை கே. பொன்னையாபிள்ளை

(1887 - 1945)

இசைப் புலவர். பரோடா சமஸ்தான வித்துவானாக விளங்கிய கண்ணுசாமிப் பிள்ளைக்கு மகனாக இவர் சர்வசித்து, தை இரண்டாந் தேதி பிறந்தார். இவருடைய மாமனாரான பந்தணை நல்லூர் சூ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் இளமை முதல் இவர் இசையும் நாட்டியமும் பயின்று தேர்ச்சி பெற்றார். மிருதங்கம் வாசிப்பதிலும் இவருக்குத் திறமை உண்டு. இக்கலைகளை இவர் பலருக்குப் பயிற்றுவித்துச் சிறப்படையச் செய்தார். பிறகு இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப் பெற்ற இசைக் கல்லூரியில் ஆசிரியராய் விளங்கினார். சிறிது காலத்திற்குப் பின் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசையாசிரியராகப் பணியாற்றினார்.

இவர் பல தான வர்ணம், கீர்த்தனை, தில்லானா முதலியவற்றைத் தமிழிலும் தெலுங்கிலும் இயற்றியுள்ளார்.

இசைப் பயிற்சியின் தொடக்கத்தில் வேண்டிய சஞ்சாரி கீதம், இலட்சணகீதம் முதலியவற்றைத் தமிழிலேயே செய்துள்ளார்.

1943—ல் இவர் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று, இசைக் கல்லூரியில் பேராசிரியர் பதவியை ஏற்றார். பல தமிழ்ப் பாடல்களை இயற்றியதோடு 'இசையியல்' என்ற இசை இலக்கண நூலையும் எழுதியுள்ளார். தம் முன்னோர்கள் செய்த பாடல்களைத் தொகுத்து, "தஞ்சைப் பெருவுடையாரின் பேரிசை" என்ற பெயரில் வெளியிட்டார்.

சென்னைச் சங்கீத வித்வத் சபை இவருக்குச் 'சங்கீத கலாநிதி' என்ற பட்டமளித்துச் சிறப்புச் செய்துள்ளது. இவர் இசைப் பேராசிரியர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின், தம் சொந்த ஊராகிய தஞ்சைக்குத் திரும்பினார். பின்னர் 30—6—1945—ல் காலமானார்.

— *கலைக்களஞ்சியம்*

# 13. தமிழ்மொழி!

## தவத்திரு ஞானியாரடிகள்

31. 5. 1941

மெய்யன்பர்களே !

இப்பொழுது இங்கு நாம் திருவோத்தூர்ப் பரிதிபுரத் திருநாவுக்கரசு மடத்தின் பாநுக்வி மாணவர் கழகப் பன்னிரண்டாவது ஆண்டு விழாவின் இன்பத்தை அநுபவிக்கக் கூடியுள்ளோம்.

உலகில் மனிதப் பிறவி எப்பிறவியினும் சிறந்தது. மனிதன் நாடோறும் துயிலெழுந்ததும் "நான் மனிதனாகப் பிறந்திருக்கிறேன்" என்று எண்ணல் வேண்டும். "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றபடி மனிதன் தன்னைத் தான் மதித்தல் வேண்டும். பிறப்பின் வாய்ப்பினை யுணர்ந்து, அதனால் நாம் என்னென்ன செய்ய வேண்டுமென்று சிந்திப்பது ஆண்களாக, பெண்களாகப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையாகும். பொருத்தமாகக் கிடைப்பதே வாய்ப்பு எனப்படும்.

நம்பால் உள்ள தீயகுணங்களையும் பிறர்பால் உள்ள நல்ல குணங்களையுமே நாம் நினைத்தல் வேண்டும்.

ஒருவன் பிறர்பால் உள்ள தீயகுணங்களை நினைப்பது அவனுக்குத் தீமை விளைவிக்கும்; தன்பால் உள்ள நற்குணங்களை எண்ணுவது கர்வத்தை உண்டாக்கும்.

நாம் நல்லன செய்து உடனே அவற்றை மறத்தல் வேண்டும். மனித வாழ்வில் இது முக்கியமான விஷயமாகும். கெடுதி செய்யாதவர்கள் உலகில் இல்லை. அதிக தீமை விளைப்போரையே "கெட்டவர்கள்" என்று உலகம் அழைக்கிறது.

அறிவு, இயற்கை அறிவு, செயற்கை அறிவு என இரு வகைப்படும். கடந்த பிறவியில் நுகர்ந்து இறந்தபோது தொடர்புற்று மறுமையினும் தோன்றுவதே இயற்கை அறிவாகும்.

படிப்பினால் – பெரியோர்கள் பழக்கத்தினால் – ஒழுக்கத்தினால் உண்டாவது செயற்கை அறிவு, இவற்றுள் படிப்பினால் வளரும் அறிவுதான் சிறந்த அறிவு. படித்தவர்தாம் முன்னர் அறியாது செய்த பிழையினைப் பின்னர் தெரிந்து வருந்தும் இயல்புடையர். படியாதவர்கள் தீமை செய்ததைச் சிந்திக்கமாட்டார்கள். செய்த பிழையினைச் சிந்தித்து வருந்துதலே பச்சாதாபம் ஆகும்.

தான் செய்த தீச்செயல்களை யெல்லாம் ஒருவன் தன் நண்பர்களிடமோ, பெரிய சபைகளிலோ, நாற்சந்தி கூடுமிடங்களிலோ கூறிப் பச்சாதாபப்படுவதால் அவன் தன் தீச்செயல்களைக் கடிவதோடு பிறரும் அவன் பாவந்தொலைய இறைவனை வேண்டுவார்கள்.

எல்லாவகையான துன்பங்கட்கும் காரணமாக இருப்பது அறியாமை! அறியாமை!! அறியாமை!!!

நாம் பிறரை மூடர் என்று பழிக்கலாகாது. சிலர், பிறருடைய பெருமையைக் கேட்கவும் சகிக்க மாட்டார்கள். அத்துடன் நில்லாது அவர் பெருமையைக் குலைப்பதற்கும் வழி தேடுவார்கள். ஆகையால் எவரும் முதலில் தம் மூடத்தனத்தை உணர வேண்டும்.

படிப்பு அறியாமையை நீக்குமென்று முன்னமே கண்டோம். எல்லா நூல்களும் இந்த உண்மையை நன்கு விளக்குகின்றன. நாம் செயற்கை யறிவுடன் கல்வி கற்றுக் கடவுள் நெறி நின்று உயிரையும் உடலையும் போற்ற வேண்டும்.

"எவன் ஒருவன் படித்து அறிவுடையனாவானோ அவன் பிறக்காமலிருக்கும் இறவாத முத்தி சாதனம் எய்தப் பெறுவான்" என்று ஈசாவாஸ்யம் என்னும் வடமொழி நூல் இயம்புகிறது.

ஆசையறுக்கும் நூல்களையே நாம் படித்து முத்தி பெற வேண்டும். இக்காலத்தே ஆசை விளைக்கும் நூல்கள் பல்கியுள்ளன. அதுபற்றி விவரிக்க அடியேன் விரும்பவில்லை. வித்தையால் முத்தியடையலாம் என்னும் கருத்துள்ள 'வித்தை விரும்பு' என்னும் ஔவையார் வாக்கே வேதங்களின் உட்கருத்தாகவும் விளங்குகிறது.

சிலர், 'வயதாய்விட்டது. நம்மால் இனி படிக்க வியலாது' என ஓதுவ தொழிகின்றனர். ஆனால் அவர்களுள் வயது முதிர்வால் 'இனி நம்மிடம் பணப் பெட்டியின் திறவுகோல் வேண்டுவதில்லை' என்று கூறித், தம் அருமந்த மகாரிடம் அதனைக் கொடுக்கவும் மனமில்லாதவர்கள் பலர் இருக்கிறார்கள்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

என்னும் பொன்மொழி, நாம் இறக்கும்வரை படிக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. தற்காலத்தில் முதியோர் கல்விக்கு அரசியலாரும் நன்முயற்சி கொண்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

ஐயந் தீர்க்கும் நூல்களில் தெய்வத் திருக்குறளும், தொல்காப்பியமும், திருக்கோவையாரும் தலைசிறந்தவை. "செல்வம் புலனே புணர்வு ........ என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தில் புலன் என்பதற்குக் கல்விப் பயனாகிய அறிவுடைமை இன்பத்தைக் கொடுக்கும். பெருமிதமென்பது, கல்வி, தறுகண், இசை, கொடை இவற்றால் வருவது. எனவே இன்பமும் பெருமிதமும் பெறக் கல்வி வேண்டும். ஒருவன் இவ்விரண்டும் வேண்டுவதின்றெனின், தன்னைப் பற்றிப் பிறர் புகழ்தல் வேண்டும் என்ற எண்ணமாவது இல்லாமலிரான். இல்லறவியலின் முடிவில் திருவள்ளுவர் "புகழ்" என்னும் அதிகாரம் அமைத்திருப்பது இக்கருத்தைப் புலப்படுத்தும்.

கொடுத்து வருவது புகழ். அடித்து வருவது பிரதாபம்.

கல்வி கற்றுப் பிறர்க்கு அதனைப் போதிப்பதால் வரும் புகழ் சிறந்த புகழ். ஒவ்வொரு வரும் தம் வீட்டு மொழியையும் நாட்டு மொழியையும் கற்க வேண்டும். தமிழ்மொழி நமக்கு வீட்டு மொழியாகவும், நாட்டு மொழியாகவும் இருக்கிறது. தமிழ்மொழி நம்மை வளர்த்து இன்பங் கொடுக்கும் மொழியாகும்.

தமிழ்மொழியில் குறைபாடுகள் உள்ளன என்று கூறுவாரெல்லாம் அறிவில் குறையுள்ளவர்களே யன்றி உண்மையில் மொழி குறைபாடு உடையதன்று. அன்னோர் கூற்று, வேற்றுவழி நுழைந்தானொருவன் வழி தவறிவிட்டது என வழியின்மேல் பிழையேற்றிக்கூறும் கூற்றுப் போலாம். தமிழ்மொழியைத் தெய்வமென்று போற்றல் வேண்டும். "தமிழ்த் தெய்வத்தை உள்நினைந்து ஏத்தல் செய்வாம்" என்று கருணைப் பிரகாசர் பாராட்டிப் பாடியுள்ளார்.

மனம், வாய் இவற்றின் வினையாகிய நினைத்தல், ஏத்துதலோடு, இனம் பற்றி மெய்யின் வினையான வணங்கு தலையும் உடன் கூட்டிப் பொருள் கொண்டு மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் நாம் தமிழ் மொழியைப் போற்றல் வேண்டும். "முத்தமிழும் ஆனான் கண்டாய்" எனத் திருநாவுக்கரசரும் தமிழ்மொழியைத் தெய்வமாகப்

போற்றியதை அடியேன் உங்களுக்கு ஞாகப்படுத்துகிறேன். எனவே, நாமனைவரும் தமிழ்த்தெய்வ விழா அவ்வப்போது ஆற்றி இன்பம் பெறல் வேண்டும்.

தமிழ்மொழியைப் பலர் பல விதமாகப் பாராட்டியுள்ளார்கள். தமிழின் வளப்பத்தை அருணகிரிநாதர் "புகலரியதான தமிழ்", "பெரிய தமிழே பாடி" என்று பாராட்டி இருக்கிறார். திருக்குறளில் முதற்குறளும் ஈற்றுக் குறளும் நம் நினைவில் இருத்தல் வேண்டும். அவற்றினும் முதற்குறளின் முதலெழுத்து, ஈற்றுக் குறளின் கடையெழுத்தும் தமிழ் நெடுங்கணக்கின் முதலெழுத்தையும் ஈற்றெழுத்தையும் நினைவுறுத்துவன. இறையனார் அகப்பொருளினும் முதற் சூத்திரத்தின் முதலெழுத்தும், ஈற்றுச் சூத்திரத்தின் கடையெழுத்தும் அகரமும் னகரமுமாய் அமைந்திருத்தல் நோக்கற்பாலது. (இந்நூலுள் னகர உயிர்மெய் உயிரோடவல்லது மெய் இயங்காதென்பதை அறிவிக்கிறது).

இறையனார் அகப் பொருள் முதற்சூத்திரம் "அன்பின் ஐந்திணை" எனத் தொடங்குகிறது.

ஆங்கிலம் போன்ற மொழிகள் வீர உணர்ச்சி உண்டாக்குகின்றன. நம் இனிய தமிழ்மொழி எல்லாப் பண்புகளினும் சிறந்த அன்புணர்ச்சியைத் தரும் என்பது புலப்பட அகப்பொருள் முதற் சூத்திரம் அமைந்திருத்தல் கண்டின் புறத் தக்கதாகும்.

தமிழ்மொழி நீங்கலாகப் பதின்மூன்று வேற்றுமொழியுணர்ந்த பத்திரிகையாசிரியர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் சில தமிழ்ப் பாட்டுக்களைக் கேட்டு ஈசன்பால் மனம் ஈடுபட்டு நோய் நீங்கப் பெற்றார். அதனை அவர் தம் பத்திரிகையில் பலபடப் பாராட்டி எழுதியுள்ளார். தமிழ் பயிலாத பிறமொழி அறிஞர் தமிழ்மொழியை இங்ஙனம் பாராட்டினால் தமிழின் பெருமையைத் தமிழர்கள் என்னென்று இயம்புவது !

இனி, இவ்வினிய தமிழ் மொழியைக் கற்றறிந்த புலவர்கள் பெருமை போற்றற் குரியதாம். பண்டைக் காலத்தே அரசர்களும் வள்ளல்களும் புலவர்களை ஆதரித்து இன்பம் எய்தினார்கள். "பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்" என்று ஒவ்வொருவரும் புலவர்களுக்கு நன்மதிப்புக் கொடுத்தார்கள். புலவர்கள் போற்றப் போற்ற நாட்டில் நல்லறிவு பரவும், அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் உலகில் சந்திர சூரியர் உள்ள வளவும் நின்று இன்பந்தரும்.

செல்வரின் கொடைப் பொருள் ஊரபிமானம், சாதி அபிமானம் இவற்றைப் பொறுத்தது. புலவர்கள் கொடைப்பொருள் எல்லா நாட்டிற்கும் எல்லாச் சாதிக்கும் பயன்படும். புலவர்களைப் போற்றினால் அவர் காலத்து மக்கள் நற்பயன் உறுவதோடு அவர்களுக்குப் பின்வரும் மக்களும் இறவாத இன்பம் பெறுவார்கள்.

மெய்யன்பர்களே! பாநுகவி சுவாமிகள் என்பவர்களை நான் நன்கு அறிவேன். சிறந்த நூலாசிரியரும், உரையாசிரியரும், சொற்பொழி வாளருமாக அவர் காலத்தில் திகழ்ந்தவர். மதி, பாநுகவி என்னும் தம் பெயருக்கேற்ப (மதி = சந்திரன்; பாநு = சூரியன்; கவி = சுக்கிரன். இம் மூன்றும் அழுக்கில்லா வெண் கிரணங்கள்) களங்கமில்லாத் தமிழறிஞராக விளங்கினார்கள். அவர் எழுதிய ஹரிஹர தார தம்மியம், கந்தபுராணக் கலாபூஷண உரை என்னும் நூல்களால் சிறந்த உரையாசிரியர் எனவும், திருமாற்பேற்றுப் புராணம் முதலிய நூல்களால் உயர்ந்த நூலாசிரியர் எனவும், ஆற்றிய அரிய சொற்பொழிவுகளால் நல்ல பிரசங்கி எனவும் அறிந்துகொண்டேன்.

இப்பெரியாரின் பெயரால் கழகமொன்று நன்முறையில் இயங்குவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்மக்கள் யாவரும் ஆதரவு தந்து இதுபோன்ற கழகங்களைப் போற்றி நன்மை யெய்துதல் சாலவும் நன்று.

★

*பாநுகவி மாணவர் கழகப் பன்னிரண்டாவது ஆண்டு விழா உரை*

*(இதழ் : தமிழணங்கு, மலர் 2, இதழ் - 3)*

# ஞானியார் அடிகள்

(1873 - 1942)

கண்ணிரண்டும் கல்விக்கண் ஒன்றும் பெற்றுக்
காலமெல்லாம் தமிழுக்கும் சைவத் திற்கும்
தொண்டுசெய்தோர் பலராவர்; அவருள் காமச்
சுவைவிலக்கிச் செய்றகைசுகம் விலக்கி வாழ்ந்த
பண்டையநாள் சமணரைப்போல் செந்த மிழ்க்கும்
பரஞ்சோதி முனிவரைப்போல் சைவத் திற்கும்
எண்ணிறந்த பெருந்தொண்டு புரிந்து கீர்த்தி
ஏந்தியவர் ஞானியார் அடிக ளாவார்!

ஒரைந்து மொழியறிந்த புலியூர் ஞானி
ஓய்வின்றிப் பெருஞ்சைவம் பேசி வந்தார்.
ஈரஞ்செய் கின்றதமிழ் மொழிநுட் பத்தை
எழுத்தெழுத்தாய்ச் சொல்சொல்லாய் விளக்கி வந்தார்;
வீரஞ்செய் புறப்பொருளின் விளக்கம் ஆதி
வேதாந்தம் சித்தாந்தம் இவற்றை யெல்லாம்
காரஞ்செய் யாதகுரல் இனிமை யாலும்
கனிந்தெழுந்த பேச்சாலும் பாய்ச்சி வந்தார்!

கைச்சங்கம் எடுத்தூதும் கூட்டத் தார்க்கும்
கால்நடைகள் மேய்ப்பார்க்கும் மற்ற வர்க்கும்
மெய்ச்சங்கம் எதற்காக? எங்கட் கன்றோ
வித்தைவரும்? என்றுசிலர் பேசக் கேட்டுத்
தச்சன்கை உளிபதித்த விரல்போ லானார்.
தமிழ்ச்சங்கம் தோன்றுதற்குத் துணையாய் நின்றார்!
பொய்ச்சிந்தை மனுநீதி மயக்கம் தீர்த்துப்
பொய்யாத குறள்நீதி கூறி வந்தார்.

வெல்லுஞ்சொல் இதுவேயென் றறிந்து பேசி
வியப்பினிலே ஆழ்த்தியவர். பிறையைப் போன்ற
பல்லக்கின் மீதேறி இந்த நாட்டில்
பவனிவந்த திருநீற்றுச் சைவர். பாராங்
கல்லொக்கும் நெஞ்சத்தார் தம்மைத் தேமாங்
கனியொக்கும் அறிவுரையால் கனியச் செய்தார்.
முல்லைப்பூ மாலைக்கோ பாராட் டுக்கோ
மூதறிஞர் மயங்கியதே இல்லை கண்டீர்!

இளந்திரையன் என்பானோ பெரும்போர் வீரன்.
இருண்டகடல் நீந்தியவன். வீரங் காட்டி
வளர்ந்தபுகழ் பெற்றுயர்ந்த வேந்தன். அந்த
மாவீரன் நம்மவர்நேப் போல்யன் ஆவான்.
தளர்ந்தசெயல் செய்தறியாப் புலியூர் ஞானி
தமிழகத்தின் சாலமனே யாவார். நுட்பம்
அளந்தமனம் கொண்டவராம் அவர்போற் பேசும்
ஆற்றல்பெற்றார் இன்றிங்கே யாரு மில்லை!

★

# 14. பெரியார்!

## அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை
## *அழகிரிசாமி* பேசுகிறார் (1947)

அன்புமிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! பெரியார் அவர்கள் படத்தைத் திறந்து வைப்பதென்றால், அது லேசான வேலை அல்ல என்பதான எண்ணங்கொண்டு, அப்படிப்பட்ட கஷ்டமான வேலையை எனக்கு அளிக்க வேண்டுமென்று கருதியே, எனக்குப் பெரியார் அவர்களின் படத்தைத் திறந்துவைக்கும் பணியை, வரவேற்புக் கமிட்டியினர் அளித்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன். அதெப்படிக் கஷ்டமென்று நீங்கள் நினைக்கக் கூடும்.

சாதாரணமாக, நாம் சிற்றுண்டிச் சாலையொன்றுக்குச் செல்வோமானால் அங்குள்ள தோழர், இது சூர்யகலா, இது சந்திரகலா இது பாதுஷா; இவை இனிக்கும்; இது சவ்சவ், இது கவ்கவ் – இவை புளிக்குமென்றால், நமக்கு முன்னாடியே இவை அறிமுகமாகாத பண்டங்களாயிருப்பதால், புளிக்குமோ தித்திக்குமோ என்று சந்தேகிக்க இடமிருக்கலாம். ஆனால், இது லட்டு, இது ஜிலேபி – இவை 'கசக்கும் என்று கூறினால், நாம் சும்மா இருப்போமா? "அடபோடா போ, எனக்குத் தெரியும் லட்டு தித்திக்குமென்று" என உடனே சந்தேகமின்றிப் பதில் கூறிவிடுவோம். காரணம், இப்பண்டங்களை நாம் நன்கு அறிந்திருப்பதால். அதேபோல் பெரியாரைப் பற்றி நான் நன்றாய் அறிந்தவனானதால், 30 ஆண்டுகளாக நான் நெருங்கி அறிந்திருக்கும்போது அவரைப்பற்றி கஷ்டப்பட்டு நானென்ன கூறவேண்டியிருக்கும்?

அன்றியும் அவரைப்பற்றி உங்களிடம் பேசுவதென்றால், அது கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதையாகத்தான் முடியும்.

நவமணிகள் என்று கூறப்படும் மரகதம், மாணிக்கம், வைரம், வைடூரியம், பச்சை, நீலம், கெம்பு, புஷ்பராகம், கோமேதகம் முதலியவற்றிற்கும்; பவளம், முத்து இவைகளுக்கும், அவற்றின் ஒளி, நிறை இவற்றைக் கொண்டு ஓரளவுக்கு மதிப்புக் கூறிவிடலாம். ஆனால், அறிவின்

உச்சியையோ, சிந்தனையின் சிகரத்தையோ, பகுத்தறிவின் எல்லையையோ ஒருவனால் அளவிட்டுக் கூறமுடியுமா? ஏதாவது 'மீட்டர்'தான் உண்டா?

தோழர்களே, சிந்தித்துப் பாருங்கள்! ஆலோசித்துக் கூறுங்கள்!

அறிவை அளக்க எங்காவது அளவுமானி உண்டா? அப்படி இருக்க, அறிவின் ஜ்வாலையாகவும், சிந்தனையின் பெட்டகமாகவும், ஆற்றலின் சிகிரமாகவும், எல்லை காண முடியாத பகுத்தறிவின் இருப்பிடமாகவும் இருந்துவரும் பெரியாரை, நாம் எந்தக் கோல் கொண்டு மதிப்பிட்டுப் பார்ப்பது?

வயது ஏற ஏற, அவரை நரை வெளுக்க வெளுக்க, அவரது பகுத்தறியும் திறனும் ஏறிக்கொண்டேதான் போகிறது. கோகலே மண்டபத்தில்தான் ஒரு முழும் என்றால், திருவண்ணாமலையில் ஒரு கெஜம் நீளுகிறது. இப்படியாக இவரது பகுத்தறிவும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டுதான் வருகிறது.

இத்தகையவொரு பகுத்தறிவின் காரணமாகத்தான், என்னைப் போன்ற அடங்காப்பிடாரிகளும்கூட அவரை நாடி வரவேண்டியிருக்கிறது.

அவரது தெளிந்த பகுத்தறிவுத் தேனின் ருசியை ஏற்கனவே அனுபவித்த காரணமாகத்தான் – அந்த ருசியில் மயங்கித்தான் இன்று மது தேடியலையும் வண்டுகளைப் போல் நாம் இங்குக் கூடியுள்ளோம். ஒளி கண்டு மயங்கிக் கிடக்கும் விட்டில் பூச்சிகளைப் போல், நாமும் அவரது கருத்துக்கள் என்னும் பிரசங்கத் தேனையுண்டு இன்று திளைத்திருக்கிறோம்.

அவரது பகுத்தறிவு, நுண்ணிய நுண்ணறிவுக்கும் மிக நுண்மையானது. ஆகவேதான் நம்மைப் பிற நாட்டவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்மைவிட அதிர்ஷ்டசாலிகள் இவ்வுலகில் வேறொரு மக்கட்கூட்டமிருக்க முடியாது என்று கூறத் தோன்றுகிறது. உண்மையாத்தான் கூறுகிறேன்.

பொல்லாத கொடிய விரியன் பாம்புகள் நம்மை ஆட்சி புரிந்து வரும்போது, ஒரு பக்கம் இவ்வற்பர்களின் அடக்குமுறைத் தொல்லையும், மற்றொரு பக்கம் அன்பர்களின் பட்டினிக் கூப்பாடும் நம்மைவிட வாட்டி வரும்போது, பெரியாரைப் போன்ற உருவங்கள் நம்மிடையே இருந்து, சற்று ஆறுதல் ஊட்டி வருவதால்தான் நாம் உயிரோடு இந்நாட்டில் வாழ முடிகிறது. இன்றேல் நாம் என்றோ இறந்திருப்போம், அல்லது இந்நாட்டை

விட்டேனும் எங்காவது ஓடிவிட்டிருப்போம். ஆம். பெரியார் ஒருவர்தான் நம்மை இந்நாட்டோடு இணைத்து வைத்திருக்கிறார். அவரது பகுத்தறிவும் அன்பும்தான் நம்மை அவர்பால் இழுத்து அவர் வழிச் செல்லத் தூண்டுகிறது. அன்னாரையோ அல்லது இயக்கத்தின் வளர்ச்சியையோ சரிவர அறிந்திருக்க மாட்டார்கள் இந்தப் பதவி வேட்டை உருவாரங்கள்.

ஆகவேதான் சில சந்தர்ப்பங்களில் அவரை எதிர்த்து விஷமம் செய்து பார்க்கிறார்கள்.

இவர் தமது இயக்கத்தை ஆரம்பித்த காலம் 1925 அல்லது 1926 ஆக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அந்தக் காலத்தில் நம் மாகாண அமைச்சரா யிருந்தவர் நமது மதிப்பிற்குரிய பனகல் அரசர் ஆவார்கள். அவர் ஒரு தலைசிறந்த அறிவாளி; கைதேர்ந்த ராசதந்திரியும் கூட.

அவர், "பொதுப் பணம் ஏராளமாகக் கோயில்களில் வீணாக்கப் படுகிறது, அனைத்தும் பார்ப்பனர்களின் வாழ்வுக்கே உபயோகப்பட்டு வருவதோடு, நம் மக்கள் வேறு மடையர்களாக்கப்பட்டு வருகிறார்கள், இதைக் கட்டுப்படுத்தக் கோயில்கள் தம் வரவு செலவு கணக்குகளைச் சார்க்காருக்குக் காட்ட வேண்டும்" என்று சட்டம் செய்யத் தீர்மானித்தார். அப்படிப்பட்ட ஒரு சட்டம் செய்ய, அவசியம் பொதுமக்கள் ஆதரவு வேண்டும். அவருடைய அன்றைய ஜஸ்டிஸ் கட்சியோ, மிட்டாதார் மிராசுதார், ஜமீன்தார் இவர்களின் கூட்டமாக இருந்ததால், தம் கட்சித் திட்டத்திற்கு மக்கள் ஆதரவு கிடைப்பது கஷ்டமென்று கண்டுகொண்டார். அத்திட்டத்திற்குப் பொதுமக்கள் ஆதரவை யாராவது திரட்டிக் கொடுத்தால் நலமாக இருக்குமென்று கருதி, அப்பணியை யாரிடம் ஒப்படைப்பதென்று யோசிக்கலானார்.

அவருடைய யோசனைக்குப் பெரியார் ஒருவர்தான் பிடிபட்டார். பெரியாரிடம் வந்து இரண்டு மூன்று நாள் தொடர்ந்து பெரியார் அவர்களுடன் கலந்து பேசினார். காங்கிரசிலிருந்தபோதே வகுப்பு வாரிப் பிரதிநிதித்வத்திற்காகவும், சமுதாய சீர்திருத்தத்திற்காகவும் பாடுபட்டு, அதன் காரணமாக அதைவிட்டு வெளியேறி விலகியிருந்த பெரியார் அவர்களும், அவரது வேண்டுகோளுக்கு இணங்கித், தமிழ்நாடெங்கணும் இப்பொல்லாத பிராமணீயத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யத் துவங்கினார்.

"சாமிக்கு அரிசி பருப்பு ஏன் படைக்கவேண்டும்? அந்தச் சாமி சாப்பிடுவதாக எந்த டாக்டராவது 'சர்டிபிகேட்' எழுதிக் கொடுப்பாரா?

அப்படியிருக்க, சாமிக்கென்று கூறிச், சோம்பேறிப் பார்ப்பனர்கள்தானே இதை உண்டு வயிறு வளர்க்கிறார்கள். பாடுபட்டுப் பட்டினி கிடக்கும் நீங்கள்தானே அதற்குப் படி அளந்து வருகிறீர்கள்" என்கின்ற பல்லவியைத் துவக்கி, "சாப்பிடட்டும், தொலைந்து போகிறார்கள். அதற்குக் கணக்காகிலும் காட்டித் தொலைக்கட்டுமே! கணக்கில்லாவிட்டால் அவர்கள் பொதுச் சொத்துக்களை யெல்லாம் நாளாவட்டத்தில் தமது சொந்த சொத்தாக்கிக் கொள்வார்களே! நீங்கள் அழ அழ அவர்கள் உங்களைக் கொள்ளையடிப்பதா?" என்பதாக இன்னும் பல விஷயங்களைக் கிளப்பி, கர்ஜனை செய்து வந்தார்கள்.

அந்தச் சமயம் "ஜஸ்டிஸ் கட்சி சாமிகள் தலையில் கை வைத்துவிட்டது" என்று விஷமம் செய்து, மக்களை ஜஸ்டிஸ் கட்சி மீது வெறுப்படையச் செய்திருந்தது என்றாலும், பெரியார் பேச்சைக் கேட்ட பிறகு சட்டம் அவசியம்தான், கணக்கு வழக்குக் கவனிக்க வேண்டியது தான் என்று கருதிக் கொண்டார்கள். பனகலரசருக்கும் இந்துமதப் பரிபாலனச் சட்டம் இயற்றுவது சுலபமாக முடிந்தது.

அந்த இந்துமத எதிர்ப்புப் பிரச்சாரத்தில் சேர்ந்தவர்கள்தான் நாங்கள் ஏழெட்டுப் பேர்கள். சட்ட மியற்றுவதற்கு ஆதரவு தேடித் தந்ததும், பெரியார் அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார். பெரிய தூரதிருஷ்டி யுடையவர் ஆதலால், யோசித்துப் பார்த்தார். இந்த "ஜஸ்டிஸ் கட்சிக் காரர்களோ பணக்காரர்கள்; பணத்தைக் காப்பாற்ற – தம் பதவியை நீட்டிக்க எதையும் செய்ய இவர்கள் துணிவார்கள்; இவர்களை நம்பி நம்மால் என்ன செய்ய முடியும்? இவர்களது வேலை முடிந்ததும் நம்மை இவர்கள் கைவிட்டுவிடுவார்களானால், நாம் என்ன செய்வது? நாம் மக்களிடையே செய்த இவ்வளவு பிரச்சாரத்தையும் வீணாக்குவதா?" என்று சிந்தித்தார்.

தம் ஆபீஸ் அகராதிகளை யெல்லாம் புரட்டிப் பார்த்தார். அப்போது கண்டெடுத்த வார்த்தைதான் 'சுயமரியாதை' என்பது. அப்போது தோற்றவித்ததுதான் சுயமரியாதை இயக்கம் ஆகும்.

அவ்வியக்கத்தின் மூலம் பிராமணீயத்தைத் தாக்க ஆரம்பித்தோம். அவர்கள் சாத்திரத்தை ஆதாரமாகக் காட்டினார்கள். அதை ஆராய்ந்து பார்த்து, அதை ஆரியம் தமக்காக எழுதிவைத்துக் கொண்டதென்றோம். பாராசுரர் வாக்கு மறுவாக்கு என்று கூற ஆரம்பித்தனர்; அவற்றிற்கும் தக்க மறுப்புகள் கூறினோம்! புராணங்களையும் உபநிஷத்துக்களையும் காட்ட ஆரம்பித்தார்கள், அவற்றையும் ஆராய்ந்து பார்த்து அவற்றிலுள்ள புரட்டுக்களை எடுத்துக் கூற ஆரம்பித்தோம்! முடிவில் கடவுளை

ஆதாரமாகக் காட்ட ஆரம்பித்ததும், "நிறுத்து தம்பி! அதைப் பற்றி உனக்கும் ஒன்றும் தெரியாது, எமக்கும் ஒன்றும் தெரியாது" என்று பதில் கூறினோம்! இவற்றையெல்லாம் எங்களுக்குக் கூறித் தந்தவர் பெரியார்தான். சுயமரியாதைத் தத்துவத்தையே நமக்கும் நமது இவ்வுலகத்திற்கும் அளித்தவர் பெரியார்தான்.

சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்ததும் அவரேதான். இந்தப் பெருமையில் பங்குகொள்ள வேறு யாருக்கும் உரிமையும் கிடையாது.

அவர் தமது சுயமரியாதைத் தத்துவத்தின் மூலம் நமக்கு எதையும் எளிதாக்கித் தந்தார். நமது அறியாமையை அகற்றி நமக்குப் பகுத்தறிவு ஊட்டினார். நமது ஏழ்மையையும் கூட மறக்கச் செய்தார். ஏழை, பணக்காரன் என்பதில்லை; தொழிலாளி முதலாளி என்பதில்லை; அனைவரும் தோழனுக்குத் தோழன்தான் என்ற மனப்பான்மையை ஊட்டினார்; அதை வளர்த்தார்.

ஜமீன்தார்களை முரட்டுப் பணக்காரர்கள் என்றார்; கடவுளை வெறும் உருளைக் கல் என்றார், பிராமணீயம் அந்தக் கடவுளுக்குத் தூண்; அத்தூணைச் சுக்கு நூறாக்கினால்தான் நாம் இன்ப வாழ்வு வாழ முடியும் என்றார். இவற்றைக் கூற அவர் ஒரு சிறிதும் அஞ்சியதில்லை.

யாரோ ஒரு அன்பர் சற்றுமுன் அஞ்சா நெஞ்சம் படைத்த அழகிரிசாமி என்று என்னைப் பாராட்டினார். எனக்கு அஞ்சா நெஞ்சத்தை அளித்தவர் பெரியார்தான். அவர் எனது அறிவிலிட்ட வித்துதான் என்னை அஞ்சா நெஞ்சமுடையவனாக்கியது.

கடவுளென்றால் அதெல்லாம் "வெறும் புரூடா" என்று கூறினார், "மதம் மடமையின் விருந்து" என்று புகன்றார், "புராணம் ஒரு ஏமாற்று வித்தை" என்றார்; "பிராமணீயம் ஒரு படுமோசப் பாதகம்" என்றார். சாத்திரங்களைக் "குப்பை" என்று குறித்தார். அப்படி எதைக் கண்டு நாமெல்லாம் அஞ்சினோமோ – எதற்கு நாமெல்லாம் அடிபணிந்திருந்தோமோ – எதை நம்மவர்கள் சிலர் பெருமை என்றுகூட நினைத்து வந்தார்களோ அவற்றையெல்லாம் அறிவு கொண்டு விளக்கி நமது வாழ்க்கையை ரொம்ப லகுவாக்கினார்; நமது துன்பங்களையெல்லாம்கூட மறக்கச் செய்தார்.

படித்தவர் – படியாதவர்கள், ஜமீன்தார்கள் – குடியானவர்கள், உத்தியோகஸ்தர்கள் – குமாஸ்தாக்கள், பணக்காரர்கள் – ஏழைகள் ஆகிய சகலரையும் நமது கண்களுக்கு ஒரே மட்டமாக்கினார்.

எம்.பி.பி.எஸ். டாக்டரையும் நமது அம்பஷ்ட வைத்தியரையும் அவர்களது அநுபவத்தைக் கொண்டு – அவர்களின் செயலாற்றுந் திறனைக் கொண்டு கணக்கிடும்படிச் செய்தவர் அவர்தான். "எப்படி ஒரு பெரிய ரோட்டு உருளையானது ரோடில் பரப்பப்பட்டுள்ள சிறுகல் பெருங்கல் அனைத்தையும் தன் பளுவால் சரிமட்டமாக்குகிறதோ, அப்படித் தம் அறிவுருளையால் அனைத்தையும் சமமாக்கித் தந்தார், நமது அறிவின் தந்தை பெரியார்.

முகத்து ரோமத்தை நீக்க உதவுவது கூரிய கத்தி; அதைக் கூர்மைபடுத்தித் தருவது சாணைக்கல்; அதேபோல் பகுத்தறிவுதான் நமது மடமையைப் போக்கும் கத்தி; அப்பகுத்தறிவுக்குச் சாணைக்கல் போல் உதவி செய்வதுதான் நமது கல்வி. ஆகவே, கல்வியைக் கல்லடா தம்பி! அது அறிவைக் கூர்மைப்படுத்தும் தம்பி! நெடுங்காலமாகவே நமது அறிவை உபயோகப்படுத்தாததால் அது மழுங்கிவிட்டது. ஆதலால் அதைக் கல்வியெனும் சாணைக்கல்லால் தீட்டுடா தம்பி! என்று கூறியவர் அவர்தான்.

படித்தவர் என்றால் ஒன்றும் பிரமாதம் இல்லை. படித்துவிட்டால் மட்டும் ஒருவன் அறிவாளியாகிவிடமாட்டான். அறிவாளிகளெல்லாம் படித்துத்தான் அறிவாளிகள் ஆனார்கள் என்று கூறுவதற்கும் இல்லை. அல்லது படித்திருப்பதனாலேயே ஒருவன் சகல காரியங்களிலும் நிபுணன் ஆகிவிட முடியாது. நன்றாகப் படித்துள்ள ஒரு நீதிபதி, ஒரு நல்ல நாற்காலி மேசையைச் செய்துவிட முடியாது. அது தச்சன் தொழில். ஆகவே, அவன்தான் அதைத் திறம்படச் செய்வான். அந்த நாற்காலி செய்ய முடியாததால் அந்த நீதிபதியை அறிவற்றவன் என்று நாம் கூறிவிட முடியுமா? அந்தத் தச்சனையே ஒரு உளியடித்துக் கொடு என்றால் அதைத் திறம்பட அவனால் செய்து தர முடியுமா? உளி செய்பவன் கருமான், அவனுக்குத்தான் உளி செய்யும் பக்குவம் தெரியும். ஆகவே, அவனவனுக்கு அந்தந்தத் தொழிலில் தேர்ச்சியுண்டு என்று கூறலாமே தவிர, ஒருவன் மற்றவனைவிட அறிவில் உயர்ந்தவன் என்றோ, தாழ்ந்தவன் என்றோ நம்மால் கூற முடியாது.

"செழுமையில் ஆசைப்படாதே! உன்னுடைய தேவையை அநாவசிய மாக அதிகரித்துக் கொள்ளாதே! மற்றவர்களின் ஆடம்பரத்தைக் கண்டு அவ்வாடம்பரத்தில் மோகம் கொள்ளாதே! இன்று வெறும் ஆசைக்கென்று விருப்பப்படும் பொருளானது, நாளைக்கு அடைய முடியாமற் போனால் நமக்குத் துன்பத்தையே அளிக்கும்! ஆனதால் அவசியமில்லாத பொருளைத் தேவையென்று கருதிவிடாதே! எளிய வாழ்க்கை நடத்து!

ஏமாந்து போகாதே!" என்று எச்சரிக்கை செய்து நம் வறுமையை மறக்க வழி செய்து தந்தவரும் பெரியார்தான்.

அவரது பொருளாதாரச் சிக்கனமும் சற்று அலாதியானதுதான். "முழுக்கை சட்டையில் மோகம் கொள்ளாதே! நாலு முழுக்கைச் சட்டைகளுக்கு வேண்டிய துணியில், 5 அரைக்கைச் சட்டைகள் தைத்துக் கொள்ளலாமே! வேலை செய்வதில்கூடச் சிக்கனத்தை அனுஷ்டிக்கும்படிச் செய்வார். அதனால்தான் அவர் எப்பொழுதும் அரைக்கைச் சட்டைகளை அணிந்து வருகிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இப்படி எதற்கெடுத்தாலும் சிக்கனம்தான். ஆம், மண்ணும் விண்ணும் கூட இவருக்குச் சிக்கனம் செய்யப்பட வேண்டியவைதான். காரணமின்றி அவர் நமக்குச் சிக்கனம் போதிக்கவில்லை. சிக்கனம் அனைவருக்கும் அவசியமானது, அதுவும் நம்மைப் போன்ற ஊதாரி மக்களுக்குச் சிக்கனக் கருத்து மகா மகா அவசியமானது. எதையும் வீணாக்குவதுதான் நமது பழக்கம். பாருங்கள்! இந்த மேசை மீது குவிந்து கிடக்கும் இந்த மலர் மாலைகளால் யாருக்கு என்ன லாபம்? இம்மாதிரி எத்தனை மாலைகள் அன்றாடம் பாழாகின்றன? நம் நாட்டில் மாலை அணிவித்தல் என்ற அர்த்தமற்ற சடங்கால், தினம்தினம் எத்தனை ஆயிரம் ரூபாய்கள் பாழாகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? இதற்காக எத்தனை பேருடைய உழைப்பு, எத்தனை ஏகர் பூமிகள் வீணாக்கப்படுகின்றன என்பதைப் பற்றிச் சிந்தித்ததுண்டா? மலர் மாலை அணிவித்தலை விட்டு துணிமாலையாவது நூல் மாலையாவது அணிவித்தல் வேண்டும். மற்றவர்கள் செய்யாவிட்டாலும் நாமாவது, நாசகரமான இப்பழக்கங்களைக் கைவிடல் வேண்டுவது முக்கியம். இவற்றை யெல்லாம் கூட நமக்கு விளக்கிக் காட்டியவர் பெரியார்தான்.

இவரைப் பெரியார் ஈ.வெ. ராமசாமி என்றே நமது மக்கள் சாதாரணமாக அழைக்கின்றார்கள் என்றாலும், என்னைப் பொறுத்த வரையில் எனக்குப் பெரியார் வேறு, ஈ.வெ.ராமசாமி வேறுதான்.

ஈ.வெ.ரா.வுக்கு மாடமாளிகைகள் உண்டு. நூற்றுக்கணக்கான வீடுகளும், நூற்றுக்கணக்கான ஏகர் நஞ்சை புஞ்சைகளும் உண்டு. ஓரளவு ரொக்க ரூபாயும் பாங்கியில் உண்டு. ஆனால், பெரியாருக்கு அதெல்லாம் இல்லை. அவருக்கு உலகெல்லாம் சொந்த ஊர்தான். உலக மக்களெல்லாம் அவருக்குச் சகோதர சகோதரிகள்தான்.

நம் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் எத்தனையோ பணக்காரர்கள் உண்டு. அவர்களில் சிலர் தனக்குப் பணமிருக்கிறது என்று மற்றவர்

பாராட்ட வேண்டு மென்பதற்காகப் பணம் சம்பாதிப்பார்கள். சிலர் பணமூட்டைகளை அடுக்கி அழகு பார்ப்பதற்காகச் சம்பாதிப்பார்கள். இன்னும் சிலர் தமது வாழ்வை ஆடம்பரமாக நடத்தவேண்டும் என்பதற்காகப் பணம் சம்பாதிப்பார்கள். ஆனால் எந்தப் பணக்காரனும், அவன் எந்நாட்டவனாயினும் சரியே, அவன் தன் சுயநலத்திற்காக – சுய பெருமைக்காகப் பொதுவாழ்வில் ஈடுபடுவானே அல்லாது, தன்னலமற்று எவனும் பொதுவாழ்வில் ஈடுபடமாட்டான்.

ஆயுள் முடிந்து ஓய்வுபெறவேண்டிய காலத்தில்கூட தான் சம்பாதித்த பொருளின் முழுப் பயனையும் அடைய முயற்சிப்பானே அல்லாது, தன் எஞ்சிய காலத்தைப் பொதுவாழ்வுக்குச் செலவழிக்க இசையான்.

ஆனால், இவர்களுக்கு எல்லாம் மாறுபட்டவர் பெரியார். இவரும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையோடுதான் ஒரு மனிதனுடைய டாம்பீக வாழ்வுக்குப் போதுமான அளவுக்குப் பணம் சம்பாதித்துவிட்டார். தாம் சம்பாதித்த பொருளைக் கொண்டு எடுபிடி ஆள் நாலைந்து பேரை வைத்துக்கொண்டு எவ்வளவோ சுகமாக வாழலாம். எப்படித் தம் பணத்தை வாரி இறைத்தாலும் ஏனென்று கேட்க ஆளில்லை. அப்படியிருந்தும் பெரியார் என்ன செய்கிறார்? அவர் இப்படி சுகவாழ்க்கை வாழ்வதை விட்டு, இத்தள்ளாத வயதில்கூட, தமது நேரம் பூராவையும் பொதுநல ஊழியத்திலேயே செலவழித்துவிடுகிறார். ஆகவேதான் பெரியாருள் ஒரு பெரியார் என்று இவரை அழைக்க வேண்டியிருக்கிறது.

இத்தகைய பெரியார் இருந்ததாக உலக சரித்திரம் கூறக் காணோம். நாமும் இவரைத் தவிர வேறோர் பெரியாரைக் கண்டோமில்லை, இனியும் காணப்போவதில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். ஆகவேதான் நான் முதலிலேயே திராவிடநாடு அதிர்ஷ்டம் பொருந்திய நாடு, நாம் பிறந்திருப்பதால் அதிர்ஷ்டசாலிகள் ஆனோம் என்றேன். ஏனெனில் இத்தகைய ஒரு பெரியாரின் வாழ்நாளில் பிறந்திருக்கும் பேறு பெற்றுள்ளோம், ஆதலினால்.

பெரியாருக்குத் தனிப்பட்ட முறையில் யார் என்ன தீங்கு செய்தாலும் செய்திருந்தாலும் அதை, மனித சுபாவமே அப்படித்தான் என்று கூறிப் பொறுத்துக்கொண்டு விடுவார். ஆனால், இயக்கத்தைப் பொறுத்தமட்டில் சிறிது தவறு செய்துவிட்டாலும் உளம் பொறார். சுலபத்தில் ஆத்திரம் கொள்வார். தயை தாட்சண்யமின்றிச் சற்றும் பொறுப்பில்லாதவன், முட்டாள், போக்கிரி, சோம்பேறிப்பயல் என்றெல்லாம்கூடச் சமயசந்தர்ப்பம் பாராமல் ஏசிவிடுவார். இயக்கத்தின் மீது அவ்வளவு பற்றுதல் உள்ளவர். அவரது தன்னலமற்ற இந்த இயக்கப்

பற்றுதல்தான், இந்த ஏசல் மொழிகளைக் கேட்டுக்கொண்டும் நமது இளைஞர்களைப் "பெரியார் வாழ்க வாழ்க" என வாழ்த்தொலி கூறிப் பின்பற்றிச் செல்லும்படித் தூண்டுகிறது.

வாலிபர்கள் என்றாலே பெரியாரின் அகராதியில் அனுபவம் அற்றவர்கள் என்றுதான் பொருள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் அகராதியிலோ அவர்கள்தான் நிகழ்காலச் சிற்பிகள், எதிர்கால மன்னர்கள். தம் இஷ்டப்படித் தண்டவாளத்தைப் பெயர்த்துத் தம்மைப் பதவியில் உட்கார வைக்கக் கூடியவர்களும் அவர்கள்தான் என்பார்கள். ஆனால், இதைப் பெரியார் ஒப்புக்கொள்ளமாட்டார். ஒப்புக் கொள்ளாமலிருக்கக் காரணமும் உண்டு. எனது அனுபவமும் அதுதான்.

வாலிபத் தோழர்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். பெரியார் உங்களை நன்கு அறிந்துள்ளார். ஆகவே, அவரை உங்களால் ஏமாற்ற முடியாது. அவரும் உங்கள் நன்மைக்காகத்தான் பாடுபட்டு வருகிறார். ஆதலால் அவர் வழி நடவுங்கள்; நடந்தால் இன்புற்று வாழலாம். இன்றேல் "வெங்கட ரமண கோவிந்தா" வென்று கூவிக்கொண்டு தெருவில் உருள வேண்டியதுதான்.

★

*(13.12.1947 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், அஞ்சா நெஞ்சன் கே.வி. அழகிரிசாமி அவர்கள் பெரியார் படத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றியது.)*

# 15. மூட நம்பிக்கை

## ஜி. டி. நாயுடு (23. 1. 1971)

பெருமதிப்பிற்குரிய தலைவர் பெரியார் அவர்களே! அன்பு நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! வருங்கால உலகத்தைச் சீரும், சிறப்பும் மிக்கதாகச் செய்யக் காத்திருக்கும் நல் இளைஞர்களே! உங்கள் அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கம்.

நான் எந்த ஒரு அரசியல் கட்சியையும் சேர்ந்தவன் அல்லன். இதனால்தான் எந்தக் கட்சிக்காரர் அழைத்தாலும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு என் அனுபவத்தில் கண்டு அறிந்த உண்மைகளைத் துணிச்சலுடன் கூறிவருகின்றேன். இவ்வாறு உண்மையை வெளிப்படையாகப் பேசுவது அரசியல் கட்சியில் இருப்பவர்களுக்குப் பிடிப்பதில்லை. காரணம், எங்கே அவர்களுடைய தவறுகளையும் எடுத்து வெளியே சொல்லிவிடுவேனோ என்று பயந்து கொள்கிறார்கள்.

பெரு மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள் தலைமையிலே மூட நம்பிக்கைகள் ஒழிப்பு மாநாடு நடத்துவது பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெரியார் அவர்கள் மூட நம்பிக்கையை ஒழிப்பதற்காக அன்றும் இன்றும் அயராது இரவு பகல் பாராது ஓயாது உழைத்துக்கொண்டு வருகிறார். அவருடைய பணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவருடைய பணியால் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சி – ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதை யாரும், எவரும் மறுக்க முடியாது.

பெரியார் அவர்கள் எப்போதுமே ஆட்சியில் இருக்கும் கட்சியை ஆதரித்துக் கொண்டிருப்பதாகப் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. ஆட்சியில் உள்ளவர்களை அனுசரித்துப் போய் அதன் மூலமாக அவர் சாதித்துக்கொள்ள வேண்டியவைகள் – பெறவேண்டிய சலுகைகள், லைசென்சுகள், கோட்டா முறைகள் எவையும் கிடையா.

அவர் எதற்காக ஆட்சியில் உள்ளவர்களை அனுசரித்துப் போகின்றார் என்றால், அவர்கள் எப்படியாவது மூட நம்பிக்கைகளை

ஒழித்தால் சரி என்பதற்காகத்தான். ஆட்சியில் உள்ளவர்களால்தாம் சட்டங்களைப் போட்டு மூட நம்பிக்கைகளை ஒழிக்க முடியும் என்ற காரணம் பற்றியே அவ்வப்போது ஆட்சிக்கு வருகின்றவர்களை ஆதரித்துக்கொண்டு வருகிறார்.

அப்படி இருந்தும் ஆட்சிக்கு வருகின்றவர்கள், இவர் எதிர்பார்க்கின்றபடி மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்கு வேகமாகச் செயல்படுவதில்லை. அவர்களும் சில வேலைகளைச் செய்கிறார்கள். பணம் சேரத் தொடங்கியதும் பயம் வந்து விடுகிறது. பிறகு அவர்களும் மூட நம்பிக்கை உடையவர்களாக மாறிவிடுகிறார்கள். இவ்வாறு அவர்களுக்குப் பணம் சேர்ந்து அவர்களும் பல மூடப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வதற்குப் பெரியார் எந்த வகையில் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியும்?

நம் நாட்டில் உள்ள கோடிக்கணக்கான பாமர மக்களும் படித்தவர்களும் மூட நம்பிக்கைகளில் மூழ்கித் தங்களுடைய பொன்னான நேரத்தையும், சக்தியையும், செல்வத்தையும் வீண் விரையம் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களைச் சரியான பாதைக்குத் திருப்பப் பெரியார் அவர்கள் பெரு முயற்சி செய்து கொண்டு வருகிறார். அவருடைய முயற்சிக்கு நாமும் உதவியாக இருந்து மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டியது அவசியமாகும். அதுவும் அவசரமான செயல் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

நாம் கொண்டுள்ள நம்பிக்கையை இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று சரியான நம்பிக்கை, மற்றொன்று மூட நம்பிக்கை. உதாரணமாகப் புயல் அடிக்கின்றது என்று வைத்துக்கொள்வோம். பலத்த காற்றின் வேகத்தால் புயல் அடிக்கிறது என்பது சரியான நம்பிக்கை. வாயுதேவனின் கோபத்தால் புயல் அடிக்கிறது என்பது மூட நம்பிக்கை.

நீராவியானது குளிர்ச்சி பட்டதும் மழை பெய்கிறது என்பது சரியான நம்பிக்கை. வருண பகவானால் மழை பெய்கிறதென்று சொல்வது மூட நம்பிக்கை.

காற்றில்லா வேளையில் புயல் அடிப்பதில்லை. காற்று அதிகமாக அடிக்கவே புயலாக மாறுகிறது என்று அதன் காரண, காரியங்களை அறிந்து கொள்வதே அறிவு. அதை விட்டுவிட்டு வாயு தேவனால்தான் புயல் உண்டாகிறது என்று நம்பியும், பேசியும் வருவது மூட நம்பிக்கை. இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளால் உண்மை மறைக்கப்படுகிறது.

ஆகவே உண்மையை விரும்புபவர்கள் மூட நம்பிக்கைகளையும் ஒழிக்க வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு விஷயத்தையும் விருப்பு வெறுப்பற்ற முறையில் ஆராய்ந்து அறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அறிவே உண்மை – உண்மையே அறிவு. இரண்டும் ஒன்றே. இதை உணர்ந்து நடக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையுமாகும். ஒவ்வொருவரும் அறிவை – அதாவது உண்மையைத் தேடினால் மூடப் பழக்க வழக்கங்கள் தாமாகவே மறைந்துபோம், அல்லது ஒழிந்துபோம்.

பகுத்தறிவுக்கு– அதாவது விஞ்ஞானத்திற்கு இரண்டு முறைகள் உண்டு. அவை யாவையெனில் முதலாவது பார்த்தல்; இரண்டாவது சோதனை செய்தல். இவ்விரண்டு முறைகளைக் கொண்டே உண்மை நிலை நிறுத்தப்படுகிறது.

சாதாணமாக நமது வாழ்க்கைக்கு வேண்டிய விஷயங்களை இந்த இரண்டு முறைகளின் துணை கொண்டே அறிந்து கொள்கிறோம். உணவில் உப்பு இருக்கிறதா? இல்லையா?–என்று அறிய உணவைச் சாப்பிட்டுப் பார்க்கிறோம். ஒரு வேளை நோயினால் நாக்குப் பாதிக்கப்பட்டு இருந்தால் ஆரோக்கியமான வேறு ஒருவரைச் சாப்பிடச் சொல்லி உண்மையை உணரலாம்.

இது போலவே பேய், பிசாசு, கடவுள், மோட்சம் இவைகளையும் பார்த்தல், சோதனை செய்தல் மூலமாக நிரூபிக்க முடியுமா? – என்பதை எண்ணிப் பாருங்கள். முடியாதபொழுது அவைகளைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டு, அவைகளைப் பற்றி எண்ணுவதையும் விட்டு விட்டுச் சமுதாயத்துக்குப் பயன்படும்படியான பகுத்தறிவு உள்ள செயல்களை – விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளும் செயல்களைச் செய்ய ஒவ்வொருவரும் முன்வர வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பார்த்தல் , சோதனை செய்தல் இரண்டுக்கும் உட்படாத அனைத்துமே மூடநம்பிக்கைகள் எனப்படும். நமது வாழ்க்கையோடு பல வகையான மூடநம்பிக்கைகள் தொடர்புகொண்டு நம்முடைய நேரத்தையும், சக்தியையும், செல்வத்தையும் விரயம் செய்து கொண்டு வருகின்றன. அவைகளில் ஒன்று, பாம்பைப் பற்றிய மூட நம்பிக்கை.

பாம்பைத் தெய்வமாக எண்ணிக் கும்பிட்டு வருவது புராதன காலந்தொட்டு இருந்துவரும் மூடப் பழக்கமாகும். வேத காலத்திலிருந்து

இன்று வரை பல நாடுகளிலுள்ள மக்களும் பலவிதமாகப் பாம்பைப் பூசித்து வருகிறார்கள். வாசுகி என்ற பாம்பைக் கொண்டு திருப்பாற்கடலில், அமுதத்தைத் திரட்டியதாக ஒரு கதை வழங்கப்பட்டு வருகிறது.

ஆயிரம் தலைகளையுடைய பாம்பாகிய ஆதிசேடன் பூமியைத் தாங்கி வருவதாகவும், ஓர் புராணக் கதை உண்டு. கிருஷ்ண பகவான் காளிங்கன் என்ற பாம்பின்மேல் நடனம் செய்ததாகவும் பாகவதக் கதை ஒன்றுண்டு.

புத்தர் கொடிய பாம்பு ஒன்றின் கோபத்தை அடக்கியதாகவும் ஓர் கதை உண்டு. இதைப் போன்ற கதைகள் பல பலவிதமாக வழங்கி வருகின்றன.

கிறிஸ்துவ நூலான பைபிளில் சாத்தான் பாம்பின் வடிவெடுத்து ஏவாளை மயக்கியதாகக் கூறப்பட்டிருக்கிறது. பாம்பைப் பூசிப்பதை நமது நாட்டில், எங்கும் காணலாம். பாம்புகள் வசித்துவரும் கறையான் புற்றுக்குப் பால் வார்க்கும் விசேட பூசைகள் செய்வதும் அதிகமாகக் காணப்படுகின்றன.

பாம்பு, ஊருகின்ற பிராணி வகைகளில் ஒன்று. ஊருகின்ற பிராணி வகைகளில் நான்கு வகைகள் உண்டு. அவைகள், லிசர்டஸ் என்னும் ஓணான், பல்லி வகைகள், ஒபிலியா (Ophelia) என்னும் பாம்பு வகை, குரோகோடிலியா என்னும் முதலை வகை ஆக நான்கு வகைகளாகும். இந்நான்கு வகைகளும் அமைப்பில் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இப்படியிருக்க, அவைகளை எல்லாம் விட்டுவிட்டுப் பாம்புக்கு மட்டும் ஏன் பூசை செய்கிறார்கள் என்றால், இது வேதகாலம் முதல் தொடங்கிய மூடப்பழக்கமாகும். பழக்கத்துக்கு அடிமைப்பட்ட மக்கள் அதையே தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் என்னவென்று யாரும் எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை.

"பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்ற ஒரு பழமொழி வழங்கி வருகிறது. இதுவே பாம்புகளின் பெருமைக்குக் காரணம். பாம்பினால் கடியுண்டு இறக்கின்றவர்கள் நம்நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 10 ஆயிரம் பேர்கள். இவ்வளவு பேர்கள் பாம்பு கடித்து இறந்து போவதனால்தான் பாம்புக்குப் பூசை செய்வதையும், பால் ஊற்றுவதையும், அதனைக் கடவுளுக்குக் காவலாக வைப்பதையும் தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

பாம்புக்கு அநேக கோவில்கள் கட்டப் பெற்றுள்ளன. இருந்தும் பாம்புக் கடியினால் இறப்பவர்களின் தொகை குறையவில்லை. கூடிக் கொண்டுதான் போகிறது. பாம்புக் கடிக்கு மந்திரத்தைப் பெரிதாக நம்புகிறார்கள். மந்திரம் ஜெபிப்பவரே கடிபட்டவருக்கு உள்ளே சாப்பிடவும் மருந்து கொடுக்கிறார். அந்த மருந்தின் மூலமாக விஷத்தை இறக்க முடியும் என்றால், ஒரு பாம்பை விட்டுக் கோழியை, நாயைக் கடிக்கச் செய்யலாம். அவைகளைக் காப்பாற்றிவிட்டால் மந்திரத்தை நம்பலாம். இந்த விஷயத்தை மந்திரம் போடுபவரிடம் கேட்டுப் பாருங்கள், உண்மை தெரியும்.

மந்திரம் என்பது சொற்களே. எல்லாச் சொற்களும் மந்திரத்தில் அடங்கியுள்ளன. சில சொற்களுக்கு மாத்திரம் எப்படி இவ்வளவு செல்வாக்கு வந்தது? என்றால், அது மக்களின் நம்பிக்கையைப் பெற்று மூடப் பழக்கத்தை வளர்த்து விட்டதுதான் காரணம்.

மந்திரத்தால் மாங்காய் விழுமா? அப்படி விழுந்த மாங்காய்கள் எத்தனை? அதைச் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்? பாமரமக்கள் மந்திரம், மந்திரம் என்று மயங்குகிறார்கள். அறியாமையை வளர்க்கவே மந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக 'ஓம்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். மற்றச் சொற்களைப் போலவேதான் இந்தச் சொல்லும். இதற்கென்று தனியாக எந்த விசேடமும் இல்லை. ஆனால், இந்த ஒரு வார்த்தைக்கு மட்டும் எத்தனை அர்த்தங்களைக் கற்பித்து எத்தனை வேத நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அதை உச்சரிப்பதிலேயே ஒரு பயத்துடன் உச்சரிக்கிறார்கள். பாமர மக்களை, ஏன் படித்தவர்களைக்கூடப் பயம் காட்டி ஒருசிலரின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்காகவே இது போன்ற மந்திரங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சந்தியாவந்தனம் என்று சொல்லப்படும் காயத்திரி ஜபத்தில் அடங்கியுள்ள சொற்கள் அனைத்தும் மற்றச் சொற்களைப் போன்றவையே. ஆனால் அச்சொற்களை யார் காதுக்கும் படாமல் குளக்கரையிலோ அல்லது நதிக்கரையிலோ அசைவற்று நின்றுகொண்டு சூரியனை நோக்கிச் சொன்னால் புண்ணியம் உண்டு என்று சொல்லி மூட நம்பிக்கையை உண்டாக்கிவிட்டார்கள்.

மனிதர்களில் பெரும்பாலோர் ஏதோ ஒருவகையில் தவறான வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருபவர்கள்தாம். அனைவருக்கும் மனச்சாட்சி என்று ஒன்று இருப்பதால் செய்த தவறுகளுக்குப் பரிகாரம்

காண ஏதோ ஒருவகையான புண்ணியத்தைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறார்கள்.

காயத்திரி ஜபத்தைச் சொல்லுவதால் செலவில்லாமல் புண்ணியம் வந்து சேர்ந்து விடுவதாக எண்ணிக்கொண்டு காலத்தையும், சக்தியையும் வீண்செய்து கொண்டு வருகிறார்கள். காயத்திரி ஜபத்தை ஒரு ஏட்டில் எழுதிப் படித்தால் அதன் முழு விபரமும் தெரியவரும். அதாவது அது சூரிய உதயத்தைப் பார்த்துப் பாடப்பட்ட ஓர் பாடலாகும்.

சூரிய உதயத்தைக் கண்டு பறவைகள் பாடுகின்றன. மயில்கள் ஆடுகின்றன, உறங்கிக் கிடந்த உலகமே குதூகலத்தை அடைகிறது. சூரிய உதயமும் மறைவும் அழகிய காட்சிகளாகும். அவைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து யாரோ ஒருவர் பாடி வைத்த பாடலைப் புண்ணியம் கொடுக்கும் மந்திரம் என்று நம்பிக்கொண்டு வருவதை மூடநம்பிக்கை என்று சொல்லாமல் வேறு எவ்விதமாகச் சொல்லுவது! அதன் மூலம் எத்தனை பேர்கள் எந்தவிதமான நன்மைகளை அடைந்துள்ளார்கள் என்று ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா?

சாதாரண கல்லும், செம்பும், களிமண்ணும் விக்கிரகங்களாக மாறிவிட்டால், விசேடத் தகுதியைப் பெற்றுவிடுவதைப் போலவே சில சொற்களை மந்திரங்கள் என்று சொல்லுவதால் அவைகளும் பெரிய தகுதியை அடைந்துவிடுகின்றன. எல்லாம் ஏமாற்று வேலைகள். பகுத்தறிவைப் பயன்படுத்தாததால் ஏற்பட்ட இழிநிலைகளே மூடநம்பிக்கைகள்.

மூடநம்பிக்கைகளால் மனிதனுக்கு என்ன வசதிகள் ஏற்பட்டுள்ளன? உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்துள்ளதா? வைத்தியம், கல்வி, சுகாதார வசதி பெருகியுள்ளதா? நீங்களே எண்ணிப் பாருங்கள், சிந்தனை செய்யுங்கள்.

நல்ல நாளில், நல்ல நேரத்தில் ஆரம்பித்த எத்தனை காரியங்கள் தோல்வியுற்றுள்ளன? ராகு காலத்தில் செய்த எத்தனை காரியங்கள் வெற்றி பெற்றுள்ளன? இவைகளுக்கு ஏதாவது சரியான கணக்கு உண்டா? பஞ்சாங்கத்தில் ராகு காலம், குளிகை காலம், பல்லி விழும் பலன் ஆகியவைகளை எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளைப் பார்த்து அதன்படி நடந்து எத்தனை பேர்கள் முன்னேறி உள்ளார்கள்? அவைகளை நம்பாமல் தம் உழைப்பை மாத்திரமே நம்பி காரியங்களைச் செய்பவர்கள் எத்தனை பேர்கள் தோல்வி அடைந்துவிட்டார்கள்?

ஒரே நேரத்தில், மிகவும் நல்ல நேரத்தில், ஏழை வீட்டில் ஒரு குழந்தையும், பணக்காரன் வீட்டில் ஒரு குழந்தையும் பிறக்கிறது. இரண்டு குழந்தைகளும் ஒரே நேரத்தில் பிறந்து இருந்தும், ஒன்று வறுமையில் வாடுகின்றது, மற்றொன்று செல்வத்தில் வளருகின்றது. இது ஏன்? இவைகளைப் பற்றி எல்லாம் எண்ணிப் பார்த்தால் தெரியும் நாம் எவ்வளவு மூடப் பழக்க வழக்கங்களால் கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று!

ஏன் இவைகளை எல்லாம் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை? கண்களை மூடிக்கொண்டு பழைமையை நம்புவதுதான் காரணம்.

சோதிடத்தின் முக்கிய கருத்து என்னவென்றால், சில நட்சத்திரங்களின் போக்கை யொட்டி மனிதனின் வாழ்க்கையும் மாறுபடுகிறது என்று சொல்லுகிறார்கள். வானத்தில் உள்ள நட்சத்திரங்களுக்கும், மனிதனுடைய வாழ்க்கைக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. சோதிடம் பயின்று சோதிடம் சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கே அவர்களுடைய எதிர்காலத்தில் நடக்கப்போவது என்னவென்று தெரியாது. அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்குமென்று தெரியாதவர்கள் பிறருடைய எதிர்காலம் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பது மிகவும் வியப்பாக இருக்கிறது.

சோதிடம் பார்ப்பதும் ஓர் மூடநம்பிக்கைதான். எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்று தெரிந்து சொல்லும் சக்தி இருந்தால், சோதிடம் சொல்லுபவர்களே குதிரைப் பந்தயம், லாட்டரி போன்றவைகளில் கலந்து கொண்டு லட்சக் கணக்கில் சம்பாதிக்கலாமே! ஏன் வருபவரிடம் நான்கு அணாவை எதிர்பார்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும்? மக்களின் மூட நம்பிக்கையைப் பயன்படுத்திச் சிலர் வயிறு வளர்க்கச் செய்துகொண்ட வழியாகும் இது.

சகுனம் பார்ப்பதும் ஒரு வகையான மூட நம்பிக்கைதான். ஒற்றைப் பார்ப்பான், விதவை, குருடன், முடவன், நோயாளி, எண்ணெய் வியாபாரி ஆகியவர்கள் எதிர்ப்பட்டால் கெட்ட சகுனம் என்று நம்புகிறார்கள். இவைகள் எப்படிக் கெட்ட சகுனமாகும்? மேலே கூறியவர்கள் எதிர்ப்பட்டு எத்தனை பேர்களுக்கு எத்தனை காரியங்கள் கெட்டுப்போய் இருக்கின்றன? இவைகளை எல்லாம் யாராவது பரீட்சை செய்து ஆதார பூர்வமான முடிவை வெளியிட்டுள்ளார்களா?

ஒற்றைப் பார்ப்பானை நமக்குத் தெரியாமல் எத்தனை தடவை சந்திக்கிறோம். பிராமணர் வசித்துவரும் தெருவில் ஒற்றைப் பார்ப்பான்

எதிர்ப்படுவது சர்வ சாதாரணம். இதைப் பற்றி எந்தப் பார்ப்பானும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. நம்மவர்கள்தாம் கெட்ட சகுனம் என்று சொல்லிக்கொண்டு மனத்தைக் கெடுத்துக்கொண்டு வருத்தப் படுகிறார்கள். மற்றும் மூன்று பிராமணர்கள் எதிர்ப்பட்டால் நல்ல சகுனமாம். ஒருவர் எதிர்ப்பட்டால் கெடுதல் என்றால், மூன்று பேர்கள் எதிர்ப்பட்டால் எப்படி நல்லதாகும்? அதிகக் கெடுதல் அல்லவா ஏற்பட வேண்டும்? ஏன் அப்படிச் சொல்லுவதில்லை!

விதவை எதிர்ப்பட்டால் ஏன் கேடு வரும் என்பதை யாரும் விசாரிப்பதில்லை. விதவை எதிர்ப்பட்ட தினம் எல்லாம் கேடு விளைகின்றதா? எத்தனை தடவை கேடுகள் விளைந்தன? விதவை என்பதும் சுமங்கலி என்பதும் நாம் வைத்த பெயர்கள்தாமே! பெயர் வித்தியாசத்தால் கேடும், நன்மையும் எப்படி வரும்?

இன்று விதவையாக இருப்பவள் நாளையே சுமங்கலியாக மாறிவிடலாம். விதவை, சுமங்கலி என்பது வெறும் வழக்கச் சொற்கள்தாமே! சுமங்கலி எதிர்ப்பட்ட போதெல்லாம் நல்லதே நடந்ததென்று யாராவது நிரூபித்துள்ளார்களா? வெறும் சொற்களை நம்பி நம்மை நாமே மோசடி செய்துகொள்வானேன்? இத்தனைக்கும் காரணம் சகுனங்களால் நன்மை தீமைகள் விளைவதாக எண்ணிக்கொண்டிருக்கும் மூடநம்பிக்கைதான். பல்லாண்டுகளாக நம் மக்கள் மூடநம்பிக்கையிலேயே மூழ்கிக் கிடப்பதால்தான் நம் நாட்டில் விஞ்ஞானம் வளர்ச்சியடையவில்லை. மூடப் பழக்கங்கள் ஒழிந்தால்தான் விஞ்ஞான அறிவு வளர்ச்சியடையும்.

கடவுளை நம்புவதும், கும்பிடுவதும்கூட மூட நம்பிக்கைதான். கடவுளை நம்பிக்கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள் உண்ண உணவு இன்றி உடுக்க உடையுமில்லாமல் தெருத் தெருவாகத் திரிவதைக் காண்கிறோம். இது போலவே கடவுளைப் பற்றியே ஒரு சிறிதும்கூட நினைத்துப் பார்க்காதவர்கள் எவ்வளவோ தூரம் முன்னேறிச் சீரும் சிறப்புமாக வாழ்வதை நாம் காண்பதில்லையா? உதாரணத்துக்குப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களையே சொல்லலாம்.

கடவுள் இருக்கிறார் என்று ஒருவர்கூட நிரூபித்துக் காட்டவில்லை. கடவுள் உண்மையிலேயே இருப்பதாக இருந்தால், அவர் வசித்து வரும் கோவில்களையாவது காப்பாற்ற முயற்சி செய்திருப்பார். சமீபத்தில் குருவாயூர் கோவில் முழுவதுமே தீப்பற்றி எரிந்து சாம்பலானது. அங்கு

ஒரு சக்தியோ தெய்வமோ இருந்திருந்தால் அதைக் காப்பாற்றி இருக்க முடியும். ஒன்றும் இல்லாததை நம்பிக்கொண்டு ஏன் இத்தனை மக்கள் தங்கள் காலத்தையும், சக்தியையும் செல்வத்தையும் வீண் விரையம் செய்ய வேண்டும்?

கடவுள் என்பது கற்பனை என்றும், அதனால் எந்தவிதமான நன்மையும், தீமையும் கிடையாது என்றும் பெரியார் அவர்கள் பல ஆண்டுகளாகக் கூறிக்கொண்டு வருகிறார். அதையே நானும் சொல்லிக்கொண்டு வருகிறேன். இருப்பினும் கோவிலுக்குச் செல்பவர்களின் கூட்டம் அதிகரித்துக்கொண்டேதான் வருகிறது.

சென்ற மாதம் திருப்பதி உண்டியலில் 28 லட்ச ரூபாய் வசூலாகியுள்ளது. இது எதைக் காட்டுகிறது. கடவுள் இல்லை என்பதை எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் மக்கள் நம்புவதாக இல்லை; வளர்ந்து வரும் மூடநம்பிக்கைகள் இப்படியே வளர்ந்துகொண்டு சென்றால் மக்கள் ஒரு சிலரின் அடிமைகளாகிவிட நேரும். இவ்வளவு தூரம் கல்வி அறிவு வளர்ச்சியடைந்தும், மூடநம்பிக்கையும் வளர்ச்சியடைந்து கொண்டு வருவது மிகவும் வ்ருத்தமாகவே இருக்கிறது.

என்னிடம் வேலைக்கு இருந்த டாக்டர் ப. அ. துரைசாமி (சக்தி தோட்டம், பழனிக் கவுண்டன் புதூர், பன்னிமடை அஞ்சல், கோயமுத்தூர் – 17) என்பவர் அதிகப்படியான மூடப் பழக்க வழக்கங்கள் உள்ளவர். அவர் எந்த ஒரு விஷயத்துக்கும் சோதிடரைக் கேட்காமல் எதுவும் செய்யமாட்டார்.

சோதிடர்கள் குதிரைப் பந்தயத்திலும், லாட்டரிச் சீட்டிலும் பணம் வரும் என்று சொல்லிவிட்டார்கள். அதை நம்பிக்கொண்டு அவர் குதிரைப் பந்தயங்கள் நடக்கும் எல்லா இடங்களுக்கும் செல்வார்; எல்லா மாநில லாட்டரிச் சீட்டுக்களையும் விடாமல் வாங்குவார்; இப்படிச் செய்து சில ஆயிரம் ரூபாய்களைத் தொலைத்தார். பின்னர் மற்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து தொழில் செய்யும்படி ஒரு சோதிடர் சொல்லியதைக் கேட்டுக் கொண்டு சிலருடன் கூட்டுச் சேர்ந்து திட்டமில்லாதபடித் தொழில் செய்து சில ஆயிரம் ரூபாய்களைத் தொலைத்தார்.

குதிரைப் பந்தயமும் வேண்டாம், தொழிலும் வேண்டாம், கல்யாணமாவது செய்துகொண்டு நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணிப் பல பெண்களின் ஜாதகத்தை வாங்கி வந்து ஜாதகப் பொருத்தம் பார்க்கத் தொடங்கினார்.

சோதிடர்கள் ஒவ்வொரு ஜாதகத்திலும் ஏதாவது ஒரு குறையைச் சொல்லி அதை வேண்டாம் என்று தள்ளிக்கொண்டே வந்தார்கள். ஆனால் இவரும் சலித்துப் போகாமல் பல ஊர்களுக்குப் போய் 500 ஜாதகங்களுக்கு மேல் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார். அப்படிச் செய்தும்கூட அவைகளில் எந்த ஜாதகமும் பொருத்தமில்லை என்று தள்ளிவிட்டார்கள்.

இது விஷயத்தை அறிந்த நான் அவரை அழைத்துச் "சோதிடம் பார்ப்பது மூடநம்பிக்கை, மனத்துக்குப் பிடித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்" என்று சொன்னேன். பிறகு ஜாதகமே பார்க்காமல் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு ஒற்றுமையாகக் குடும்பம் நடத்திவருகிறார்கள்.

ஒரு பெண் குழந்தைக்குக் கூடத் தகப்பனாராகியுள்ளார். அவரைப் போலவே இன்னும் எத்தனை கோடிக் கணக்கான பேர்களைச் சோதிடர்கள் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். ஒன்றும் தெரியாதவன்கூடத் தன்னுடைய வயிற்று பிழைப்புக்காகச் சோதிடம் சொல்ல ஆரம்பித்துவிடுகிறான்; அதையும் நம்பி ஏமாந்து போகிறார்கள்.

நானும்கூட இது போன்ற மூட நம்பிக்கைகளில் உழன்றவன்தான். ஆனால் கொஞ்ச நாளைக்குப் பின் பகுத்தறிவு என்ற ஒன்று இருக்கின்றது என்று தெரிந்து அந்தப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் இதைப் போன்ற முட்டாள்தனம் வேறு ஒன்றும் இல்லை என்று தெரிய வந்தது.

ஒன்றும் இல்லாததற்குச் சர்வ வல்லமையுள்ள கடவுள் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கடவுளினால் ஏதாவது பயனுள்ள ஒன்று செய்ய முடிந்ததா? அல்லது வேறு இடுக்கண்கள் வந்தபோது அவற்றை நீக்க முடிந்ததா? ஒரு சக்தியும் இல்லாதபொழுது இவ்வளவு பலமாக நம்பிக்கை வேர் ஊன்றியவர்களுக்கு அப்படி ஏதாவது ஒரு சக்தி இருந்தால் என்ன செய்வார்களோ? தெரியாது.

சுமார் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு என் கல்யாணத்தின்போது சடங்குகள் எதுவும் செய்ய ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டு எந்தச் சடங்கும் இல்லாமலேயே கல்யாணம் செய்துகொண்டேன்.

கல்யாணத்துக்கு முன்பு கங்கணம் என்று ஒரு மஞ்சள் கயிற்றைக் கையில் கட்டினார்கள். அதைக் கட்டியவர்கள் வீட்டை விட்டு வெளியே போய்க் குளிக்கக் கூடாது என்றார்கள். ஆனால் நான் தினசரி வெளியே போய்க் கிணற்றில் குளித்துக்கொண்டு வருவேன். ஒருநாள் மஞ்சள் கயிற்றை அவிழ்த்துக் கதவின் மேற்படியில் வைத்துவிட்டுக் கிணற்றுக்குப் போய்க் குளித்துவிட்டு வந்தேன். அதைப் பார்த்த கிழவர்களும், கிழவிகளும் என்ன என்னவோ பயமுறுத்தினார்கள். அவற்றில் ஒன்றேனும் நடக்கவில்லை. அந்தப் பயமுறுத்தல்களை எல்லாம் சொன்னால் மிக நேரமாகிவிடும். இந்த மூடப்பழக்க வழக்கங்கள் பெண்களாலேயே விருத்தியாகிக்கொண்டு வருகின்றன.

எனக்கு வயது 76 ஆகின்றது; பெரியாருக்கு வயது 91–க்கு மேல் ஆகின்றது. இருந்தாலும் பெண்கள் பேசுவதையோ, பாடுவதையோ கேட்கலாம் என்று ஆசையாக இருக்கிறது. எங்களுக்கே இப்படி இருக்கும்போது சிறு வயதினருக்கு எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. இது தவிர, சின்ன குழந்தைகளுக்கு என்ன சொல்லிக் கொடுக்கின்றோமோ அதை அவர்கள் ஆயுள் வரையிலும் மறக்க மாட்டார்கள். இதனால்தான் இந்த மூடப்பழக்க வழக்கங்கள் தலைமுறை தலைமுறையாக வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றன.

பெண்களினால்தான் ஆண்களும், அவர்களின் சொல் கேட்டுத் தவிர்க்க முடியாதபடி தவிக்கின்றார்கள். குழந்தைகளும், இந்தப் பெண்கள் சொல்வதைப் பார்த்துப் பழகிக்கொண்டு பெரியவர்கள் ஆன பிறகும்கூட அவைகளை விட மறுக்கின்றார்கள்.

சோதிடம் என்பது ஒன்றல்ல. ஜாதக சாத்திரம், ரேகை சாத்திரம், எண் சாத்திரம், பல்லி சொல்லும் சாத்திரம், சகுன சாத்திரம் என்று பல சாத்திரங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். இவை தவிர வேதாந்தம், தத்துவம், கம்பராமாயணம், பாரதம், திருவாய்மொழி, திருவெம்பாவை, பாகவதம், தணிகைப்புராணம், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய பல நூல்களை இயற்றி இருக்கின்றார்கள். இவைகளை இயற்றியவர்கள் எல்லாம் ஒரு விதத்தில் சாமர்த்தியசாலிகள்தாம். ஆனால் மூடப்பழக்க வழக்கங்களில் மூழ்கியவர்கள். இவைகளில் சொல்லப்பட்டுள்ளது உண்மையா? பொய்யா? என்று ஆராயாமல் நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறார்கள்.

சோதிடங்களில் ஒரு தேதியில் மரணம் வரும் என்று சொல்லுகிறார்கள். இறக்காமல் தப்பித்துவிட்டால், அது ஏதோ ஒரு கடவுளைக் கும்பிட்டதால் தப்பித்துக் கொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். எதிர்பாராத விதமாகத் திடீர் என்று செத்துப்போய்விட்டால், அவனுக்கு எழுதி வைத்த விதி அவ்வளவுதான் என்று சொல்லுகிறார்கள்.

இவர்கள் போய் விதியைப் படித்துப் பார்த்துவிட்டு வந்தவர்கள் போலவே சொல்லுகிறார்கள். எல்லா உயிர்களுக்கும் சாதகம் எழுதுகின்றவர்கள் பல கோடிக் கணக்காக இருக்கும் கொசு, எறும்பு, பூச்சிகளுக்கு என்ன சாதகம் எழுத முடியும்? அவ்விதம் எழுதினாலும் அவைகள் சோதிடத்தை நம்புவதில்லை. ஆனால் மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கும் முட்டாள்கள் நம்புகிறார்கள்.

பெருமதிப்பிற்குரிய பெரியார் அவர்கள் இவைகளைப் பற்றிப் பல ஆண்டுகளாகப் பல விதங்களில் சொல்லிக்கொண்டுதான் வருகிறார். ஆனால் மூடப்பழக்க வழக்கங்கள் குறைந்த பாடில்லை. இனி என்ன செய்யவேண்டுமென்றால், அரசாங்கமே ஒரு சட்டம் இயற்றித்தான் இவைகளை ஒழிக்கவேண்டும். வேறு எந்த வழியிலும் ஒழிக்கமுடியாது.

முன்பு காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது ஸ்ரீரங்கநாதரையும், வேங்கடேசப் பெருமாளையும், மயிலாப்பூர் சாமியையும், காந்தி, நேரு போன்ற தலைவர்களையும் கும்பிட்டுக்கொண்டு மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்தார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் கடவுள் இல்லை என்றும், கடவுளின் ஆபாசக் கதைகளையும், மூட நம்பிக்கைகளை எதிர்த்தும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களும் ஆட்சியில் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் மாறிப்போய் விட்டார்கள்.

மூட நம்பிக்கைகளை ஒழிக்க எந்தச் சட்டமும் கொண்டுவரவில்லை. அவர்களே பல நிகழ்ச்சிகளில் மூடநம்பிக்கைகளைப் புகுத்திக்கொண்டு வருகிறார்கள். இனி, மூடநம்பிக்கைகளை ஒழிக்க அவர்களையும் நம்பக்கூடாது. ராணுவம் அல்லது கம்யூனிசம் வரவேண்டும். வந்து, பெரியார் அவர்கள் சொல்லுகிறபடி, கோவில்களையும் மசூதிகளையும், சர்ச்சுகளையும் இடித்துத் தள்ளினால் தான் மூடநம்பிக்கைகளை ஒழிக்கமுடியும் என்று நம்புகிறேன்.

இந்த மூடநம்பிக்கைகளைப் பற்றித் தலைமுறை தலைமுறையாக அநேக ஆயிரம் ஆண்டுகளாகத் தொடங்கி வந்ததைச் சரியான உதாரணங்களோடு நாட்கணக்கிலும் வாரக்கணக்கிலும் என்னால் சொல்ல முடியும். பெரியார் அவர்களால் மாதக் கணக்கிலும், வருடக்கணக்கிலும் சொல்ல முடியும் என்று நம்புகிறேன்.

பெரியாருடைய சீடர்கள் என்று சொல்லக் கூடியவர்களே கோவிலுக்குப் போய்க் கடவுளை வாரத்திற்கு ஒரு தடவையாவது அல்லது மாதத்திற்கு ஒரு தடவையாவது கும்பிட்டுவிட்டு வருகிறார்கள். இதற்கு என்ன சொல்வது? 1940ஆம் ஆண்டிலேயே சோதிடத்தைப் படித்த கதையைச் சொல்லுவதானால் மிக நீண்ட நேரமாகும். சோதிடத்தில் எல்லோரையும் இல்லாவிட்டாலும் அநேகரையாவது சொல்லமுடியும்.

சோதிடத்துக்கும் மனித வாழ்க்கைக்கும் தொடர்பே கிடையாது என்று நிரூபிக்க முடியும். மூட நம்பிக்கை உள்ளவர்கள் இருப்பதால்தான் சோதிடம் உண்மை என்று நம்பிக்கொண்டு செத்துப் போகிறார்கள். இந்த விஷயங்களை நான் 1948ஆம் ஆண்டில் நடந்த அகில உலகத் தமிழர் மாநாட்டிலேயே சொல்லியுள்ளேன். பெரியார் அவர்கள் அவற்றை மொழிபெயர்த்துப் புத்தகமாக்கியிருக்கிறார்கள். இப்போது சொன்ன இதே கருத்துக்களை 25 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஊரில் இந்தப் பெரியார் தலைமையிலேயே நடந்த ஒரு கூட்டத்தில் மிக விளக்கமாகச் சொல்லியுள்ளேன். இங்கு இன்னும் அநேகம் பேர்கள் பேசவேண்டியிருப்பதால் நான் இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி; வணக்கம்.

★

*(சேலத்தில் நடைபெற்ற மூட-நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில்*
*- தொழில் விஞ்ஞானி திரு. ஜி.டி.நாயுடு)*

# எண்ணெய்ச் சூரியன்

உவமைக் கவிஞர் **சுரதா**

*பாரிதான் மனித மேகம்;*
*பறவைதான் உயிர்வி மானம்;*
*மாரிதான் முகிலின் வேர்வை*
*மௌனந்தான் உதட்டின் போர்வை;*
*ஏரிதான் வயலின் தாய்ப்பால்;*
*எரிகின்ற விளக்கே! எண்ணெய்ச்*
*சூரியன் நீதான்! தீயின்*
*தொடர்கதைச் சுருக்கம் நீதான்!*

*சித்திர விளக்கே! உன்றன்*
*தேகமோ, கன்னார் செய்த*
*பித்தளைப் பள்ளம்! உன்றன்*
*பெருமூச்சே புகையாம்! காதல்*
*நித்திரைக் கேற்ற வெள்ளை*
*நிலவினில் ஆணும் பெண்ணும்*
*ஒத்திகை பார்ப்பர், நீயோ*
*உன்னடி நிழலைப் பார்ப்பாய்!*

*எரிகின்றாய் அரும்பு போலே;*
*எனினும்நீ எரிவ தற்குத்*
*திரிவேண்டும்; எண்ணெய் வேண்டும்;*
*தீக்குச்சி வேண்டும் - பெண்ணின்*
*வரிவிரல் உதவி வேண்டும்!*
*மழைநீரோ, தென்றல் காற்றோ*
*ஒருகரம் உன்மேற் பட்டால்*
*உன்னுயிர் உடனே போகும்.*

*தாண்டுகோல் ஒருவன் பெற்றான்;*
*தலைக்கோலை ஒருத்தி பெற்றாள்;*
*தூண்டுகோல் அதைநீ பெற்றாய்;*
*துலாக்கோலை வணிகன் பெற்றான்;*
*ஈண்டெனைத் தொடாதே என்றால்*
*என்மகன் கேட்பான்; உன்றன்*
*வேண்டுகோ ளதனை அந்த*
*வீட்டில்தான் கேட்ப தில்லை!*

★

*(1965 - 'சுரதாவின் தேன்மழை' கவிதைத் தொகுப்பு)*



# சிறந்த சொற்பொழிவுகள்

தொகுப்பு: உவமைக்கவிஞர் சுரதா